பாலபாரதி

புத்தகம் ௩] கலியப்தம், ௫௦௨௬ [பகுதி ௪

4

தை.

1925

SL
211, N2488
N28·1·4
160201

129 The "BALA BHARATI," Sheramadevi, S. I. R.

தபால் எண்—ம. கக-ற/௦

வருஷச் சந்தா { உள் நாடு ரூ. ௩—௦
வெளிநாடு ரூ. ௪—அ }

புஸ்தகம் க. பகுதி எ.	தை, கலியப்தம் ௫௦௨௯.	தனிப்பிரதி அணா க௦.

ஆசிரியர்: வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

SILK PITAMBAR & Co.,
BENARES CITY

சிறந்த தமிழ் நூல்கள்!

பரதநாட்டின் நிலைமை

பொன்விளையும் பூமியெனவும், கற்பக நாடெனவும் புகழ்ப்பெற்று பலவகை ஏற்றமும் இயற்கை வளமும் வாய்ந்த நம் நாடு இக்காலத்திலே சீரும் சிறப்பு மற்று, பரிகாசத்துக்கிடமாய் விட்டது ஒருபுறமிருக்க, உலகனைத்திற்கும் உணவளித்த நம்மவர் புசிக்க வகையின்றியும் கூலிக்கு வேலையின்றியும் கூக்குர லிடும்படியான நிலைமை நேர்ந்திருக்கிறது. இத்தகைய இழி நிலைமைக்குக் காரணம் யாதென்பதற்குள்ள விவரங்களையும், இழி நிலையை நீக்கி, முன்போல் உயர் பதம் பெற்று ஒப்புயர்வற்று வாழ்வதற்கான வழிகளையும், இச்சிறு நூலிலே பரக்கக் காணலாம். ராஜீய விஷயத்தில் உயர் நிலைமை யெய்துமுன், செல்வ நிலையில் உயர்நிலை எய்த முனைய வேண்டும். ஆதலின் தேசச் செல்வ நிலையை நம் சிறுவரும் சிறுமியரும் ஜன சமூகத்தினரும் நன்குணர்ந்து தேசத்தொழிலைவிருத்திசெய்து, வியாபாரத்தைப் பெருக்கி செல்வச் சிறப்புற்று சுக வாழ்வு வாழ்வதற்கான காரியங்களில் முனைய வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கமாகும்.

விலை ரூ. க—0—0.

சிலப்பதிகாரக் கதை

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஐந்தினுள் ஒன்றாக விளங்கும் சிலப்பதிகாரம் என்னும் பழைய நூல் காவிரிப்பூம்பட்டினத்து வணிகராகிய கோவலன் அவன் மனைவி கண்ணகி என்னுமிவர்கள் சரித்திரத்தை விரித்துக் கூறும் அழகிய நூலாகும். அரசர் தமது நீதியில் சிறிது தவறினும் உயிர் வாழா ரென்பதையும், கற்புடைய மகளிரை மக்களே யன்றித் தேவரும் முனிவரும் கைதொழு தேத்துவ ரென்பதையும் முன்னர் செய்த இருவினையும் செய்த முறையே செய்தோனை நாடிவந்து பின்னர் உருக்கொண்டு நின்று நுகர்விக்கு மென்பதையும், யாவரு மறிந்துய்யக் கருதி, கதை கூறுமுகத்தானே, இம் மூன்று உண்மைகளும் சிலம்பு காரணமாகப் பெறப்படுதலின் இந் நூற்குச் சிலப்பதிகார மென்று பெயரிட்டனர். ந. பலராமய்யர் அவர்கள் எழுதியது.

விலை ரூ. க—0—0

மகாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

சுயராஜ்யம் என்பதை நன்கு விளக்கி ஆங்கிலமொழியில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரீகம் நாகரீகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் விஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போர் மனமயக்கம் நீங்கி, தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் உண்டாகும்.

விலை ரூ. 0—அ—0

மகாத்மா காந்தியின் சிறைச்சாலை அநுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமான தவச்சாலையாகக்கொண்டு அரும்பாடுபட்டும் உள்ளஞ் சலியாது சாத்வீக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்துவங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில் அவராலே கூறப்பட்டவாறு எழுதப்பெற்றது.

விலை ரூ. 0—;—0

கிடைக்குமிடம்:-

வ. நடேசு கம்பெனி

39, தம்பு செட்டித் தெரு, சென்னை.

T. B. T. MALAYS, FRENCH PERFUMERS

Kalakkadu Post, Tinnevelly Dist,

Hair Oil Essence! Cheap Price கூந்தல் தைல வாசனை!

இதனடியில் குறிப்பிட்டிருக்கும் வாசனைகளால் நீங்களே 16- அவுன்ஸ் அளவுள்ள நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், பாதாமி எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவைகளில் உயர்ந்த கூந்தல் தைலம் தயார் செய்துகொள்ளலாம். கடைகளில் விற்கப்படும் 2-அவுன்ஸ் புட்டிகளுக்கு ரு 1—0—0 கொடுத்து ஏமாற வேண்டாம்.

NAME				PRICE	NAME				PRICE
ரோஸ்	No. 1	½ oz	Rs.	1—12—0	கஸ்தூரி		½ oz	Rs.	2— 0—0
,,	,, 2	,,	,,	1— 4—0	ஓடி.ஓ		,,	,,	1— 4—0
மல்லிகைப்பூ	,, 1	,,	,,	1—12—0	தாமரைப்பூ		,,	,,	1— 4—0
வெட்டி வேர்		,,	,,	1—12—0	தாழம்பூ		,,	,,	1— 0—0
மனோரஞ்சிதம்		,,	,,	2— 0—0	மகிழம்பூ	No. 1	,,	,,	2— 8—0
சந்தனம்		,,	,,	1— 4—0	,,	,, 2	,,	,,	1—12—0
ஷிவிடி ரோஸ்		,,	,,	1— 8—0	குங்குமப்பூ		,,	,,	1— 0—0
மைபர்		,,	,,	2— 0—0	காங்கி		,,	,,	1— 8—0
அம்பர்		,,	,,	2— 4—0	செண்பகப்பூ		,,	,,	2— 8—0
கருவைப்பூ		,,	,,	1— 4—0	ஜேரோனி		,,	,,	2— 0—0
பிச்சிப்பூ		,,	,,	1— 0—0	ஜடியல்		,,	,,	1—1—0

முக்கிய கவனிப்பு:—எங்களுடைய வாசனைகளில் ஒரே தடவையில் 6-புட்டிகள் வாங்குவோருக்கு, ஒரு தங்கப் பவுண்டன் பேனாவும், தைலத்திற்குச் சேர்க்கக் கூடிய கலரும் இனாமாக அனுப்பப்படும். தபால்கூலி வேறு.

ஓம்

பாலபாரதி

புத்தகம் க | தை, கலியப்தம் ருOஉரு. | பகுதி ச

எந் தெய்வம்

———o———

(ஸ்ரீ சுத்தாநந்த பாரதியார் பாடியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1925
MADRAS

உடலெலாங் கோயிலெனா வலவுந் தெய்வம்
உயர்வுதாழ் வில்லாது வுதவு தெய்வம்
கடல்புவியுங் காற்றுசுட ராளித்த தெய்வம்
கண்மனமு மெங்கிலுமே காணுந் தெய்வம்
இடமகலும் பூவினுக்கா யெம்மை யாக்கி
எங்கள்வினை யாகிடனு மேய்ந்த தெய்வம்
திடமுடனெந் துணையான சக்தி தெய்வச்
சேவடியி னிழலிலே சேர்ந்தோம் யாமே.

* * *

கொலைகளவு காமாதி குற்றந் தோய்ந்த
கொடியர்மனந் திருந்துமவர் வருந்தச் சென்மம்
பலவுருவிப் பந்தமதை விலக்கிப் பார்கள்
பலவீந்து வொளிபரப்பும் பகவ னாக்
அலவிறந்த படைப்பணிகள் அங்கை தன்னி
னடையாளங் காட்டுவபோ லனைத்து மாக்கி
யுலகெங்கள் பிணியுறுமோ வுற்றுங் காலை
யுடலோடு முய்விக்கு முயர்ந்த தெய்வம்.

(பக்கம் ௩

160201
600 008
72
211, N2488
N25.1.4

ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேசகுமார சர்மா மொழிபெயர்த்தது)

நான்காம் அத்தியாயம்

கபட நாடகம்

பிரமீலை கச்சேரிக் கூடத்திலிருந்து புறப்பட்டுச் சென்றபிறகு விசாகாநந்தன் வெகுநேரம் வரையில் சிந்தையில் ஆழ்ந்தவனாய் எப்பொழுது சூரியன் அஸ்தமித்து இரவு வரப்போகிறதென்று மிக்க ஆதுரத்துடன் நிலைகொள்ளாமல் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். இராஜமாதாவின் நிருபத்தையும் மிருகேந்திரனிடம் பழி தீர்த்துக் கொள்வதையும் தவிர்த்து வேறு எண்ணம் ஒன்றும் அவன் மூளையில் உண்டாயிருக்கவில்லை. அப்பொழுது இன்னும் நண்பகலாகவில்லையாயினும், மாலை நேரமாய்விட்டதாக அவனுக்குத் தோற்றியது. வேலைக்காரரும் வேலைக்காரிகளும் இன்னும் ஏன் விளக்கேற்றவில்லையென்று அவனுக்கு வியப்பாயிருந்தது. இரவு வந்துவிட்டது, இருள் வளர்ந்து வருகிறது, என்று பாவிக்கலாயினன். அவனது பாவனையில் சிறிது உண்மையும் இருந்தது. அவனது அந்தக்காணத்தின் இருவினைகளைப் பகுத்தறியும் விவேகவொளி சம்சயக்காற்றின் மோதுதலினால் அவிந்து போய்விட்டமையால், அவனது இருதயத்தில் அந்தகாரம் பரவியிருந்தது. இல்லாவிட்டால் இத்துணை இருண்ட எண்ணங்கள் அவன் மூளையில் உண்டாயிரா. பக்கத்தில் போய்க்கொண்டிருந்த ஒரு வேலைக்காரனை அவன் அழைத்து, "இன்னும் ஏன் விளக்கேற்றவில்லை?" என்று கோபத்துடன் கேட்டான். வேலைக்காரனுக்கு இந்தக்கேள்வி புதுமையாய்த் தோற்றியது. அவன் சகஜமாய்ப் பதிலுரைத்தான் — "நடுப்பகல் கூட ஆகவில்லையே. ஏற்கனவே போஜனமாய்விட்டதே."

"என்ன சொன்னை, நள்ளிரவாய்விட்டதா? போஜன சமயம் ஆய்விட்டதா? அப்படியிருந்தும் நீ என்னை இருட்டிலேயே இதுவரையில் கிடக்கும்படி விட்டுவைத்திருக்கையோ? சுயம்பாகி பிராமணனிடம் எனக்குப் பசியில்லையென்று சொல்லிவிட்டு, சீக்கிரம் வந்து இங்கே விளக்குப் போடு."

வேலைக்காரன் இன்னும் தியங்கினான். அவன் மீண்டும், "இன்னும் நடுப்பகல்கூட ஆகவில்லை, தாங்கள் இன்னும் மத்தியானபோஜனம் பண்ணவில்லையே," என்று எடுத்துக்காட்டவே, அப்பொழுது எப்படியோ மந்திரியாருக்குச் சுயநினைவு வந்தது. விரைவில் போஜனத்தை முடித்துக்கொண்டு அவன் அரமனையை நோக்கிச் சென்றான்.

நேற்று அரமனைப்படிகளின் மேல் ஏறிச்செல்லும்போது விசாகாநந்தனது எண்ணங்கள் மிருகேந்திரமன்னனது நலத்தை நாடி நின்றன. இன்றோ, எவ்விதத்தில் மிருகேந்திரனை மாய்க்கலாம் என்ற எண்ணத்தைத்தவிர அவன் மூளையில் வேறொன்றும் இடம்பெறவில்லை. நேற்று இராஜபக்தியினால் அவன் உள்ளம் பூரித்தது. இன்றோ அவனை இராஜத்துரோகப் பேய் பிடித்தாட்டுகிறது. இனி நாளைக்கோ? நாளை நடக்கப்போவதோ மகா பயங்கரமான கொடுஞ்செயல்! விசாகாநந்தன் சாதாரணமாய் நூறு வருஷங்களுக்கப்பால் நடக்கவேண்டியவைகளைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பவன். ஆனல்

நாளையதினம் நடக்கவிருப்பதை, இவ்வளவு கலக்கமும் நடுக்கமும் உண்டாயிருந்துங்கூட, தன் ஞானக் கண்ணைக்கொண்டு நிதானித்தறிய அவனால் முடியவில்லை. அவனது பாவிக் கண்கள் நாளைய நிகழ்ச்சியைக் காணத் துணிவுகொள்ளவில்லை. ஆனால் நாளைய நிகழ்ச்சியும் நாளைய நிலைமையுமே மந்திரியின் மனோபீஷ்டமாயிருந்தன. அதன்பொருட்டே அவன் இன்று வரை கைக்கொண்டிருந்த பிராமாணிகத்தன்மை, வாய்மை, இராஜநிஷ்டை, நீதிபுடைமை என்னும் சிறந்த நலன்களைக் கொல்லத் தீர்மானித்துவிட்டான். அரசனது அவைக்களத்துக்கு வந்த பிறகு, மிருகேந்திரன் அரியணையில் அமர்ந்திருப்பதைக் கண்டு, நாளை நிகழப்போவதை நினைந்து விஷமமாய்ச் சிரித்தான் விசாகாநந்தன். உள்ளூற இஷ்டமில்லாவிடினும், நெடுநாளைய பழக்கத்தினால் அவன் கைகளும் தலையும் முறையே அரசனுக்கு அஞ்சலியும் வணக்கமும் ஆற்றின. தன் ஆசனத்தை இகழ்ந்து நோக்கி அதில் அமர்ந்தான் பிரதான மந்திரி.

தான் சொல்லப்போகும் செய்தி மந்திரிக்கு மகிழ்ச்சியைத் தரும் என்னும் நோக்கத்துடன் மிருகேந்திரமன்னன்மொழிபகர்ந்தான்—"மந்திரியாரே, தங்கள் யோசனையின்படியே தேவி இந்துமதியையும் அரசிளங்குமரி பிரணயினியையும் மாறுவேஷங்கொள்ளச் செய்து இந்திரபுரத்துக்குப்புறமே அனுப்பிவிட்டேன். அசோகனது சைனியம் சுகமாய்க் கூறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது. அதனால் அவர்கள் யாதோர் இடையூறுமின்றி க்ஷேமமாய்ப் படைவீட்டைத் தாண்டிப் போய்விட்டார்கள்."

மந்திரி இறும்பூதடைந்து இயம்பினான்— "இறுதியில் தேவியையும் கோமகளையும் இங்கிருந்து கடத்தியே விட்டீர்களாக்கும்!"

"ஆமாம், அவர்கள் வெகு நேரத்துக்கு முன்னமே போய்விட்டார்கள். இது விஷயத்தில் தங்களுக்கு இவ்வளவு வியப்பு உண்டாகக்காரணமென்ன? தாங்கள்தானே எனக்கு இந்தயோசனை கூறியது?"

"உண்மையே. ஆனால் அதன்படி மகாராஜா நடத்த மாட்டார்களென்று நான் எண்ணியிருந்தேன்."

"அவர்களை எங்கும் அனுப்ப வேண்டாமென்றே முதலில் எண்ணினேன்; ஆனால் தேவியுடன் நான் சகல செய்திகளையும் சொல்லியபோது, அவளும் தங்கள் அபிப்பிராயத்தையே ஒப்பி வற்புறுத்தினமையால், அவர்களைப் புறப்பட்டுப்போகும்படி கட்டளையிட்டேன்."

"அவர்களை அனுப்பாதிருந்தாலும் பாதகம் இல்லை."

"அப்படியானால், ஏதோ பெருத்த ஆபத்து சம்பவிக்குமென்று தங்களுக்கு அநுமானமில்லையா?"

"முதலில் அப்படித்தான் எண்ணினேன். ஆனால், பின்னும் யோசித்தபொழுது, முந்திய அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று."

"அசோக பூபதி சந்தி செய்துகொள்வதாயிருக்கிறான் என்பதில் உண்மை ஏதாவது இருக்குமென்று தங்களுக்குத் தோற்றுகிறதா?"

"பெரும, இச் செய்தி உண்மையானதே. இந்த யுத்தத்தை உடனே நிறுத்திவிட வேண்டுமென்று அசோக பூபதி கட்டளை பிறப்பித்திருக்கிறான். அவன் நாளையே மகாராஜாவுடன் கலந்து ஆலோசிக்க வரவிருக்கிறான்."

"இந்தச் செய்தி உண்மைதானா? இதில் தங்களுக்கு முழு நம்பிக்கை உண்டாகிறதா?"

"ஆகா, இந்தச்செய்தி உண்மையே. இதில் எனக்குப் பூர்ண விசுவாசமுண்டு. மேலும் மகாராஜா முதலில் சொல்லியபடி தேவரீருடைய சேனைக்கு இரவும் பகலும் ஒருங்கே உல்லாசமாய்க் களித்திருக்க அநுமதி யளிக்கவேண்டுமென்பதையும் நான் அங்கீகரிக்கிறேன்."

மிருகேந்திர மகிபதி விசாகாநந்தன் பக்கல் கர்வத்துடன் நோக்கி, "கடைசியாகத் தாங்கள் என் அபிப்பிராயத்தையே ஒப்பவேண்டியதாயிற்று," என்று சொல்லிவிட்டு, "யுத்தத்துக்காக மறுபடியும் பேரிகை முழக்குகிறவரையில் சகல சைநிகர்களும் தம் இஷ்டப்படி தாராளமாய்க் களியாட்டயரலாமென்று எல்லோருக்கும் விளம்பரப்படுத்துக," என்று அதே சமயத்தில் கட்டளையிட்டான்.

பிரதான மந்திரி விசாகாநந்தனுடைய ஒளியற்ற கண்களில் திடீரென சிறப்பாகிய ஒரு காந்தி ஒளியிடலாயிற்று. அந்தச் சமயத்தில் அவனை மிருகேந்திர மன்னனைப்போன்ற வீர புருஷன் பார்த்தால், அவன்கூடப் பீதியடைவான்.

மெல்ல மெல்ல, ஆயிரங் கதிர்ச் செல்வனாகிய ஆதித்தமூர்த்தி உலகனைத்துக்கும் தனது நடுவு நிலைமையை மெய்ப்பிக்க வேண்டி மற்றைய கோளார்த்தத்திலும் ஒளி பரப்பும்பொருட்டு மேற்றிசைக் கடலில் ஆழ்ந்தான். கருமசாக்ஷியாகிய கதிரவன் இப்பொழுது அத்தமித்துவிட்டான்; அவனுடைய பிரதிநிதியாகிய தண்கதிர்த் திங்களும் சுகமாக நிலவைப் பொழிந்துகொண்டிருக்கிறது; ஆகையால் இப்போது தன் மனம் போனபடியெல்லாம் செய்வதற்கு வேண்டிய சமயம் வாய்க்கும்—என்றறிந்து கரிய இருளும் அவனி தலத்தில் அடியெடுத்து வைத்தது. காமம், குரோதம் முதலிய தன் தோழர் அறுவரையும் உடன் அழைத்து வந்தது. அரசர்க்கரசாகிய அந்தகாரத்தின் பெருமையை வீக்கும் பொருட்டு, காமம் நிலையற்ற மனத்தினராகிய ஆடவரையும் பெண்டிரையும் கொண்டு அநேகமான தீமைகளைப் புரிவிக்கும் காரியத்தைப் பூர்ணமாய் நிறைவேற்றியது. குரோதம் பயங்கரமாகிய உருவந் தாங்கி எத்தனையோ கொலை பாதகங்களைச் செய்துதீர்த்தது. உலோபமானது நம்பிக்கைத் துரோகமும் களவும் செய்யத் தொடங்கியது. மோகமும் மதமும் அழகிய வெளித்தோற்றங்களைத் தாங்கி எத்தனையோ ஜனங்களின் கழுத்துகளைத் திருகின. மாற்சரியமோ தான் விடும் விஷமயமான மூச்சுக் காற்றுகளினால் அளவற்ற மக்களுக்குப் பிராணபத்தை விளைத்தது. இவ்வாறு மக்களின் அறுபகைகளும் தத்தம் திறத்தைக்காட்டி அந்தகாரத்தின் ஆற்றலைப் பெருகச் செய்துகொண்டிருக்கும் சமயத்தில் அவரவர் மனைகளைவிட்டுப் புறஞ் செல்வது ஏற்றதன்று. ஆயினும் அந்தகாரம் தனியரசு வீற்றிருக்கும் அக் காலத்திலும் நள்ளிரவில் மிருகேந்திர மன்னன் தன் அரண்மனையை விட்டு வெளியே செல்லும்படி நேர்ந்தது. அவன் ஒரு சேவகனைத் தன்னுடன் இட்டுக்கொண்டு குதிரையை முடுக்கி, விசாகாநந்தன் மாளிகையின் தென்புற வாயிலண்டை வந்துநின்றான். அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு கதவண்டை நின்றிருந்த குமுதம் அரசனை விசாகாநந்தனது கச்சேரிக் கூடத்துக்குள் அழைத்துச் சென்றாள். ஏற்கெனவே செய்துகொள்ளப்பட்ட சங்கேதத்தின்படி, மந்திரி தன் நேத்திரங்களையும் உபநேத்திரங்களையும் தூசி போக்கித் துலக்கிக்கொண்டு படிக்கட்டு நிலையின் பலகணியிலிருந்து எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான். மிருகேந்திரனைக் கண்டுவிட்டதும், அவனுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டது. கச்சேரிக்கூடத்தில் நுழைகையில் மிருகேந்திரன் குமுதத்தைச் சகஜமாய்க்கேட்டான்- "பிரமீலை எங்கே இருக்கிறாள்? மந்திரியார் படுக்கப்போய்விட்டாரா?" என்று.

சந்தேகப் பிரகிருதியான விசாகாநந்தன்--"பிரமீலையை நினைத்துக்கொண்டே வந்திருக்கிறான்,

ஆகையினாலேயே நான் படுக்கப் போய்விட்டேனா இல்லையா என்று மிகவும் சாவதானமாய் விசாரிக்கிறான்," என்று அநுமானிக்கலாயினான்.

கச்சேரிக்கூடத்தின் வடது பாரிசத்தில் பிரமீலை உட்கார்ந்திருந்தாள். அவள் அப்படிச் செய்ததற்கு ஒரு விசேஷ காரணமுண்டு. தனக்கும் மிருகேந்திரனுக்கும் நடக்கும் சம்பாஷணையில் ஓர் அக்ஷரங்கூட விசாகாநந்தன் காதில் விழக்கூடாதென்பது அவள் கருத்து. ஒரு வார்த்தையாவது மந்திரிக்குக் கேட்டுவிட்டாலும், தான் கஷ்டப்பட்டுக் கட்டிய கட்டடம் அவ்வளவும் இடிந்து விழுந்துபோமென்றும், இரகசியம் வெளிப்பட்டுவிடுமென்றும் அவள் பெரிதும் அஞ்சினாள். ஆகையினாலேயே அவள் மிருகேந்திரனுடன் தான் இருந்து சம்பாஷிக்கும் ஸ்தானம் மந்திரி இருக்கும் இடத்தினின்று போதுமான தூரத்தில் இருக்கும்படி முன் ஏற்பாடு செய்திருந்தாள்.

மிருகேந்திரன் வந்தவுடனே நேராகப் பிரமீலையின் பக்கத்திற் போய் உட்கார்ந்தான்.

விசாகாநந்தனின் சம்சயங்கொண்ட கண்களுக்கு, மிருகேந்திரன் காமாதுரத்தினாலேயே பிரமீலையைப் பாப இச்சையுடன் நெருங்கிக் கூடாவொழுக்கத்தில் தலைப்படுகிறானெனத் தோற்றியது.

மிருகேந்திரன் கிட்ட வரும்போதே அவனை வரவேற்று உபசரிக்கும் பொருட்டுப் பிரமீலை எழுந்து நிற்கலானாள்.

அதைக் கண்டு விசாகாநந்தன், மன்னனது முறை தவறிய செய்கையிலிருந்து தப்பும் பொருட்டே தன் பதிவிரதையாகிய பத்தினி அவ்விடத்தினின்று எழுந்து போகிறாளென்று நினைத்துக்கொண்டான். அப்பொழுது மிருகேந்திரன்—"பிரமீலா, நான் அந்நியனல்லவே; என் மகளே எனக்குஇவ்விதமாய் உபசாரம் செய்வது எனக்கு இஷ்டமில்லை. நல்லது உட்கார்ந்துகொள்," என்று சொல்லி, அவளைக் கையைப் பற்றிக்கொண்டு கீழே உட்காரச் செய்தான்.

மிருகேந்திரன் பாபசிந்தையுடன் தன் பிரமீலையின் கையைப் பிடிக்கிறானென்று விசாகாநந்தன் நம்பித் தனக்குள் "பரஸ்திரீயின் கரஸ்பரிசம்—" என்று தொடங்கி முடிப்பதற்குள், பிரமீலை முகத்தில் துக்கத்தைத் தோற்றுவித்துக்கொண்டு அரசனிடத்திலிருந்து சிறிது தூரம் விலகி உட்கார்ந்தாள். தந்தைக்குள்ள அன்புடன் அவளைத் தன்பக்கல் ஈர்த்து மிருகேந்திரன் மொழிந்தான்—"குழந்தாய், நீ என் இவ்வளவு கோவித்துக் கொள்ளுகிறாய்?"

விசாகாநந்தன் கண்ணிமையாமல் மிருகேந்திரனையே நோக்கியவண்ணமா யிருந்தான். சீற்றங்கொண்டு தனக்குள்ளாகவே—"என்ன அக்கிரமம்! எவ்வளவு காமக்கொழுப்பு!" என்று சொல்லிக்கொண்டான்.

அரசனுடைய வார்த்தையைக் கேட்டு பிரமீலை இன்னும் பிணங்கலாயினாள். விசாகாநந்தனுக்குத் தன் பத்தினியின் கற்பில் பூர்ண விசுவாசம் உண்டாய்விட்டது. அதனால் உண்டான பூரிப்பை அடக்க அவனாலாகவில்லை.

மிருகேந்திரன் ஒரு கையால் பிரமீலையின் கண்ணீரைத் துடைத்து, மற்றக் கையை அவள் தோள்மீது சார்த்தி—"பிரமீலா, உன் துயரத்துக்குக் காரணமென்ன, சொல்வாய்," என்றான்.

விசாகாநந்தனுடைய சம்சயங்கொண்ட கண்களுக்கு மிருகேந்திரனுடைய புத்திரி வாற்சரியம் பாதகம் நிரம்பிய கூடாவொழுக்கமாகத் தோற்றியது. "மிருகேந்திரன் அவளது காதலை

இரந்து நிற்கிறான்," என்று அவன் கருதலாயினன்.

பிரமீலை நெட்டுயிர்த்து மெல்லமெல்ல மொழியலுற்றாள்—"அப்பா, தங்கள் உத்திரவை மதியாமல் நான் இந்தக்கலியாணம் செய்து கொண்டு என்னபாக்கியம் வாரிக்கொண்டேன்! ஆபத்தைத் தான் விலைக்குவாங்கினேன்! பெருங்கஷ்டம் என் தலையில் வந்து விடிந்திருக்கிறது."

விசாகாநந்தன் நினைத்தான்—"மிருகேந்திரன் பலாத்காரம் செய்வதனால் பிரமீலைக்குப் பெருந்துயரம் உண்டாயிருக்கிறது. அதிலிருந்து அவளுக்கு அதிக கஷ்டம் தோன்றியிருக்கிறது."

மிருகேந்திர மன்னன் பிரமீலையைக் கேட்டான்—"உனக்குற்ற கஷ்டமென்ன? யார் உன்னைத் துன்பப்படுத்துகிறது?"

பிரமீலை போலியாகிய துக்கம் பாராட்டி—"வேறு யார் உபத்திரவம் பண்ணினாலும், நான் பொறுத்துக்கொள்வேன். கடுமையினும் கடியதும், கொடுமையினும் கொடியதும், குரூரத்தினும் குரூரமுமான வசைகளையும் கேட்டு நான் வாளாவிருப்பேன்; ஆனால், மகாராஜா, இத்தகைய சொல்லை, இத்தகைய பழியைக் கேட்பதைக்காட்டிலும், உலகபந்தத்தை யெல்லாம் உதறித்தள்ளிவிட்டு, தலையை மொட்டையடித்துக்கொண்டு துறவுகொள்ளலாமென்று தோற்றுகிறது," என்றாள்.

தன் தர்மபத்தினி துக்கத்தில் முகம் வாடி, பயத்தினால் நடுக்குறுவதையும், அவளை மிருகேந்திரன் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையும் கண்டு விசாகாநந்தன் தனக்குள், "இவளல்லவோ உத்தமி! பதிவிரதை! மிருகேந்திரா, பதிவிரதையை அலைக் கழிப்பதன் பயனை நீ விரைவிலேயே அநுபவிப்பாய்," என்று சொல்லிக் கொண்டான்.

மிருகேந்திரன் மொழியலுற்றான்—"உன்னை நான் மிக்க தைரியசாலியென்று நினைத்திருந்தேன். கலியாணத்துக்குமுன் நீ எவ்வளவு ஓங்கிய ஆகாயக்கோட்டையெல்லாம் கட்டினை? இவ்வளவு சொற்ப காலத்துக்குள்ளாகவே உனக்கு வீடு வாசல்களில் மனஞ் சலித்துப்போய் விட்டதா?"

"சலித்துப் போகாமல் வேறென்ன வைத்திருக்கிறது? என் கற்போ கடைத்தெருவுப் பண்டமாகக் கருதப்படலாயிற்று. என் ஒழுக்கத்தில் இழுக்குரைக்கவகை தேடப்படுகிறது. என்மேல் இழிந்த பழியும் சுமத்தப்படுகிறது," என்று கூறிப் பிரமீலை கதறிக் கரையலாயினள்.

பிரமீலை கண்ணீர் சொரிவதைக் கண்டு மிருகேந்திரன் துயரமும் வருத்தமும் அடைந்து மனமிளகி அவளது மோவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு ஆதரத்துடன் கூறினான்—"உன் பேரிலா பழிசுமத்துவதும் களங்கம் ஆரோபிப்பதும்! யார் இப்படி வீண் அவதூறு செய்வது?"

அமைச்சன் விசாகாநந்தனது விழிகளில் பிரமீலை இன்று விஷம் தீற்றியிருந்தமையால், அவனது நெஞ்சகத்தில் சம்சயமென்னும் பேய் புகுந்து விட்டது. மிருகேந்திரனோ தந்தையெனும் முறையில் அன்பின் வயப்பட்டு, தயையால் இளகிய உள்ளத்தனாய்ப் பிரமீலையின் மோவாய்க்கட்டையைப் பற்றிக்கொண்டிருந்தான். ஆனால் விசாகாநந்தனுடைய சந்தேகமுற்ற மனதில் அச் செய்கை எவ்வளவு தீபதும் விபரீதமுமாகிய எண்ணத்தை விளைவித்தது! மிருகேந்திரன் ஒழுக்கந் தவறி இழிந்த எண்ணத்துடன் பாப கருமம் செய்வதற்கே முனைந்திருக்கிறானென்று பிரதான மந்திரி கருதினான். அதுபற்றி விசாகாநந்தனது தேகம் கோபாவேசத்தால் துடித்தது; கண்கள் கொழுந்துவிட்டெரியும் தீயெனச் சிவந்தது; அவன் விழிகளிலிருந்து

நெருப்பு மழைதான் மிருகேந்திரன்மேல் பொழிகின்றதோ எனத் தோற்றியது.

பிரமீலை சகிக்கமுடியாத துயரத்தினால் தவிப்பவள்போல் பாவனை காட்டிப் பேசலுற்றாள்: "ஆகவே எல்லாவற்றையும் தங்களிடத்தில் சொல்லியே தீரவேண்டும்—சொல்லாவிட்டால், வேறு வழியுமில்லை. இருந்தால், என் உயிர் நீங்குமளவும் இந்த நீசமான நிந்தைச் செய்தியை ஒருவருக்கும் உரையேன், உள்ளுக்குள்ளேயே அடக்கி அடக்கித் துயரத் தீயினால் வெந்து வெந்து விரைவிலேயே இந்த யாதனையிலிருந்து விடுதலை அடைந்திருப்பேன். மகாராஜா அந்தச் சொல்லை, அந்தத் தீய களங்காரோபத்தைத் தங்களிடம் நான் எப்படி உரைப்பேன்! அப்படி உரையாவிட்டாலோ, சுகமாயும் அமைதியாயும் ஒருகாலும் என் நெஞ்சு வேகாது. ஆகவே, அந்தப் பழிச் சொல்லைத் தங்களிடம் சொல்லிவிட்டு அதன் பிறகு வீடு வாசல்களைத் துறந்து ஆண்டிச்சியாய்விடுவதென்று தீர்மானித்திருக்கிறேன்."

இதைக் கேட்டு அரசனுக்கு அநுதாபத்தால் தொண்டை அடைத்துக்கொண்டது. அவன் மிக்க பரிவுடன் அவளைப் புல்லி—"குழந்தாய், உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா! இப்படிப்பட்ட அமங்கலமான வார்த்தைகள் உன் வாயிலிருந்து வரலாமா? உன்மேல் சுமத்தப்பட்ட பழி என்ன, அப்படிச் சுமத்தினது யார்? இதைமாத்திரம் எனக்குச் சொல்லிவிடு," என்றான்.

"தங்களுடைய மந்திரியே — எத்தனையோ வருஷ காலத்து உலகாநுபவமுடைய விசாகாநந்தனரே! அவர் என் பதியாயிருந்தும் என்னை அவிசாரி யென்று தூற்றுவதுதான் எனக்கு அத்தியந்த மாகிய துக்கத்தை உண்டாக்குகிறது," என்று சோகத்தினால் விரைந்து விக்கிக்கொண்டே கூறினாள் பிரமீலை.

"என்ன கொடுமை! என்னுடைய ஆதரவில் இருந்து தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்ட செல்வப்பெண்மணியைப் பழிக்கும்படியான சாகசம் மந்திரிக்கு எப்படி உண்டாயிற்று?"

"இன்னும் வெட்கக்கேடான ஒரு செய்தியையும் கேளுங்கள், இந்த நீசமான பழியைச் சுமத்துவதில் என்னோடு தங்களையும் இழுத்திருக்கிறார் அந்த மகாநுபாவன்! தங்களை என் இழிந்த தீச்செயலுக்குத் துணையாயிருப்பவனென்றும் தூற்றுகிறார்."

இப்பொழுது பிரமீலையின் — கபடத்தில் தேர்ந்த பிரமீலையின் — துக்கத்துக்கு எல்லையே இல்லையெனத் தோற்றியது.

"எவ்வளவு நீசமான, கடியத்தக்க, நிந்தை! மந்திரியாரே, இந்தப் பழியைச் சுமத்தும்போது நீர் அவசியம் பிரஞ்ஞை தப்பியிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், மிருகேந்திரனுடைய ஒழுக்க விஷயமாய் ஒரு வார்த்தையாவது உம்முடைய வாயிலிருந்து வெளிப்பட்டிராது. என் சொந்த மகளாகிய பிரணயினியைப் போலவே என்னால் நேசிக்கப்படுகிறவளும், தன் மரித்துப்போன தந்தையின் நினைவுகூட உண்டாகாமலிருக்கும்படி என்னால் ஆதரிக்கப்பட்டவளுமாகிய அந்தப் பெண்மணியின் சம்பந்தமாய் என் மேலா பாவச் செயலின் களங்கம்! இத்தகைய வார்த்தை உம்முடைய வாயினின்று வெளிப்படும் சமயத்தில் உம்முடைய மூளையை நீர் உபயோகிக்கவில்லைபோலும், அதற்கு மாறாகக் களிமண் கட்டியின் உதவியையே கொண்டீர் போலும்! பிரமீலா, நீ தக்க சமயத்தில் என்னை

எச்சரித்தாய். மந்திரியார் மனத்தில் தோன்றியுள்ள சந்தேகத்தை விரைவிலேயே அகற்றுதல் வேண்டும்."

பிரமீலே மிகுந்த மன நெகிழ்ச்சியுடன்—"அப்பா, நான் இந்தக் களங்கத்திலிருந்து விடுதலை யடைவேனே? அவர் உள்ளத்தில் உண்டாயிருக்கும் ஐயுறவு அகலுமா?

மிருகேந்திரன் பிரமீலையைத் தன் மார்போடணைத்து, தந்தைக் கியல்பாகிய அன்புடன் தழுவி மொழியலானன்—"குழந்தாய், அழாதே, யுத்தத்தில் இனி நமக்கு வேலை இல்லை. இனி மந்திரியாரின் மனத்தில் இந்தச் சந்தேகத்தை யார் உண்டாக்கிய தென்பதை விசாரித்து உன் மாசற்ற தன்மையை மந்திரியாரின் எதிரில் விரைவிலேயே ரெய்ப்பிப்பேன்."

"இப்பொழுது என் காரியம் ஆகிவிட்டது," என்று பிரமீலை தனக்குள் சொல்லிக்கொண்டாள். அப்பொழுது உள்ளுக்குள்ளே அவளுக்குக் களிப்பாயிருந்தும், மேலுக்கு துக்கபாவனை காட்டி நெட்டுயிர்த்து, மிருகேந்திர மன்னன் முகத்தை நோக்கிய வண்ணமாய் நின்றிருந்தாள்.

நெடுநேரம் வரையில் இவ்வாறே நிகழ்ந்து வந்தால் ஆலிங்கனமும் சம்பவிக்கு மென்று மந்திரி ஏற்கெனவே நினைத்தான். அப்படியே நிகழ்ந்ததையும் தன் கண்ணுரக் கண்டான். சம்சயமுற்ற அவன் கண்களுக்கு இதனிலும் அதிகமாய்ப் பார்க்கவேண்டுவது என்ன எஞ்சியிருந்தது?

அன்று காலையில் பிரமீலே எந்தச் சுருங்கையில் வெடிமருந்து நிரப்பியிருந்தாளோ அது உத்தேசிக்கப்பட்டபடியே முறைப்படி வெடி தீர்ந்தது! பிரமீலையால் விசாகாநந்தன் காதில் திணித்திடப்பட்ட நஞ்சு தன் காரியத்தை நன்கு நிறைவேற்றியது. பிரமீலையை மிருகேந்திரன் தழுவியதைக் கண்டவுடனே மந்திரிக்கு வரம்பு கடந்த கோபம் மூண்டது. அதைப் பொறுத்துக் கொள்ள அவனால் முடியவில்லை. கோபாவேசத்தினல் 'ஹா' வென்று கூவி விசாகாநந்தன் செயலற்றுச் சாய்ந்தான்.

மந்திரிக்குப் பிரஞ்ஞை வந்தபொழுது, மிருகேந்திர மன்னன் அவ்விடத்தில் இல்லை. மந்திரி மஞ்சத்தில் படுத்திருக்க, பதிவிரதை யென்று அவன் எண்ணிய பிரமீலை பக்கத்தில் நின்று விசிறிக் கொண்டிருந்தாள்.

மந்திரி இங்குமங்கும் பார்த்து—"அந்த நராதமன் தொலைந்து போய்விட்டானே?" என்று கேட்க, "ஆம், என் நாதா," என்று விடை பகர்ந்தாள் பிரமீலை.

"பிரமீலா, உன்னைப்போன்ற பதிவிரதையின் வார்த்தையை நம்பாமற் போனேன்! உனக்கு வீணே கஷ்டம் கொடுத்தேனே!"

"இப்போது தங்களுக்கு நம்பிக்கை உண்டாய் விட்ட தல்லவா?" பிரமீலையின் பளிச்சிட்டு ஜொலிக்கும் முக மண்டலத்தைப் பார்த்துக் கொண்டே விசாகாநந்தன் விளம்பினன்—"பிரமீலா, உன்னைப் பரதேவதை யென்றே சொல்ல வேண்டும்! நீ சொன்னபிறகும் நம்பாதிருந்தேனே, நான் மகா பாபியல்லவா?"

"பிரியதமா!"

தான் வயோதிகனென்பதையும் தன்னுடைய காதற் சுவையெல்லாம் வற்றிப் போய் விட்டதென்பதையும் அந்தச் சமயம் அவன் கருதாதவனய்—"பிரமீலா, என் காதற்கிளியே, ஒரு சுரங்கத்தில் நெடுங்காலம் வெட்டி வெட்டிப் பரிசோதித்தும் எங்கோ ஒரு மூலையில் சிறந்ததாகிய ஓர் இரத்தினம் கிடைப்பது போலவே, இன்று வரை நான் எத்தனையோ விவாகம் பண்ணி, இறுதியில் உன்னைப்போன்ற வனிதா ரத்தினத்தை அடைந்தேன். நீ தான் என்னைக் காதல் நிறைந்த பெயரால் அழைக்கிறாய். நீயே என் உடலில் புத்துயிர் புகுத்துகிறாய்," என்று மெய் மறந்து மொழிந்தான்.

"நாதா, காதல் வார்த்தைகளைப் பேசுவதற்கு இது சமயமன்று. நமது காதலுக்கு இடையூறு விளைக்கும் இராருவை அழிப்பதற்கே இது சமயமாகும்."

மந்திரி சுய பிரஞ்ஞையோடு சொன்னன்—"ஒழுக்கம் தவறிய மிருகேந்திரன்மேல் பழி தீர்த்துக்கொள்ளவே இது சமயம். இராஜமாதா புத்திமதிதேவியின் நிருபத்தின்படி காரியம் நடத்துவதென்று நான் நிச்சயம் செய்து விட்டேன்."

"அப்படியானல் நகரத்துக்குள் வரும் அந்த இரகசிய வழிக்கும் பீரங்கி குண்டுகள் வைத்திருக்கும் ஆயுத சாலைக்குமுள்ள சாவியைக் கொடுத்து விடுங்களேன். ஸம்புஷ்டாசாரியரின் ஆட்கள் சங்கேதஸ்தானத்தில் வந்து தங்களிடம் இருந்து செய்தி பெற்றுப் போவதற்காகக் காத்திருப்பார்களல்லவா?" என்று தான் அறிந்திருப்பதாகத் தெரியக்கூடாத சங்கதிகளைக்கூட பிரமீலை அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்து விட்டாள்.

"இரகசிய வழியின் சாவியும் பீரங்கி குண்டு ஆயுதசாலையின் திறவுகோலுமா? பிரமீலா, நிருபத்தில் இந்தச் செய்திதான் எழுதியிருந்தது என்று உனக்கு எப்படித் தெரியும்?"

பிரமீலையின் பாடு ஒரு நொடிப்பொழுது திக்குமுக்கலாய்விட்டது. ஆனல் விரைவிலேயே அவள் சமாளித்துக்கொண்டு, வெட்கினவள் போல் பாவனைகாட்டிக் கூறலுற்றாள்—"பிரிய காந்தா, அந்தக் கொடும்பாவி மிருகேந்திரன்மேல் எப்பொழுது பழிதீர்த்துக்கொள்வோமென்கிற எண்ணமே என் உள்ளத்தை அலைத்துக்கொண்டிருப்பதால், நான் அந்த நிருபத்தைக் கள்ளத்தனமாய்த் தங்கள் அங்கிப் பையிலிருந்து எடுத்துப் படித்துப் பார்த்துவிட்டேன்."

அந்த நிருபம் புத்திதேவியால் பிரமீலையின் உதவியைக்கொண்டே எழுதப்பட்டதென்பதை அறிய, பாவம், விசாகாநந்தனுக்கு வழியில்லாமற் போய்விட்டது.

பிரமீலை அவசரத்தோடு அவசரமாய்—"கொடுங்கள், சாவிகளைச் சீக்கிரமாய்க் கொடுத்திடுங்கள். என்ன நீங்கள் செய்த பிரமாணத்தை மறந்து விட்டீர்களோ? தங்கள் பிரதிஞ்ஞைக்கு பங்கம் கருதவில்லையே! இப்பொழுது கிடைத்திருக்கும் அரிய தருணத்தைக் கைவிட்டு விடுவீர்களோ?" என்று சாமாரிமொழிந்தாள்.

பிரமீலையின் சொல்லம்புகள் மந்திரியின் உள்ளத்தை உருவின. விசாகானந்தனுக்கு இப்பொழுது தன் உள்ளத்தைத் தன் வசமாக வைத்துக் கொள்ளக் கூடாமற் போய் விட்டது. அவனுடைய உள்ளத்தை ஆளும் அதிகாரம் இப்பொழுது அந்நியாக் கிராந்தமாய் விட்டது. அவன் மனம் பிரமீலையின் ஆஞ்ஞைக்கு அடங்கி விட்டது. அவனல் ஒன்றும் பேச முடியவில்லை. முகத்தில் ஈ ஆடவில்லை. என்ன செய்வான் பாவம்! விதியில்லாமல் வேண்டா வெறுப்பாய் சட்டைப் பையிலிருந்து இரண்டு சாவிக் கொத்துக்களை எடுத்து, அவற்றைத் தன் நடுங்கும் கையினல் பிரமீலையினிடம் கொடுத்தான்.

பிரமீலை அடங்கா மகிழ்ச்சியுடன் சாவிக் கொத்துக்களைத் தன் பதியின் கையிலிருந்து பெற்றுக்

கொண்டுபோய்க் கூத்தாடிக்கொண்டே ஓடி மறைந்தாள் அங்கிருந்து.

விசாகானந்தன் துயரத்தினால் வெப்துயிர்த்துத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்— "மிருகேந்திரா, உன்னுடைய நீசமான நடத்தையினால் நீ இன்று எவ்வளவு பிரதானமான ஆட்டத்தை விருந்து வைத் தழைக்கிறாய்!" என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் சாய்ந்தான்.

பிரமீலையின் கபட நாடகம் சம்பூர்ணமாய் நிறைவேறி விட்டது. இனி பிரமீலை கையில் பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு எப்படி நெருப்புப் பற்ற வைத்தாளென்பது மேல் வரும் அத்தியாயத்தினால் விசதமாய் விளங்கும்.

ஸஃபி ஸாதியின் திருவாக்குகள்

—(*)—

[ஸஃபி ஸாதி என்பவர் ஒரு சிறந்த பாரசீகக் கவி. இவர், "குலிஸ்தான்" என்னும் சுவையுள்ள பாமாலையைத் தொடுத்திருக்கிறார். தனது நீண்ட வாழ்க்கை யனுபவங்களையே இப் பாமாலையிற்பாடியுளார், இவர் நூற்றுப்பத்து ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். திருக்குரானை நன்கு ஆராய்ந்து, அதன்வழி நின்று, தன் வாழ்வைத் தூய்மைப் படுத்திக்கொண்டார். இவர் உண்மையான இஸ்லாமியர். விரதத்திலும், தவத்திலும், வழிபாட்டிலும், பக்தி கானங்களிலும், தன் வாழ்க்கையை நடத்தி, அத்யாத்ம வாழ்வு வாழ்ந்தார். பதின்மூன்றாவது நூற்றாண்டில் தார்த்தாரியர், பாரசீகத்தைப் படையெடுத்து அழித்ததும், நமது ஸாதி தன் நாட்டை நீத்து, இந்தியா, அரபியா ஸிரியா, முதலிய விடங்களில் பிரயாணஞ்செய்தார். துருக்கி ராஜ்யத்தில் இவருக்குப் பிரயாண அனுபவம், மிகுதி. டமஸ்கஸ் என்னுமிடத்திற் சில ஆண்டுகள் தங்கி, ஆங்கு, தன் நீண்ட அனுபவங்களைத் தூயவாக்குகள், பாடிக்கொண்டு துறவியாயிருந்தார். தன் வயோதிகத்தில், ஒரு அழகான ரோஜாவனத்தில், சாந்தமாக வாழ்ந்தார். இங்கேதான் இவருடைய தூய மனத்தினின்று, "குலிஸ்தான்" (ரோஜாவனம்) என்னும் அருமையான, என்றும் வாடாத பூக்கள் பூத்தன. குலிஸ்தானின் உயர்ந்த கருத்துகள், படிப்பவர் மனதைப் பரிசுத்தமாக்கும். அவை, ஒருவன் வாழ்க்கையையே சீர்திருத்தும் தன்மையன; கேட்போருக்கு அறிவு கொளுத்துவன; பேரின்பந் தருவன. இங்ஙனம், குலிஸ்தானை உலகிற் கீந்து, ௧௨௯௧-ம் ஆண்டு ஆண்டவன் திருவடியையடைந்தார். அவருடைய மொழி யமிழ்தத்தை நந்தமிழரும் துய்க்கும் பொருட்டு, பாலபாரதியில் பொறுக்கி யச்சிட்டோம்.]

௧. எல்லாம் வல்ல இறைவன் அறமே உரு. அவன் பெரிய நீதிபதி. நன்மையே புரிபவருக்கு நற்பயனைக் கொடுக்கிறான். தீய முயற்சி யுள்ளோருக்குத் தீய அனுபவங்களையே தருகிறான்.

௨. ஒரு மத யானையை யெதிர்த்துப் போர் புரியும், வீரனைக்காட்டிலும், தன்னைப் பிறர் கடுத்தாலும், அவர் மேல் வெகுளாது நிதானமாகப் பேசுவோனையே உண்மை வீரனாகப் பெரியோர் மதிப்பர்.

௩. மிருகங்களிற் சிங்கத்தை உயர் வென்றும், கழுதையை இழிவென்றும் கூறுகிறார்கள். ஆள் விழுங்கும் சிங்கத்தினும், சாந்தமாகப் பொதி சுமக்கும் கழுதையே மேன்மை யென்பது, அறிஞர் முடிவு.

௪. ஒரு சிறு பாயில் பத்துத் துறவினர்கள் சாந்தமாகப் படுத்துக் கொள்வார்கள். ஆனால் ஒரு பெரிய நாட்டில் இரண்டு மன்னர்கள் சமாதானமாக இருக்க முடியாது.

௫. பொறாமைக்காரர்களே, நீங்கள் இல்லாவிடில் உலகிற்கு நலம். ஏனெனில், பொறாமை என்பது சாவோடுதான் தொலையும்.

௬. கொடுங்கோலன் ஒரு சமூகத்தாரை ஆளவே முடியாது. ஏனெனில் ஒரு ஓநாய் ஆட்டிடையன் வேலையைப் பார்க்க இயற்கையில் ஏற்பட்டதில்லை. ஒரு கொடுங்கோல் மன்னன் தன் ராஜ்யத்தின் அரணைத் தானே யிடிக்கிறான்.

௭. ஓ மன்னனே! எளியவருக்கு இரங்கு; இல்லாவிடில், ஒரு வலிய சத்துருவினின்று போரை எதிர் பார்ப்பாய். கொடுங் கைகளாலும், உன் பலத்தாலும் ஏழைகளையும் திக்கற்றவர்களையும் துன்புறுத்தாதே. அவர்களை அட்டை போல் உறிஞ்சாதே.

௮. ஆத்ம சுயேச்சை யடைந்தவனிடம் பணமும், காதலர் மனதில் பொறுமையும், மடவாயில் தண்ணீரும் நிலைக்காவாம்.

௯. பகலில் தீவட்டி போடுவோன் இரவில் எண்ணை இல்லாது விழிப்பான்.

௧௦. ராஜசேவை கடல் யாத்திரையைப் போல லாப முள்ளது. ஆனால் அபாயமானது. அதனால் உனக்குக் கனகம் கிடைத்தாலும் கிடைக்கலாம். கடுஞ் சாவு நேர்ந்தாலும் நேரும்.

௧௧. நமது வாழ்க்கை இன்பமும் துன்பமும் நிறைவும் குறைவும், உள்ளதாய், வஞ்சிரக் காற்றுப் போல் செல்லுகிறது.

௧௨. சந்நியாஸமென்பது காவியுடையில்லை; அது உள்ளத் துறவிலும் எளிமையிலும் இருக்கிறது. ஒரு வீரனே வீரவுடைகளை அணியத் தக்கவன். ஒரு பயங்காளி அதற்குத் தக்கவனாகானன்றோ?

௧௩. நீ நல்லவனா யிரு. பிறர் உன்னைத் தூஷித்தாலும் பொறு. நீ கெட்டவனாக இருந்து உன்னை மற்றோர் பொய்யாகப் புகழ்வதினும், நீ நல்லவனாக இருந்து மற்றோர் உன்னைத் தூஷிப்பதே நலம்.

௧௪. சூரியனுடைய அழகையும், ஒளியையும் நலத்தையும் கண்டும் பொதுவாய் ஜனங்கள் ஆர்வமுறுவதில்லை. ஏனெனில் அவன் வழக்கமாகத் தினந்தோறும் வருகிறானன்றோ?

௧௫. கல்வி பரவுதற்கு வித்வான்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடு. துறவு நிலைக்க வேண்டுமானால் சந்நியாஸிக்கு ஒரு காசு கூடக் கொடுக்காதே.

௧௬. பணத்தாசை யுடையவன் துறவி யல்ல. துறவி பணத்தாசை யுடையவனல்ல.

௧௭. நீ தூசிபாகு முன் தூசி போலத் தாழ்மையுட னிரு.

௧௮. ஆயிரம் பாரம் கல்லைச் சுமப்பவன், ஒரு வசவைத் தாங்க மாட்டானாகில் என்ன பலன்?

௧௯. சுதந்திரத்தின் சக்தி கொடுங்கோலினும் வலியது.

௨௦. ஏ பணக்காரர்களே! உங்களுக்கு நியாய உணர்ச்சியும், எங்களுக்குத் திருப்தியும் ஏற்பட்டால், உலகின் துயர்கள் நீங்கும்.

௨௧. ஓ திருப்தியே! நீயின்றி ஒருவரும் செல்வனாக முடியாது. பொறுமை யின்றி யாரே ஞானியாக முடியும்?

௨௨. நமது தேவைகளைப் பிறரிடம் சொல்லி யாசிப்பதினும், இருப்பதைக் கொண்டு திருப்தியுடன் வாழ்வது நலம். பணக்காரனிடம் ஒரு புத்துடைக்காகக் கெஞ்சுவதினும், தனது கந்தையைத் தைத்துடுத்துவதே சிறந்தது. இரப்பதினும் பட்டினியோடிருப்பது மேல்.

௨௩. கடவுளைப்பற்றி எண்ணித் தோத்திரம் செய்ய ஜீவிப்பதற்காகவே நாம் உண்ண வேண்டியது. முக்கமாகவே, உலகில் பல கஷ்டங்களை அனுபவிக்கும் மனிதன் எந்தக் கஷ்டம் வரினும் ஜெயிக்கிறான். கண்டபடி தின்று கொழுத்து இடம்ப முள்ளவன், சிறு கஷ்டம் வந்தால் சகிக்க முடியாதவனாகிறான்.

௨௪. மானங்கெட்டு வாழ்வதினும் மானமாய் இறந்தல் நலம்.

௨௫. சைந்தரத்தில் பசியால் துடிக்கும் ஒருவனுக்குத் தங்கமும் மண்ணும் ஒன்றுதான்.

௨௬. பாரீசுத்தில் அகப்படும் கந்தகத்தை சீன தேசத்திற்கும், சீனத்து மண் பாண்டத்தை கிரேக்க நாட்டிற்கும், கிரேக்கின் பண்டங்களை இந்தியாவிற்கும், இந்தியாவில் மிகுந்த எஃகை அலப்போவிற்கும் அலப்போவிலிருக்கும் கண்ணாடியை யாமினுக்கும் நான் கொண்டுபோய் வியாபாரம் செய்வேன்.

௨௭. என் குற்றங்களை யெல்லாம் குணமெனவும் என் குறைகளை யெல்லாம் நிறைகளெனவும் புகழும் நேசரை நான் விரும்பவே யில்லை. அவர்கள் முட்களை ரோஜாக்களென்றும் மல்லிகையென்றும் வர்ணிப்பவர். என் குறைகளை யெல்லாம் இரைந்தகூவும் எதிரி எங்கே? அவனே என் அன்பன்.

௨௮. ஒரு மிருகத்திற்கு நீ பேசக் கற்பிக்க முடியாது. ஆனால் அதனிடத்தினின்று நீ மௌனத்தைக் கற்றுக்கொள்.

௨௯. அறிவை அடைந்து அதன்படி நில்லாதவன் நிலத்தை நன்றாக உழுதும் விதைக்காதவனுக்குச் சமானமாவான்.

௩௦. ஒரு பொருள் கோரோஜனை என்பதை அதன் மணமே காட்டும். ஒரு மனிதன் கலையில் நிபுணனென்பதை அவன் திறமையே காட்டும்.

௩௧. பணம், சேர்ப்பதற்கு ஏற்பட்டதல்ல, அனுபவிப்பதற்கே ஏற்பட்டது.

௩௨. எவ்வளவு படித்திருப்பினும் அதன்படி நில்லாதவன் ஒன்றுந் தெரியாதவனே; அப்படிப்பட்டவன் வேதாந்தியுமல்ல, துறவியுமல்ல, புத்தக மூட்டையைச் சுமக்கும் ஒரு மிருகமேயாவான்.

௩௩. உன் சத்துருக்களோடு உறவாடும் சிநேகிதனை ஒதுக்கி வை.

௩௪. ஏ துறவி! நீ பூமியைப் போல் பொறுமையா யிருக்கப் பழகு. உன் புத்தகப் படிப்பையெல்லாம் பூமிக்குள் ஆழமாகப் புதைத்து விடு.

௩௫. காமம் நரகத்தீ போன்றது அதில் மூழ்கிவிடாதே.

௩௬. ஒரு அறிவீனன் அறைபறை போன்று சத்தம் போட்டு, உள்ளே வெறுமையாயிருக்கிறான்.

௩௭. சுறுசுறுப்பில்லாத பண்டிதன் பணமில்லாத காதலன் போலாவான். அறிவில்லாத பிரயாணி, இறகில்லாத பட்சி போல்வான். அனுஷ்டானமில்லாத வேதாந்தி பழமில்லா மரத்தைப் போல்வான்; கல்வி யில்லாத பக்தன் கதவில்லாத வீடு போல்வான்

௩௮. தரித்திரம் அனுபவித்தவனுக்கே செல்வத்தின் சுகம் தெரியும்

௩௯. ஏ! அரசே, உன் படத்தை அந்தச் சுவற்றில் மாட்டி வைத்தால் யாவரும் பயத்தால் அதனருகே செல்லமாட்டார்கள். உனக்கு மோக்ஷத்தில் ஒரு இடம் கிடைத்து, இருப்பையாகில், எல்லோரும் நரகமே சுகமென்று போய்விடுவார்கள்.

௪௦. ஏ கிழவி! உன் வெளுத்த கூந்தலைக் கறுப்பாக்கினாலும், உன் வளைந்த முதுகை நிமிர்த்த முடியாது.

௪௧. கழுதையை மெக்கா யாத்திரைக்குக் கூட்டிப் போனாலும் அது கழுதையாகவே திரும்பி வரும்.

௪௨. தீர்ப்பு நாளில், கடவுள் "உன் வேலைகள் எங்கே" என்று கேட்பாரே யொழிய "உன் தகப்பன் யார்" என்று வினவார்.

௪௩. கருமியானவன் பூமியிக்குள் புதைந்தால் தான் அவன் பணம் பூமியை விட்டு மேலெழும்பும்.

௪௪. ஒரு வனாந்திரத்தின் மணல் முழுதும் தங்கமும் முத்துமானாலும், ஒரு பேராசை பிடித்தவன் களிப்பது, ஐயமே.

௪௫. முள்ளில்லாத ரோஜாவும், மயக்கமில்லாத கள்ளும் இல்லை. முத்தெடுக்குமிடத்தில் ஆட்களைக் கொல்லும்படியான பெரிய மீன்களும் இருக்கின்றன. புதைத்து வைத்தால் அப்பணத்தருகே காலகோடி சர்ப்பம், வாய் திறந்து நிற்கிறது. உலக அனுபவம் என்ற தேனோடு தேனீயின் கடியும் சேர்ந்திருக்கிறது. நமக்கும் மோக்ஷத்திற்கும் நடுவே சாத்தான் இருக்கிறான்.

௪௬. வெறுப்போடு பார்க்கும் கண்களுக்கு மன்மதனும் அழகற்றவனாய்த் தோன்றுகிறான். விருப்போடு பார்ப்போனுக்கு அரக்கனும் அழகனாகிறான்.

௪௭. மெதுவாக விடாது நடப்பது, விரைவாக ஓடி மத்தியில் விழுந்து விடுவதினும் மேல். கொஞ்ச தூரம் தாவி போடிக் களைத்துப்போகும் அரபிக் குதிரையினும், சேர்ந்தாற் போல், நிதானமாய் நடக்கும் ஒட்டகம் வனாந்திரத்தை எளிதில் தாண்டுகிறது.

௪௮. ஒரு பிரயாணியின் மடியிலிருக்கும் தங்கம், கள்ளர் கையில் படுகிறது. அல்லது, வழியில் செலவழிந்து போகிறது. ஆனால், ஒருவன் மனத்திலுள்ள அறிவு சாசுவதமாயிருக்கிறது.

௪௯. "எம்மை எனது பெருமை" என்று ரசூல் சொல்வதைக் கவனியுங்கள்!

௫௦. கடவுளை நம்பினவனுக்குக் கடவுளே எல்லாமாகிறார்.

சுத்தானந்தபாரதி

யோக சாதனம்

—[o]—

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை ஸ்ரீ கு. அமுதன் மொழிபெயர்த்தது)

அறிவு என்பது என்ன? அது எதனுள் அடங்கியுள்ளது? ஸ்வயம் அறிவிற்கும் அறிவைப் பெறும் வழிகளுக்கு முள்ள வித்தியாசங்களை நாம் பிரித்துப் பார்த்தல் அவசியம். மேலும் அவ் வழிகளில் என்ன கருவி என்ன தொழிலைச் செய்கிறதென்பதையும் தெளிந்துகொள்ளல் முக்கியம்—அதாவது கருவிகளுக்

களுக்கும் அவைகள் புரியும் தொழில்களுக்கு முள்ள வேற்றுமை வேறுபாடுகளை ஐயமுறப்பார்த்துத் தெரிந்து கொளல் இன்றியமையாதது.

அறிவு போதமாகும்—போதமென்பது ஒரு பொருளை "ஸக்ரிய சைதன்யத்தில்" ஏற்றல், எடுத்துக் கொளல். சைதன்யத்தில் ஏற்றல் என்பதன் பொருள் என்ன? எடுத்துக்கொளல் என்று சொல்லும்பொழுது, எங்கிருந்து எடுத்துக்கொள்ளுதல் என்ற கேள்வி உண்டாகின்றது. ஐரோப்பியர்கள் 'வெளியிலிருந்து' எடுத்துக் கொள்ளுதல் என்று சொல்லுகிறார்கள்; நாம் 'உள்ளினின்று' அதாவது சைதன்யத்திலிருந்தே என்று சொல்லுகிறோம். அறிவென்ப தனைத்தும், சைதன்யம். தன்னகத்துள்ள எதோ ஒன்றின் மீது இயங்குவதேயாகும். நமக்குத் தெரிந்த வனைத்தும் பரப்ரஹ்மனில் இருக்கிறது; அதாவது அனைத்தும் நம்முடைய அகண்ட ஸதாகாரத்தில் இருக்கின்றது. ஆயினும் அவைகள் வ்யக்தமாக (வெளிப்படையாக) இல்லை. மேற் சொன்னது போலவே அனைத்தும் எல்லாவற்றிற்கும் கருப்பமாகவுள்ள தூய சித்தத்தில். உரு பெயர் குணம் முதலியவைகளின் கருத்து ரூபமாக அமைந்துள்ளது. அது காரணகோசம் அல்லது மஹத் கோசத்தில் உரு, பெயர், குணம் முதலியவைகளுடன் வெளிப்படுகின்றது. சைதன்யமானது பீஜ ரூபநிலையிலிருப்பதையே நாம் காரணமென்கிறோம். இந்த கோசத்தில் அனைத்தினுடைய பீஜரூபமும் அடங்கியிருக்கின்றது. சைதன்யத்தின் ஸூக்ஷ்ம நிலை அனைத்தினுடைய மாற்றம், வளர்ச்சி, வேறுபாடுகள் முதலியவைகளுக்கு இடந் தருகின்றது. கடைசியாக, சைதன்யத்தின் ஸ்தூல நிலையில் அது மாற்றம்,வளர்ச்சி, வேறுபாடு, திருத்தம் முதலியவைகளை நேரில் பெறுகின்றது. காரண உறையில் பரிணாமம் என்பது கிடையாது; எதுவும் மாறுகிறதில்லை; எல்லாம் சாசுவத நிலையில் இருக்கிறது. காரணம் என்பது ஸத்யம் ஸூக்ஷ்மத்தில் எல்லாம் மாற்ற மடையத் தயாராகின்றன; யாவும் கற்பனை நிறைந்துகாணப்படுகின்றன— அன்ரிதம் நிறைந்து காணப்படுகின்றன; ஆகையினால் அது ஸ்வப்னமெனப்படுவது; ஸ்வப்னமென்பது பொய்ப்பொருளல்ல; ஸ்வப்னமென்பது காரணத்திற்கும் ஸ்தூலத்திற்கும் உடனே ஒவ்வி வராதது. ஸ்தூல நிலையில் யாவும் கிரமேண பரிணமிக்கின்றது. இவ்விடத்து ஸத்தியத்தின் அம்சமானது, பழைய ஸத்தியத்தை அன்ரிதமாகவும், புதிய அன்ரிதத்தை புதிய சத்தியமாகவும் மாற்றிக்கொண்டே பெருகி வளர்கிறது. பழைய ஸத்தியம் அன்ரிதமாக மாறுவதை நாம் அழிவு என்கிறோம்; அவ்வண்ணமே புதிய அன்ரிதம் புதிய ஸத்தியமாக மாறுவதை நாம் ஆக்கம் என்கிறோம். காரண நிலையில் ஆக்கம், பிறப்பு, இறப்பு என்பன கிடையா—எல்லாம் என்றுமாக உள்ளது. ஒரு பீஜ ரூபத்தினின்று மற்றொரு பீஜ ரூபமாகவும், ஒரு நிறைவேற்றிலிருந்து, இன்னொரு நிறைவேற்றலாகவும் இயங்கும் இயக்கமே அங்குள்ள ஓரே வகை மாற்றம்.

ஆகையினால் அறிதல் என்பதற்கு ஒரு பொருளின் மேற் சொல்லிய மூன்று நிலைகள் அல்லது மூன்றனுள் ஒரு நிலையைக் குறித்து போத முறலேயாம். பொருள்களின் ஸ்தூல நிலையைக் குறித்த போதம் அல்லது அறிவிற்கு சாஸ்த்திரம் (Science) என்று பெயர். பொருள்களின் ஸூக்ஷ்ம நிலையைக் குறித்த போதமானது தத்துவ அமைப்புகளாகவும், சமயக் கோட்பாடுகளாகவும், மனநூல்களாகவும் வெளிப்பாடாகின்றது. பொருள்களின் காரண நிலையின் போதமானது யோக சாஸ்த்திர மெனப்படுகின்றது. மனிதன் ஸ்தூலத்தை இந்திரியங்கள் மூலமாகவும், சூட்சுமத்தை விசாரம் அல்லது தெய்வ அருள் நிரம்பிய புத்தியினாலும், காரணத்தை ஞானம் அல்லது அத்யாத்மிக உபலப்தியினாலும் அறிகிறான். பூரண அறிவென்பது மூன்று வகை செய்முறைகளடங்கியதென இதனால் நன்கு தெளிவாகின்றது. விஷய உபலப்தி அல்லது நுகர்ச்சி, அறியப்பட்ட நுகர்ச்சியின் தெளிவுரை, கடைசி அல்லது மூன்றாவதாகிய அத்யாத்மிக உபலப்தி. சாஸ்திரக்ஞன் அடியிலிருந்து ஆரம்பித்து முடியுமானால் மேலேறப் பார்க்கிறான். யோகியானவன் உச்சியினின்று தொடங்கி முழுப் பிரமாணத்தை அடையும் பொருட்டு கீழிறங்குகிறான். நீ சாஸ்திரக்ஞன் அல்ல, நீ ஸாதகன். ஆனது பற்றி நீ அறிவு அல்லது ஞானம் என்று சொல்லும் பொழுது முறையே இன்னதெனத்தெரிந்துகொள்ளல்—

வேண்டும்; நீ ஒரு பொருளை அகநுகர்ச்சி அல்லது அந்தர்கத உபலப்தியினால் நுகர்கிறாய் அதாவது பாவத்தினால் நுகர்கிறாய்; பிறகு அதைப்பற்றி யோசனை புரிகிறாய்; கடைசியாக உனது நுகர்ச்சியை அர்த்தம் நிறைந்த வாக்கில் (பொருள் நிறைந்த சொல்லில்) அமைக்கிறாய். பொருளும் சொல்லும் சேர்ந்தே எண்ணமெனப் படுவது. இந்த அக நுகர்ச்சியை விஷய உபலப்தி அல்லது வெளிப் பொருள் நுகர்ச்சியால் உனக்குள்ளாக எண்பித்துப் பார்த்துக் கொள்கிறாய்.

உதாரணமாக நீ ஒரு மனிதனைப் பார்த்து அவன் என்னமானவன், அவன் என்ன நினைக்கிறான், அவன் என்ன செய்கிறான் என்னும் முதலியவைகளை அறிய விரும்பும் பொழுது—நீ என்ன செய்வாய்? ஒரு பௌதிக சாஸ்திரி அல்லது லோகாயதன் என்ன செய்வான்? ஒரு லோகாயதன் தான் அறிய விரும்பும் மனிதனை முதலாக பலவகைகளிலும் கவனித்து வருவான்; அம் மனிதன் என்னென்ன சொல்கிறானென்றும், அவனுடைய முகக் குறிகள் எத் தகைத்தன என்றும், அவன் செயல்கள் எம் மாதிரியானவைகளென்றும், அவன் எத் தன்மையர்களுடன் கூடி வாழ்கிறானென்றும் முதலிய பலவகையான புறக்குறிகளை லோகாயதன் உற்று கவனித்து வருவான். இவை யனைத்தும் வெளிநோக்கு மார்க்கத்தில் அறியப்படுவன. இவைகளை உதவியாகக் கொண்டு, பிறகு விசாரம் செய்யத் தொடங்குகிறான். "நான் அறிய விரும்பும் மனிதன் இவ்வாறு மொழிவதனால், அவனுடைய நினைப்புகள் இவ்வாறிருக்க வேண்டும், ஆதலின், அவன் இவ்வகையான நடத்தையுள்ளவன் அவனுடைய செயல்கள் இந்த முடிவை உறுதிப் படுத்துகின்றன, அவனுடைய முகக் குறிகள் இதை ஸ்திரப்படு செய்கின்றன." என்று எண்ணமிட்டு முடிவு கட்டுகிறான். மேற் சொல்லிய முக்கிய எண்மானங்கள் அவனுக்குக் கிட்டாத பொழுது, அவன் தன் கற்பனா சக்தி அல்லது ஞாபக சக்திகளால் ஒரு முடிவுக்கு வருகிறான்; அதாவது தனக்கு ஏனையர்களிடமிருந்து உண்டான அநுபவத்தாலும் அல்லது தன்னுடைய சொந்த அநுபவத்தாலும், இதுவுமில்லாவிடின் தான் மற்றவர்களிடமிருந்து கேட்டதைக் கொண்டும் சுவடிகளில் மனித வாழ்க்கையைக் குறித்து எழுதியுள்ளதைக் கொண்டும் அவன் ஒரு கடைசியான முடிவுக்கு வருகிறான். பார்த்தல், கவனித்து நோக்குதல், வேறுபடுத்திப் பார்த்தல், ஒத்திடுதல், அநுமானித்தல், ஊகித்தல், பாவித்தல், நினைவுபடுத்தல் முதலிய பலவற்றாலாய முடிவை அவன் உண்மையென்று கொள்கிறான். உண்மையாகப் பார்க்கு மிடத்து அவன் எட்டிய முடிவு ஒரு சம்பாவ்யமேயாம்; அவனால் தான் எட்டிய முடிவை நிச்சய மெனக் கொள்ளல் முடியாத செயல்; தன் கண், செவி, மூக்கு, வாய் முதலியவற்றால் தீண்டி அறிந்தவைகளைத் தவிர, தன் எண்ணங்களில் உதிப்பவைகளைக்கூட அவனால் நிச்சய மென்று உறுதி கொள்ள முடியாது. இவைகளுக் கப்பாலுள்ளவைகளில், லோகாயதன் அவ நம்பிக்கை யுறுகிறான். தன் புலன்களால் பற்றி அறிந்தவைகள் அல்லது தன் புல நுகர்ச்சியுடன் ஒவ்விய அநுபவங்கள் இவைகளே அவனுக்கு உண்மையானவைகள்; ஏனைய அநுபவங்கள் அவனுக்கு மெய்யாக மாட்டா.

நிற்க, யோகியானவன் எவ்விதம் நடந்து கொள்கிறான்? இவன் தான் அறிய விரும்பும் பொருளுடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்கிறான்; அதனுடைய உருவம், பெயர், குணம் முதலியவைகளுடனல்ல இவன் ஏற்படுத்தும் ஐக்கியம்—இவன் அப் பொருள் தன்னுடனேயே ஒரு உறவொற்றுமையை சமைத்துக்கொள்கிறான். இவன் தான் அறிய விரும்பும் பொருளின் உருவத்தைப் பார்த் திராமலிருந்திருக்கலாம்; அதன் பெயரைக்கேட்டே இராமலிருந்திருக்கலாம்; அதன் குணத்தை நுகர்ந்தே இராமலிருந்திருக்கலாம். இருந்த போதிலும் இவன் அப் பொருளை அறிந்து கொள்ள முடியும். ஏனெனின், இவன் சுயப் பொருளையே அறிய வேண்டுகிறான்: அது இவனகத்து உளது, அது இவனுடன் ஐக்கியப்பட்டது, மனித னகத்துள்ள மஹா காரணத்தில் இவனும் அதுவும் ஒன்றுபட்டது. ஆங்கு அனைத்தும் ஆத்மாவை சந்திக்கின்றன; ஆத்மாவுடன் அவைகள் முற்றிலும் ஒற்றுமையைப் பெற்று வாழ்கின்றன; கேவலம் ஆன்மாவுடன் ஐக்கியப் படுவதினாலேயே ஒரு பொருளினுடைய எல்லாவற்றையும் என்னால் தெரிந்து கொள்ள முடியும். ஒரு சில யோகிகளே இந் நிலை அடைகிறார்கள். இருந்தும் மேற் சொல்லியதற்கு அடுத்த படியாகிய நிலையிலேகூட என்னால் ஒரு பொருளுடன் ஒற்றுமையைப் பெறவும், பாவத்தினால் அதனை

அறியவும்முடியும். நான் என்னுடைய ஜீவனை, நான் அறிந்து தெளிய விரும்பும் பொருள் அல்லது மனிதனுடைய ஜீவனுடன் கலக்கிறேன்; என்னகத்துள்ள பிரக்ஞை அப்பொருள் அல்லது மனிதனகத்துள்ள பிரக்ஞையுடன் ஒன்றுறுகிறது. அப்பொருள் அல்லது அம்மனிதனை முழுவமைதியுடன் நமது புத்தியில்நேர்ப்படுத்துக் கொள்வதே இதைச்செய்யும் வழியாகும். என்னுடைய புத்தி முற்றிலும் அல்லது எறக்குறைய தூய்மையையும், மனது சாந்தியையும் பெற்றிருக்குமேல், என்னால் ஒருவனுடைய சகல உண்மைகளையும் அறியமுடியும். நான் அதை பாவம் அல்லது அத்யாத்மிக உபலப்தியினால் பெறுகிறேன் என்பது தெளிவு.

பிறகு பாவத்தினால் எனக்குக் கிடைத்ததை நான் தெளிவாக்கி திட்டப்படுத்தவேண்டும். அதாவது அதை நான் புத்திபூர்வமாக மனதிற்கு உரைத்தாகவேண்டும்; நான் அதைக் குறித்து யோசனை செய்தாகவேண்டும். நான் உன்னிடம் சொல்லிவரும் இக்கருத்துக்கள்எனதுள்ளத்தில் வாட்மையற்ற போதமாக இருக்கின்றன; பிறகு மொழிகளால் அவைகள் தங்களை உருப்படுத்திக்கொள்கின்றன; பிறகு வாக்கு பொருள் அல்லது திட்டமான அர்த்தத்தைப் பெறுகின்றது; இதுதான் எண்ணமெனப்படுகிறது. வெகு ஜனங்களின் நினைவுகளில் தெளிவு கிடையாது; தாங்கள் சொல்ல விரும்புவதை அரைகுறையான வாக்கினால் அர்த்தத்தின் ஒரு அம்சத்தையே வெளிக்குத் தெரிவிக்கிறார்கள். யோகிகள் அவ்விதம் செய்தல் கூடாது. இவர்கள் தங்கள் எண்ணங்களை தெள்ளிய, தோஷமற்ற, பரிபூரண, நிச்சயமான வாக்கியங்களில் பொருத்தி அமைத்து வெளிப்படுத்த வேண்டும். ஒரு யோகியானவன் யோசியாமலே ஒரு பொருளை அறிந்திருக்கலாம்; ஆனால் அவன் யோசனை செய்யும்பொழுது அதை தெளிவாயும் சீர்பெற்ற முழுமையுடனும் நேராய்ச்செய்தல் வேண்டும்.

தேவையானபொழுது யோகி விசாரஞ் செய்கிறான்; ஆனால் இவன் செய்யும் விசாரமானது பௌதிகன் செய்வது போன்றிராது. தன்னுடைய தீர்க்க தரிசன சக்தியால் ஒரு பொருளைப்பார்வையிட்டு பிறகு பார்த்த உண்மையை எண்ணமாக மாற்றுகிறான்; பிரத்யக்ஷம் இவனுக்கு அர்த்தத்தையும், பிரேரணை வாக்கையும், அகக்கண் சரியான ஸித்தாந்தத்தையும் தருகின்றன; விவேகம் இவனை பிழைபடவொட்டாது காக்கின்றது. தோஷமற்றுக்கருதப்பட்ட இந்த நான்கு செய்முறைகளால் உண்மைப்பொருளை உற்று நோக்குவாயாக. நீ ஒரு பொருளின் காரணகாரியத்தை அறியவேண்டுமாயின் உன்னுடைய அகக்கண் உனக்கு சரியான முகாந்தரங்களை காட்டிக் கொடுக்கும். தார்க்கிகன் ஒரு ஸித்தாந்தத்தினின்று மற்றொரு ஸித்தாந்தத்தை கஷ்டமுறையில் தாவி யெட்டுவது போல் யோகியானவன் உழைக்கவேண்டியிராது.

கடைசியாக, யோகி தன்னுடைய ஞான சம்பத்தை புற உலகின் உண்மைகளுடன் இணங்கி ஒவ்வுகின்றதா என்று ஒத்திட்டுப் பார்க்கிறான். ஒரு ஆளைப் பார்த்த மாத்திரத்தினாலேயே இவன் அவ் வாளைக் குறித்த உண்மைகளை அறிந்து கண்டு விடுகிறான்; கண்ட உண்மைகளை தெளிவாகவும் சரியாகவும் யோசனை செய்தபிறகு ஏற்படும் முடிவை, அந்த ஆளினுடைய செயல், சொல் முதலியவைகளுடன் ஒத்திட்டுப் பார்க்கிறான். இப்படிச் செய்வதானது தான் கண்ட உண்மையை பரிசோதிப்பதற்காக வல்ல;ஒருவனுடைய செயல் பேச்சு முதலியன அவனை அம்ச மாத்திரமே வெளிக்கு வெளியிடுகின்றனவென்பதும் தன்னை தப்புவழி காட்டி ஏமாற்றுகின்றனவென்பதும் இவனுக்குத் தெரியும். ‘காரணத்தில்’ கண்ட உண்மையானது எவ்வாறு ஸ்தூலத்தில் இயங்கி வெளிப் படுகின்றது என்பதை அறிவதன் பொருட்டே இவன் முதலிற் சொல்லிய வாறு செய்கிறான். ஒரு மனிதனுடைய புறவாழ்க்கையானது எவ்வளவு தூரம் தான் தன்னுடையயோகப்பயிற்சியினால் நுகர்ந்தறிந்தே ஆழ்ந்த உண்மைகளுடன் ஒத்து வருகின்றனவோ அவ்வளவு தூரத்திற்கே அவைகளை இவன் மதித்து நம்புகிறான்.

இதனின்று யோகிக்கும் லோகாயதனுக்கு முள்ள அளவு கடந்த வித்தியாசத்தை நீ உணரலாம். நீ, உயர்தர தெய்வத் திறன்களை ஏறக்குறைய அடியோடு பிரயோகஞ்செய்யாது விலக்கி அவைகளை இந்திரியங்களின் இயக்கங்களுக்கும் விசார புத்தியின் முடிவுகளுக்கும் கீழ்ப்படுத்த வழக்கப்பட்டிருப்பதொன்றே நடுவில் ஏற்படும் சிரமம். ஆனது பற்றியே உயர்தரத் தெய்வத் திறன்களை உபயோகஞ் செய்வதற்கு உனக்குக் கஷ்டமாயிருக்கிறது.

முதலிலிருந்தே உன்னால் ஆத்மஞானத்துடனும் பாவத்துடனும் துடங்க முடியுமானால் எவ்வளவு சுலபமாயிருக்குமென்பதை நினைத்துப் பார்! அதைரியம் வேண்டாம், இதுவும் இனி நிகழும். ஆனால் முதலாக, கீழ்தர புத்தியையும், மனதின் இந்திரியங்களையும் நீ விலக்க வேண்டும், மேலும் உயர்தர தெய்வத் திறன்களை எழுப்பி விழிப்புறச் செய்யவேண்டும். நீ நினைப்பதற்குப் பதிலாக அவைகள் உனக்கு நினைத்துக் கொடுக்கும்; நீ பார்ப்பதற்குப் பதிலாக அவைகள் உனக்குப் பார்த்துக் கொடுக்கும்; நீ கேட்பதற்குப் பதிலாக அவைகள் உனக்குக் கேட்டுக் கொடுக்கும்.

முதலாக உனது ஸம்ஸ்காரங்களை சரிப் படுத்து. இது வரை நான் சொன்னவைகளையும் இனி சொல்லப் போவதையும் புத்தி பூர்வமாக அறிந்து தெளிந்து கொள். உறுதியின் உதவியினால் விசார புத்தி, கற்பனா சக்தி, ஞாபக சக்தி, எண்ணம், புலனுணர்ச்சிகள் முதலியவைகளை போதுமானவரை அமைதி செய்து, இதன்பயனாக உயர்தர புத்தியை மேற்சொல்லியவைகளினின்று தான் ஒரு வேறுபட்ட பொருளென்று தானே அறியுமாறு செய். உயர்தரக் கரணங்கள் கீழ்தரக் கரணங்களினின்று சிறிது சிறிதாகப் பிரிபட்டு சலிக்கத் தொடங்கும் பொழுது அபராப் பிரகிருதியின் கருவிகள் தைரியம் குன்றி, சலனமிழந்து கடைசியாக உன்னை தொந்திரை செய்வதினின்று விலகும்.

ஆகவே முதலில் பெறவேண்டியது தவவுறுதி, பிறகு தவவுறுதி அல்லது சக்தியினால் பெறவேண்டியது ஞானம் என்பது யோகப்பயிற்சி முறையாகும். முதலில் காளி, பிறகு சூரியன். ஆதாரத்தின் எஞ்சிய பகுதிகளை விளக்கிக் காட்டிய பிறகு, உனக்குப் பலவகைப்பட்ட திறன்கள் என்னவென்பதை விவரித்துச் சொல்லுவதாக இருக்கிறேன்.

திருவள்ளுவரின் பொருள் நூல்

(ஸ்ரீசுத்தானந்த பாரதியார் எழுதுவது)

“மனிதனுடைய மூளைக் கெட்டிய மட்டும், பாஷை, மதம், தத்துவம் அறிவு நூல், நீதி, கலைகள், முதலிய எந்தத் துறையை ஆராய வேண்டுமெனினும், நீங்கள் இந்தியாவையே எதிர் பார்க்க வேண்டியிருக்கும்; ஏனெனில், மனித சரித்திரத்தில், மிகவும் விலையுயர்ந்ததும், அறிவைப் பெருக்கக் கூடியதுமான, பொருள்கள், இந்தியாவில், இந்தியாவில்தான், பொதிந்துள்ளன” என்று மாக்ஸ்முல்லர் கூறுகிறார். “சமுதாய சுயேச்சை இந்தியாவைப் போல வேறு எந்த நாட்டிலும் அவ்வளவு முன்னேற வில்லை. இதன் கிராம ஒழுங்கும், பஞ்சாயத்தும் வியக்கத் தக்கது. குடியறமும், கோனறமும் யாவர்க்கும் தெரிந்திருந்தது. மன்னர்கள் தரும வரம்பிற்குக் கட்டுப் பட்டதனால், தம்மிச்சைப்படி நடப்பவரல்லர். அரசனும் குடிகளும் தங்கள் கடமைகளை நன்கு உணர்ந்தே நடந்தனர்.” என்னும் வாக்கியங்களை ஸ்ரீ ஜான் உட்ராப் எழுதிய ‘இந்தியாவின் தேர்ச்சி’ என்ற நூலில் காண்கிறோம்.

இந்தியா இவ்வளவு முன்னேற்ற மடைந்திருந்ததற்குக் காரணம், மக்களுக்கும், மன்னருக்கும் இருந்த அறவுணர்ச்சியே யாகும். நமது பழைய நூல்களில் ஆராய்ந்து பார்த்தால் அரசன் குடிகள் மகிழும்படி ஆண்ட முறைகளைப் பற்றி நன்கு அறிகிறோம்.

“தென் குமரி வட பெருங்கற்
குணகுட கடலா வெல்லை
குன்று மலை காடு நாடு
ஒன்றுபட்டு வழி மொழியக்
கொடிது கடிந்து கோல் திருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
யினிது துருண்ட சுடர் நேமி” என்றும்

“அறனும், பொருளும், இன்பமும் மூன்றும், ஆற்றும் பெரும, நின் செல்வம்” என்றும் புறநானூறு கூறுகிறது. அக்கால மன்னர் இப்படிப் புகழ் பெற்றது அவர்கள்

ஆட்சி முறையினலன்றோ. அவர்களுக்கு வழி காட்டிகளாயிருந்த அமைச்சர், அர்த்த சாஸ்திரத்தில் (பொருள் நூல்) பேரறிவு வாய்ந்தவர்களே யாவர். ஆதலின் பொருள் நூல், மக்களுக்கும், மன்னருக்கும் உரிமையும், கடமையும் சொல்லி, நாட்டில் திறமையுள்ள அரசும், மகிழ்ச்சியுள்ள குடிகளும், வளர்ச்சியுள்ள செல்வமும், முயற்சியுள்ள தொழில்களும் ஓங்கும்படி செய்கிறது.

வட மொழியில் இருந்த பல பொருள் நூல்களில் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் தற்போது சிறந்து விளங்குகிறது. அது ஒரு ஏகாதிபத்தியத்திற்கு வேண்டிய விதிகளையும், தந்திரங்களையும் அக் காலத்திற்குத் தக்கபடி வெகு தெளிவாகக் கூறும் ஒரு அத்தியாயங்களுள்ளது. அதற்கு முன்னே, மனு, பராசரர், பிரகஸ்பதி, உசானர் முதலியோர் கூறியிருந்த அரசநீதிகளை யெல்லாம் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் தொகுத்துக் கூறுகிறது. அரசன், மந்திரி, புரோகிதன் ஒற்றர், சேனைத் தலைவன், முதலியோருக்கு வேண்டிய, விதிகளையும், அரசன் தன் சேவகரை சோதித்தறிய வேண்டிய மாதிரிகளையும், இளவரசனைப் பழக்கவேண்டிய விதத்தையும் வெகு திறமையுடன் கௌடில்யர் உரைக்கிறார். கிராமங்களை உண்டாக்கி அதை நிர்வகிக்கும் சேவகருக்கு வேண்டிய சட்டதிட்டங்களும், குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கவும், தண்டிக்கவும், வேண்டிய ஞாயங்களும், முறைகளும், வியாஜ்யங்களைத் தீர்க்கும் வழிகளும், ராஜ சேவகரைச் சோதிக்கும் விதமும், பகையரசரிடம் ஒற்றரை யனுப்பி, ரகசியங்களை யறியும் வகையும், சண்டை சமாதானம் இவற்றிற்குரிய வழிகளும், போர்க் கருவிகள் செய்யும் விதமும், கோட்டைகளைப் பற்றுதற்கான வழிகளும், சத்துருவை இரகசியமாக மடக்குவதற்கு வேண்டிய தந்திரங்களும், குடிகளை மகிழ்விக்கும் திறன்களும், நாட்டில் தொழிலும், செல்வமும், கல்வியும், காப்பும், பெருகும் வழியும், வரி விதித்தல், கொடுத்தல், அதைச் செலவழித்தல், முதலியவற்றையும் வெகு விரிவாயும் நுட்பமாயும் கௌடில்யர் கூறுகிறார். கௌடில்யரைக் குறித்து வேறொரு கட்டுரை விடுக்க எண்ணி இருப்பதால் இத்தோடு நிறுத்துவல்.

இனி நந்தமிழில் இத்தகைய அர்த்த சாஸ்திரம் உளதோ வென்று ஆராய்வோம். ஆத்திச்சூடி முதல் ஐம்பெருகாப்பியம் வரையிலுள்ள எல்லா நூல்களிலும், அரசதர்மத்தைப் பற்றி ஏனைய அறங்களுடன் கலந்து காண்கிறோம். பதினெண்கீழ்க்கணக்குகள், பொருளை விடாது உணர்த்துகின்றன. நீதிநெறிவிளக்கம், குமரேச சதகம், அறப்பளீச்சுர சதகம் முதலியவையும் அரசலக்ஷணங்களைக் கூறுகின்றன. கோப்பெருஞ்சோழன் கோச்சேரமான், கரிகாற் சோழன், சோழன்கிள்ளிவளவன், செங்கணான், பெருவழுதிகளெல்லாம் எத்துணை வீரமும் நீதியும் பொருந்தி, நம் தமிழ்நாட்டை யாண்டார்களென்பதைப் புறநானூறுபாடுகிறது. மார்க்கபோலனும் பிளினியும், தமிழ்நாட்டின் நாகரீகம், ஆட்சிமுறை, கல்வி, செல்வம், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றை வியந் துரைக்கும்படி செய்தது பொருள் நூல் வல்ல தமது தமிழரசரின் திறந்தானன்றோ! கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் மந்திரப்படலத்தில் கம்பர், மந்திரிகளின் அழகையும், மந்திராலோசனை செய்யப்பட்ட விவரத்தையும் தெரிவிக்கிறார். மந்திரை சூழ்ச்சிப் படலத்தில் வசிட்டர் இராமனுக்கு முடிசூட்டு முன் சொல்லும் இராஜதர்மத்தினின்றே, முற்காலத்தில் பொருள் நூல் எத்துணை சிறந்திருந்ததென அறியப்பெறுகிறோம்.

கோளு மைம்பொறி யுங்குறையப் பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர சேயர சன்னது
வாளின் மேல் வரு மாதவ மன்னனே.

என்று வாளினும் வலிய திறமுள்ள ஆட்சிமுறையே வசிட்டர் இராமருக்குச் சொல்லுகிறார். இம்மாதிரி உரைத்துக்கொண்டே செல்லின் கட்டுரை பெருகும். பல நூல்களில் அங்குமிங்கும் ஆட்சிமுறைகள் காணினும் அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு சாத்திரமாகக் கூறும் தமிழ் நூல்களில் தேவர்குறளே சிறந்தது.

திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என முப்பாலால் முடிந்தது. அறத்துப்பாலில் இல்லறம், வானப்பிரத்தம், துறவு இம் மூன்றையும் ௩௪ அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. பொருட்பாலில் அரசன், படை, குடி, கூழ் அமைச்சு என்பவற்றை ௭௦ அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. காமத்துப்பால் களவியல் ஏழு அதிகாரமும், கற்பியல் பதினெண் அதிகாரங்களு முடைத்து. இல்லறத்தையும் மன்னறத்தையும் வகுத்து, 'வையத்தில் வாழ்வாங்கு' வாழும் வகையையே திருவள்ளுவர் குறளில் முக்கியமாகக் கூறியிருக்கிறார். வள்ளுவர் காலத்தில் நாட்டில் ஏகாதிபதிகளே ஆண்டனர். அரசர் ஒருவருக் கொருவர் போர் செய்து, பிறர் நாட்டைப் பற்ற முயன்றுகொண்டிருந்தனர். போர்க் களத்தில் வாகை பெறுவதையே புகழென மன்னர் கருதினர். குடிகள்வறுமையற்று வாழவும், கல்வியும், வாணிபமும், கைத்தொழிலும், ஒழுக்கமும், சிறக்கவும் ஆண்டு, பிற நாட்டாரை வெல்ல, தோள்வலி வாள்வலிகளைப் பெருக்கினார்கள். அவர்களுடைய நீதி அமைச்சு, சுற்றம், போர்த்தொழில் முதலியவற்றிற்குத் தக்கபடி வள்ளுவர் பொருட்பாலை அமைத்தார். அப்போது உலகம் கருதியது மன்னராட்சி. இப்போது வேண்டிய மக்களாட்சிக்குத் தக்க நீதிகள் சிலவற்றையும் வள்ளுவர் தன் குறளில் அடக்கியிருக்கிறார்.

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு
உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்

என்று, பொது ஜனங்களின் விருப்பப்படி யாளுவதைக் குறிப்பிட்டார். வள்ளுவரின் பொருள்நூலை இனி முறைப்படி ஆராய்வோம்.

பொருட்பால், அரசியல், அங்கவியல், ஒழிபியல், என மூன்று பிரிவுள்ளது. அரசியலில் அரசனின் மாட்சி, அவன் அறியவேண்டிய கல்வி கேள்விகள், குற்றங் கடிதல், பெரியாரைத் துணைக் கோடல், சுற்றம், செங்கோன்மை, கொடுங் கோன்மை, அரசன் செய்யவேண்டிய முயற்சிகள் முதலியவற்றைக் குறித்து கூறப்படுகிறது. அங்கவியலில், அமைச்சின் லக்ஷணங்கள், வினை செயல்வகை, தூதருக் குரிய தந்திரங்கள், நாட்டின் உறுப்புகள், பொருள் செயும் வகை, படை மாட்சி, நட்பு, பகைத்திறந் தெரிதல், பெரியாரைப் பேணல், ராஜ சேவகருக் குரிய ஒழுக்கங்கள் முதலியவற்றைக் குறித்து சொல்லப் படுகிறது. ஒழிபியலில் சில ஒழுக்கங்களையும், உழவு இரவாமை, குடிசெயல் வகை, முதலியவற்றை அழகாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இனி ஒவ்வொருவிஷயமாக ஆராய்வாம்.

க. அரசன்

நீதி முறைப்படி ஆளும் மன்னவன் தெய்வத்திற்குச் சமானமாவான். தன் மந்திரிகள் குடிகளின் நலத்தின் பொருட்டு சொல்லும் சொற்களைப் பொறுத்து, ஆற்றி அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், முயற்சி, முதலிய குணங்களுடன், காட்சிக் கெளியனாய்ச் செங்கோல் செலுத்துபவனே நீதி மன்னன்;

"குடி தழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடி தழீஇ நிற்கு முலகு.

என்றபடி குடிகளின் மனதையே தன் மனதாய்க் கொண்டு அரசன் ஒழுக வேண்டும். வேதத்திற்கும், தர்மத்திற்கும், குடிகளின் ஒழுக்கத்திற்கும் களிப்பிற்கும், காப்பிற்கும்; மன்னவனின் கோடாக் கோலே காரண மாதலின்,

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி." என்றார்.

மன்னனுக்கு நீதியே வெற்றி தருவது, முறை கோடா மன்னனுக்குக் கொலைக் கருவிகள் வேண்டுவதில்லை என்பதை விளக்கியே,

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்" - என்றார்.

மன்னவன் உயிர்களுக் கெல்லாம் ஒரு உடம்பாவான். காளிதாசன் ரகுவம்சத்தில்சொல்லுவதுபோல், சூரியன், சமுத்திரத்தினிடம்உறுஞ்சி எப்படி ஆயிரம் மடங்காகப் பூமிக்கு மழையைத் தருகிறானோ அதுபோலவே மன்னனும் குடிகளிடமிருந்து போதுமான வரியைப் பெற்று அவர்களுக்கே பன் மடங்காகத் தருகிறான், குடிகளுக்கு வேண்டிய உணவும், உடையும், கல்வியும் ஈந்து காப்பாற்றுகிறதனால், பெற்ற தந்தையினும், அரசனே குடிகட்கு உண்மையான பிதாவாகிறான். அதுவன்றி தன்னயத்துடன், அச்சமுறுத்திப் பல் வரிகளால்

ஜனங்களின் செல்வத்தை யுறிஞ்சும் மன்னன்,

வேலொடு நின்றான் இடுவென் றது போலும்
கோலொடு நின்றான் இரவு

என்ற மெய்யுரைக்கேற்ப, வழிபறிப்பவனுக்குச் சமான மானவன். நாள்தோறும் முறைப்படி அரசாளாதவனுடைய நாட்டில் பல துயர்கள் புகும். தன் னிச்சைப்படி நல்லவர் மொழிகளைக் கேளாது மன்னன் நடப்பானாயின் அவன் பொருளும், குடியும், நாடும் ஒருங்கே கெடும். மக்கள் துயருற ஆளும் மன்னன் விரைவில் கெடுவான் என்பதை

"அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" என்று காட்டியிருக்கிறார் தேவர். மன்னனின் கொடுங்கோன்மை தாங்காது குடிகள் விட்ட கண்ணீரே, மன்னனுடைய செல்வத்தைத் துடைத்துவிடும். மன்னவன் முறை கோடின், வான் வழங்காது, ஆப்பயன் குன்றும், அந்தணர் வேதம் மறப்பர், தர்மம் பிறழும் உலகில் துயர் பெருகும். அல்லவை செய்தொழுகும் வேந்தன் கொலையை மேற்கொண்டாரினும்,கொடியன். ஆதலின் மன்னன் மன்முறையறிந்தே ஆளவேண்டும். மன்னனுக்கு வேண்டிய குணங்கள் இனியுரைப்பாம். கௌடில்யர் சொல்லுமாபோல்,

"உயர் நட்பு, ஒழுக்கமும், ஊக்கமொடு ஆக்கமும், கைத்திறல் அமைச்சனும் உள்ளவன் மெய்த்திறல் வேந்தன்" அரசன் ஐம்புலன்களையும் கவனத்தோடு காக்கவேண்டும். காமத்தினால் இராவணன் கெட்டான். மமதையால் அந்தணரை "சற்ப சற்ப" என்று இந்திரன் பிராம்மணன்,குரோதத்தினால் அரியோதனன் கெட்டான். சூதினால் நளன் அனைத்தையும் இழந்தான். பணக்காரருக்கு மிதமின்றி இடங்கொடுத்து ஏழைகளை நசுக்கியதால் பிரான்ஸ் தேசத்து லூயி மன்னனும், உருசியா தேசத்து ஜார் மன்னனும் வீழ்ந்தனர். தானே கடவுளிட மிருந்து குடிகளை ஆள உரிமை பெற்றோமென்று கண்டது செய்த ஆங்கில நாட்டு சார்ல்ஸ் கொல்லப்பட்டான். இரண்டாவது ஜேம்ஸ் நாடிழந்தான். ஆதலின் மன்னன் தன்னை ஒழுங்கு படுத்திக் கொண்டே குடிகளை ஆளவேண்டும்.

ஆதலின் அரசன் கல்வி கேள்விகளிற் சிறக்க வேண்டும். கல்வியே கேடில் விழுச்செல்வம், அதுவே மன்னனின் கண். கல்லாத மன்னனுக் குரைத்த நன்மொழிகள் அவர் நிலத்தில் விதைத்த விதை யொக்கும்.

கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று

ஆதலின் மன்னற்கு கல்வி முதன்மையானது. கற்றிலனாயினும், நல்லமைச்சர் சொல்வதைக் கேட்கவாயினும் வேண்டும். செவிச் செல்வம் மன்னர்க்கு ஆன்ற பெருமை தரும். அறிவைப் பெருக்கும். குற்றங்களை நீக்கும். அரசருக்குச் செருக்கும் சினமும் சிறுமையும் கூடாது. தன்னை வியப்போரையே அரசன் நம்பலாகாது. செயற்பால செய்யவேண்டும். பின்வருவதை எண்ணி கவனத்துடன் ஒரு காரியத்தைச் செய்தல் வேண்டும்.

அரசன் பெரியவர்களைத் தன் துணையாகக் கொண்டு அவர் சொற்படி நடத்தல் வேண்டும். நற் குலமும், கல்வியும், குணமும், அறிவும், ஆற்றலும், அன்பும், அனுபோகமும், தூய வாழ்க்கையு முள்ள பெரியோர்களை அரசன் எஜமான் போலும், தந்தை போலும் கீழ்ப்படிதல் வேண்டுமென்று கௌடில்யர் சொல்லுகிறார். அவர்கள் இடித்துரைப்பது இன்னுரையே யாகும்.

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

அரசன் சிற்றினஞ் சேராதிருத்தல் வேண்டும். மனத் தூய்மையும், செய்வினைத் தூய்மையும், இனத் தூய்மையாலே வரும். தூயோருடன் பழகினால்தான் ஒரு காரியத்தைச் சரிவர ஆராய்ந்து செய்ய அரசனால் முடியும்.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு."

அரசன், உலகம் என்னாதவற்றை எண்ணிச் செய்தல் முறையாகும்.

ஒரு வினைசெய்யும்போது மன்னன் தன் வலிமையையும், காலத்தையும், இடத்தையும், தெரிந்து தெளிந்து செய்தல் வேண்டும்.

"அளவறிந்து வாழா தான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்"
பகல் வெல்லுங் கூகையைக் காக்கை, யிகல்
வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.
ஞாலங் கருதினுங் கை கூடும் காலம்
கருதி யிடத்தாற் செயின்"

என்ற திருமொழிகளை ஆராய்க. தனக்கு வலியில்லாத போது கொக்குபோல் அடங்கி, தனக்கு ஏற்ற வலிவு வந்தபோது கொக்கின் கொத்துப்போல் இருக்க வேண்டுவது சிறந்த ராஜ தந்திரம்

அரசன் தன் சுற்றத்தாரை அன்போடு நடத்த வேண்டும். பழைய நட்பினரை மரியாதை செய்ய வேண்டும். பழகினவரை மறக்கக் கூடாது. கண்ணோட்டமோ டிருத்தல் வேண்டும்.

மண்ணோ டியைந்த மரத்தனையர்;கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.
மன்னனுக்கு ஊக்கமே ஆக்கம்.
"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்க்கு
உள்ளத் தனைய துயர்வு.

தன் முயற்சியால் செய்தற்கரியவெல்லாம் கைகூடும். முயற்சியால் ஊழ்வினையையும் வெல்லலாம்! முயற்சியில்லா மன்னன் அப்யாசமில்லாத மாணக்கன் போலாவான். தன் முயற்சியால் குடிகட்கு இன்பம் விளைவிக்க வேண்டும். தன்து நல் முயற்சிகளில் தனக்குத் துன்பம் வரினும் அவற்றைப் பொருட்படுத்தாது மன்னன் செய்தல் வேண்டும்.

வெள்ளத்தனைய விடும்பை யறிவுடையான்
உள்ளத்தி லுள்ளக் கெடும்.

என்றபடி, நல்ல அறிவுடன், முயலின் இடுக்கணெல்லாம் நினைத்த வளவிற் கெடும். தேர்ந்தெடுத்த ஒற்றரைக் கொண்டு விஷயங்களை அறிந்து அரசன் நடத்தல் முதன்மையானது. வினைத் தேர்ச்சியும், தன் சுற்றமென்று தாக்ஷிண்யம் பாராத் தன்மையும், அனைவரையும் ஆராய்ந்து பார்ப்பதும், சமயத்திற்கேற்ப நடிக்கும் ஆற்றலும் ஒற்றருக்கு இன்றியமையாத குணங்களாகும். இத்தகைய ஒற்றரைக் கொண்டு, தன் குடிகளின் குறைகளையறிந்து, அவற்றை நீக்கியாண்ட பொற்கைப் பாண்டியன் முதலிய பல தமிழ் வேந்தரைப் பற்றி நாம் அறிந்துள்ளோம். இனி அரசனுடைய அங்கத்தைப் பற்றி அடுத்த முறை எழுதுவாம்.

ஸ்ரீ ஸாவர்காரின் கடிதங்கள்

ஷேபாரின் உத்தரவு பெற்று மொழிபெயர்க்கப்பட்டது

[பாரத தேசத்தின் அபிநவ இதிகாசத்தில் கி.பி. கஅ0ரு—கஅகஉ வரையுள்ள காலம் அக்ர ஸ்தானத்தை வகித்து விளங்கும். இந்த காலத்தில்தான் பாரதஜாதி தனது இழிய அடிமை நிலையை உணர்ந்து அதைத் துண்டிப்பதற்காகக் கொதித்தெழுந்தது. நமது ஜாதியில் இந்த உக்ராவேசத்தை எரி மூட்டிய மூல புருஷர்களுள் ஸாவர்கார் சகோதரர்கள் தலைமை வகித்து விளங்குகிறார்கள். இவர்கள் மூன்று சகோதரர்களும் பாரத தேவியின் மும்மணிகள் ஆவர். இவர்களில் மூத்தவர் ஸ்ரீயுத கணேச பந்த ஸாவர்கார் கஅ0கூ ல் தீவாந்தர சிட்சை அடைந்தார். "கடைக்குட்டி" ஸ்ரீமான் பல்வந்த ஸாவர்கார்—இப்பொழுது வைத்தியர் ஸாவர்கார்—பத்தொன்பதாவது வயதில் மின்டோ பிரபுவின் மீது வெடிகுண்டெறிந்த வழக்கு சம்பந்தமாகக் கைது

செய்யப் பட்டிருந்தார். இச் செய்திகளை ஸ்ரீயுத கணேச பந்தரின் மனைவியார்—ஸ்ரீமதி யசோதாபாய் அவர்கள் சிறையிலிருந்த தனது மைத்துனர் ஸ்ரீ விநாயகராவ் தாமோதர ஸாவர்காருக்கு அறிவித்து ஒரு கடிதம் எழுதுகிறார். சிறையிலோ புரட்சி இயக்கங்களைக் கண்டித்து பத்திரிகைகளெல்லாம் எழுதி வந்ததுடன் "டைம்ஸ்" போன்ற பிரபல பத்திரிகை கூட ஸ்ரீமான் விநாயகராவ் ஸாவர்க்காரைத் தாக்கி எழுதி அவரை உடனே கைதுசெய்துவிடவேண்டும் என்று உறுமிக் கொண்டிருந்தன. இந்த ஸந்தர்ப்பத்தில் அடியில் வரும் கடிதத்தை ஸ்ரீமான் விநாயகராவ் தனது அண்ணியாருக்கு—வஹினீ என்பது மகாராஷ்டரப் பெயர்—அவசரமாக எழுதி அனுப்பினர். இதை எழுதும்போது அவருக்கு வயது இருபத்தைந்து]

க

அன்னையினும் மிக்க அன்புடன் என்னை ஆதரித்து வளர்த்த அண்ணியே! உனக்கு நமஸ்காரம். உனது அன்பில், நீ கொடுத்த செல்வத்தில், சிறுபோழ்தில் நான் இழந்த அன்னையையும் மறக்கடித்தாய். எனக்கு நீயே தாய், தமர், சுற்றம் எல்லாம். அன்பு கெழுமிய "வஹினீ!" உன் அடிகளை மீண்டும் தொழுகின்றேன்.

உனது ஆசீர்வாதம் தாங்கிய கடிதம் கண்டேன்: தியானத்தில் மூழ்கினேன்: உள்ளம் பூரித்தது; 'தன்யரானேம்' என்று நெஞ்சம் இறுமாந்தது.

நமது வம்சமே கிருதார்த்த மாகிவிட்டது; தன்ய மாகி விட்டது. மாருத உறுதியுடன் இறைவன் பணி யில் இன்று ஈடுபட்டது. "ராம ஸேவை"யின் புண்ணிய லேசத்தால் நாம் அனைவரும் தன்யராயினோம்.

பூக்கள் பூக்கின்றன; வாடுகின்றன; மண்ணில் உதிர்கின்றன. இதற்கு ஓர் கணக்கு உண்டோ! கவலைப் படுவார்தான் உளரோ?

அன்று முதலையின் வாயில் அகப்பட்டுக் கொண்டது யானை; ஓலமிட்டது; ஸ்ரீஹரி தோன்றினன். அவனது அடிகளில் ஓர் தாமரைப் பூவை யானை பறித்துச் சூடியது. யானையும் மோக்ஷம் பெற்றது. அந்தத் தாமரையும் நித்திய சோபையுடன், என்றும் வாடாத மேனியுடன் திகழ்கிறது. அந்த ஓர் மலர் செய்த பாக்கியம் தான் என்னே?

அந்த யானையின் நிலையில் இருக்கிறாள் நமது அன்னை பாரத தேவி. இவள், அடிமை முதலையின் வாயில் சிக்கி, இடர்ப்பட்டு நலிகின்றாள். விடுதலை பெருவாளாகி ஸ்ரீ ஹரியின் கருணைக்கு இறைஞ்சி நிற்கிறாள்.

அன்னவள் இன்று நம் பூங்காவனத்துள்ளே புகுந்தாள்; ஓர் நறு மலரைக் கொய்தாள்: ஸ்ரீ ஹரியின் சரணங்களில் சாத்தினாள்.

இந்த நம் பூந்தோட்டம் செய்த பாக்கியமே பாக்கியம். இதன் மலர்களில் ஒன்று ஸ்ரீ ஹரியினை அலங்கரித்து விட்டது. ராமஸேவையின் புண்ணிய லேசத்தால் நமது வம்சம் தன்யமாகி விட்டது.

அன்னாய்! நந்தன வனத்திலே இன்னும் பல பூக்கள் மலர்ந்திருக்கின்றன. நாளை, அவைதாமே மண்ணில் உதிர்ந்து அழிந்துபோம். இன்றே எஞ்சியுள்ள அவ் வனைத்தையும் நீ கொய்து கொண்டுவிடுவாயாக. ஸ்ரீ ஹரியின் அடியிணைகளில் உடனே அவற்றை சமர்ப்பணம் செய்யக் கடவாய். அப்பால் அவை மணம் அறா: மேனி துவளா; என்னென்றும் நறு மணம் கமழும். ஸ்ரீ ஹரியின் சரணங்களை அலங்கரித்து வாடிய மலர்களைப் பூத்த நந்தன வனமும் அழிவுற்றதாமோ?

நவராத்திரி விழா வருகிறது. நமது இறைவிக்குப் பூஜை செய்ய வேண்டும். ஒன்பது நாளும் ஒன்பது செம்மாலைகளைச் சூட்டித் தொழக் கடவாய். என்னருந்தாயே! பூஜைக்கு வேண்டிய பூக்களை பூங்கா வனத்தினின்றும் யதேஷ்டமாகப் பறித்துக் கொள். ஒன்பது ஆரங்கள் தொடுத்து, நம் இறைவிக்குச் சாத்தி பயபக்தியுடனே பூஜையை முடிக்கக் கடவாய். பூஜை முடிவில் நம் குலதேவி காளி ஆங்கு தோன்றுவாள். விஜய லக்ஷ்மி ஆவாளும் அவளே! ஆதலால் உனக்கு உடனே வெற்றி நல்கி விடுவாள்!! வாழி எம்மிறைவி!!!

ஆதாரம் மிக்க வாஹினீ! என்னுடைய வீர்ய லக்ஷ்மி நீயே. உன்னை நினைத்த மாத்திரத்திலே விழுமிய தோற்றங்கள், தூய உணர்வுகள், எதற்கும் அஞ்சாத துணிவு இவை எனது ஹிருதயத்திலே 'ஸ்புரி'க் கின்றன. எனவே, எனக்கு 'ஸ்பூர்த்தி'யும் நீயாகவே திகழ்கிறாய். இந்த மகத்தான ஸேவையில் எங்களை இறக்கிவிட்டு நீ நின்றுவிடவில்லை. நீயும் ஸேவா தாரந்தரையாகிக் காப்புக் கட்டிக்கொண்டு இறங்கியிருக்கிறாய்.

தகைமையும் பெருமையும் சான்ற இப் பாணியில் முற்பட்ட நீ, தகைமையும் பெருமையும் சால்பும் மங்காது ஒழுகுதல் கடனும்.

இன்று நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பதைப் பார்க்க தேவரும் மற்றவரும் குழுமி இருக்கிறார்கள். ஒரு சார் பண்டைக்காலத்து ரிஷீசுவரர்கள், தபோதனர்கள், வீரர்கள் கூடியிருக்கின்றனர். மறுபக்கம் வருங்காலத்தின் கர்ப்ப கிரகத்தில் நின்றும் இனிப் பிறக்கப் போகும் ஸந்தானங்கள் எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றன. இவ் விருவருக்கும் மத்தியில் இன்று நாம் நிற்கிறோம். இவர்களனைவரும் நன்று நன்று என கர்ஜிக்கும் வண்ணம் இருக்க வேண்டும். நாம் நடந்துகொள்ளும் பான்மை போதிய ஆற்றலைத் தருமாறு இறைவனை வழுத்துவோம்.

( )

வைத்யுதம்

(ரா. அனந்தகிருஷ்ணன் எழுதுவது)

எத்தனையோ ஆயிரம் தலைமுறைகள் இவ் வைத்யுதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே தம் வாழ்நாட்களை இவ் வுலகத்தில் கழித்து விட்டிருக்கின்றன. இந்த வைத்யுதம் இன்று பிறந்த ஒரு நூதன சக்தியன்று. வேதத்தின் காலமான் புதியதென ஒன்று இவ் வுலகத்திலேயே ஏதும் இல்லை என்று சாற்றினான். அது போல இவ்வுலகம் தோன்றிய நாள் தொட்டு இந்த வைத்யுத சக்தியும், அனைப ஓஜஸ் ரகளும் உடப் பொருள்களும் இருந்து வந்திருக்கின்றன.

ஆதி நாட்களில் நாகரிகத்திலும் கல்வியறிவிலும் முதிர்ந்து உலகத்திற்கே உன்னத ஸ்தானம் வகித்து வந்த கீழ்ப்பிராந்தங்களில் உள்ள வித் ஞானிகளுக்கு இவ் வத்புத சக்தியைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் இருந்திருக்க முடியும் என்று நம்புவதற்கு இடமே யில்லை. இருந்தாலும், அவர்களுக்கு என்ன தெரிந்து இருந்தது என்பதை நிரூபணம் செய்யப் போதிய சான்றுகள் இன்று நம்மிடம் இல்லையாதலால், இருக்கிற சான்றுகளை வைத்துக்கொண்டுதான் ஊகிக்க

வேண்டியிருக்கிறது. அக்காலத்தில் இருந்தவர்கள் மாய ஜால வித்தைகள் பல செய்து வந்ததாகத் தெரிகிறது. இவற்றில் காந்த சக்தியையும் வைத்யுத சக்தியையும் அவர்கள் தமக்குத் துணைகளாகக் கொண்டிருந் திருக்கலாம். மாய ஜாலங்கள் செய்வதற்காக துல்லன் ஔஸ்தீலியன் என்பவனைத் தன் வஜ்ராயுதத்தால் யோவான் தேவன் நாசஞ் செய்துவிட்டான் என்று ஒரு புராதனக் கதை இருக்கிறது. இதனையே வேறு விதமாகத் தற்காலத்தில் திரித்துக் கூறுவர். பராங்கலன் பிரகிருதிகளைப் போல, இவனும் இடியும் மின்னலும் கூடிய ஒரு புயலில் வைத்யுத சோதனைகள் செய்து பார்த்திருக்கலாம். அப்பொழுது ஸகஜமாக நேரக் கூடிய அதிர்ச்சியினால், கம்பனத்தினால் அவன் இறந்து போயிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இது எவ்வாறேனும் ஆகுக. திட்டமான சான்றுகளோடு கூடிய செய்திகளை நாம் ஆராய்வோம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் செல்ல வேண்டும். அப்பொழுது சீனர்கள், தங்கள் வியாபாரக் கூட்டங்கள், (காரவான்கள்), திக்குத்திசை தெரியாத தார்த்தாரி வனாந்தரங்களின் வழியே செல்லும் பொழுது வழி தப்பிப் போகாமல் இருப்பதற்காக, தங்களுக்கு முன்னே காத்தாடி போல் சுழன்று கொண்டிருக்கும் ஒரு உருவத்தின் நீட்டியகையில் ஒரு விதக் கல்லைத் தொங்கவிட்டு, அதைப் பார்த்துத் தம் வழியை நிச்சயம் செய்து கொண்டு செல்வர் என்று எழுதி வைக்கப்பட்ட ஓர் சாஸனம் இருக்கிறது. இக் கல்லை எந்த இடத்தில் எந்த ஆண்டு தேதிகளில் அவர்கள் கண்டு பிடித்தார்கள் என்று நம்மால் திட்டமாகச் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று. இவர்கள் கண்டுபிடித்த இந்த விஷயத்தை வைத்யுத ஞானத்தின் ஜன்மஸ்தானமாகச் சொல்ல வேண்டும். இன்னும் சிலர் கி.மு. உசு00 லேயே இதைப் பற்றிச் சீனர்களுக்குத் தெரியும் என்றும் வழிகாட்டிக்கல் அல்லது மார்க்கதரிசி சிலை என்பது இதன் பெயர் என்றும் கூறுவர். ஆனால் இது, உண்மையில், ஒருவித அயப்பொருள். பூமியின் காந்த சக்தியிலிருந்து இதற்கும் காந்த சக்தி வந்திருக்கும். இது பூமியின் பல பாகங்களிலும் அகப்படும்.

இவ் வதிசயமான கல்லைப்பற்றிக் கேட்டதும் அந் நாளில் இருந்த அறிஞர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல்லை மாதிரிக்கு சம்பாதித்து வைத்துக் கொண்டிருப்பர். யாராவது ஒருவர், இது இரும்புத் துண்டுகளை ஆகருஷிக்கிறது என்றும், இங்ஙனம் ஆகருஷிக்கப் பட்ட இருப்புத் துணுக்கு, பிடிவாதத்துடன் அந்தக் கல்லில் பற்றிக்கொண்டிருப்பதையும் கவனித்து இருப்பர். ஆனால் ஒவ்வொரு பொருளிலும் ஆத்மா இருக்கிறது என்பது அவர்களுடைய மதமாக இருந்தால் —ஆதுனிக ஐரோப்பியரது மதம், இதுவன்று; மனிதனுக்கு ஆத்மா இருப்பதுவே சந்தேகம், வரவர இந்த திருஷ்டி மாறி வருகிறது—இந்தக் கல்லுக்கு ஜீவனும் இருக்கிறது என சமாதானம் செய்துகொண்டு திருப்தியுடன் அமர்ந்திருப்பர். இந்த சமாதானம் சரிதானா வென்று சோதனை செய்து நிர்ணயம் செய்யத் தவறிவிட்டனர்.

அடுத்தாற் போல இந்தக் கல்லை ஒரு கயிற்றினால் கட்டித் தொங்கவிட்டுப் பார்த்திருப்பர். அப்பொழுது எத்தனை தரம் ஆட்டிவிட்டாலும் திரும்பத் திரும்ப ஒரே குறித்த நிலையிலேயே வந்து நிற்பதைக் கண்டு கொண்டிருப்பர். எப்பொழுதும் அந்தக் கல் ஒரே படித்தாகத் தென் வடல் திசையிலேயே வந்து நிற்கிறதெனக் காண்பர்.

இதற்கும் மேலாக ஒரு படி அவர்கள் சென்றிருக்கலாம். இந்தக் கல்லைக் கொண்டு இ[illegible]

மாதிரித் தன்மையுடையதாக இருப்புத் தகடுகளைச் செய்து விடலாம் என்றும் கண்டிருப்பர். ஒரு இருப்புத் தகட்டை எடுத்துக் கொண்டு அதை இந்தக் கல்லில் பல தடவைகள் தேய்த்தால், அவ்வாறு தேய்க்கப்பட்ட இந்தத் தகடும் வேறு இரும்புத் துணுக்குகளை சுயமாக ஆகருஷிக்கவோ, அல்லது தெற்கு வடக்காக மாறாமல் நிற்கவோ செய்வதையும் கண்டு கொண்டிருப்பர். இதனால், முதற் கல்லுக்கு எவ்வித நஷ்டமும் நேராமல் அது முன் போலவே தன் சக்தியைப் பூரணமாக வைத்துக் கொண்டிருக்கிறது என்பதும் அவர்களுடைய திருஷ்டியில் படாமலிராது. அக் காலத்தில் மாக்னேசியா என்ற நாட்டிலேயே இது அதிகமாகக் கிடைத்து வந்ததால், அந் நாட்டின் பெயரால் இப் புதிய இரும்புத் துண்டுகளையும் மாகனிதம் என்ன வழங்கி வந்தனர்.

சுமார் கி.மு. சு00ல் ஒரு கிரேக்க ஞானி வேறு ஒரு விஷயத்தைக் கண்டு பிடித்து வைத்திருந்தனர் எனத் தெரிகிறது. அவர் கண்டு பிடித்ததற்கும் இந்த வழி காட்டிக்கல் சோதனைகளுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை என்று நெடுநாள் வரை நம்பப்பட்டு வந்தது. அந்த ஞானியார் 'அம்பர்' என்ற ஒரு வித போஷணத்தை ('பைன்' என்று சொல்லப்படும் ஒரு வகை மரத்தின் பிசின் இக் காடுகள் அழிந்து மண்ணுக்குள் ஆழத்தில் புதைபட்டு, இவற்றின் பிசின் அடியிலுள்ள வெப்பத்தால் உலோகத் தன்மையை அடைந்து விட்டிருக்கும். உலோகத் தன்மை அடைந்த இந்த பிசினுக்கே அம்பர் என்று பேர்) சூடு பிறக்க நன்கு உரைத்தால், காகிதத் துண்டுகள் வைக்கோல்த் துரும்புகள் போன்ற மிகவும் இலேசான பொருள்களை ஆகருஷிக்கிறதெனக் கண்டனர். இதற்கு 'அம்பர்' தான் வேண்டும் என்பதில்லை. முத்திரை போடுதற்குரிய அரக்கை சட்டையின் கைப் பட்டைகளில் தேய்த்துப் பார்த்தாலுங் கூட இலேசான பொருள்களை இழுக்கக் காணலாம். இரும்பு ஒன்றை மட்டும் ஆகருஷிப்பதால் வெளிப் பார்வைக்குச் சம்பந்தமில்லையெனத் தோன்றினாலும், வழி காட்டிக் கல்லுக்கும் இந்த 'அம்பர்' பரீட்சைக்கு முள்ள நெருங்கிய சம்பந்தத்தைத் தெரிந்து கொள்ளாமல் வைத்புத ஆராய்ச்சியில் நெடுந்தூரம் நாம் செல்ல முடியாதெனக் காண்போம்.

இவ் வாதி நாட்களை விட்டால், இடையில் நில்லாமல் ஒரே அடியாக 'ஆதுனிக' காலத் துவக்கத்திற்கு வந்து விடுகிறோம். எலிசபெதையின் ஆட்சி காலத்தில் (கி.பி. கசு00) வைத்தியர் கில் பெருதோன் என்ற ஒரு பெரிய மேதாவி, இந்த வழிகாட்டிக் கல்லையும் அம்பரையும் கொண்டு பல பரீட்சைகள் செய்து பார்த்தனர். இவருக்குப் பின்னர் உடனே தொடர்ந்து வேலை பார்ப்பதற்கு ஆள் இல்லாமல் இருநூறு ஆண்டுகள் இவருக்கப்பால் வீணே கழிவதாயிற்று.

'கோல் செஸ்தர்' என்ற இடத்தில் வாழ்ந்து வந்த கில் பெருதோன் எனும் வித்பன்னர், அம்பரைத் தேய்ப்பதால் பிறக்கிற சக்தி வேறு பல பொருள்களைத் தேய்ப்பதாலும் பிறக்கிறது என்ற உண்மையினை நிலை நாட்டினார். ஏன்? ஏற்ற இடம் பொருள் ஏவல்கள் மட்டும் வாய்த்துவிடுவதானால், எந்தப் பொருளினின்றும் இந்த சக்தி பிறக்கும்படி செய்து விடலாம். ஆனால் ஒன்று ஒரு பொருளிடத்து இது அதிகமாகப் பிறக்கும்; அடுத்ததில் குறைவாக இருக்கும், இவ்வளவு தான் வித்தியாசம். துணி துடைக்கும் தூரிசில் அட்டைக் கடிதத்தை மிகவும் வேகமாகத் தேய்த்து இச் சக்தி பிறப்பதை ஒருவர் சோதித்துக் கண்டிருக்கிறார். சாதாரணமாக ஆக்நேய, கிரிஜத்தை * பூனைத்தோலில் தேய்த்தாலும் அல்லது கண்ணாடியைப் பட்டினால் தேய்த்து

* Vulcanite

உத்தீபனம் செய்தாலும் இச் சக்தியின் செயலை நிதரிசனமாகக் கண்டுகொள்ளலாம்.

'அம்பர்' என்பது கிரேக்க பாஷையில் 'எலெக்ட்ரன்' எனப் பேர்பெறும். இந்த அம்பர் சோதனையின் ஞாபகார்த்தமாகத்தான் வைத்யுதத்திற்கு 'எலெக்ட்ரிஸிடி' என்று பேர் கொடுக்கப்பட்டது.

இப்பால் நாள் ஏற ஏற மேற் சொல்லிய பரீட்சைகளின் மூலமாகக் கிடைத்த சக்தியை அதிகமாகப் பெறுவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டிருக்கும். கையினால் தேய்ப்பதற்குப் பதிலாக யந்திரத்தின் மூலமாக இவ் வேலையைச் செய்யப் பார்த்திருப்பர். முதன் முதலாக ஒரு ராட்டினத்தின் கதிரின் நுனியில் ஒரு கந்தக உருண்டையை வைத்துச் சுற்றிவந்தார்கள். அந்த கந்தக உருண்டையில் உராய்த்ததற்குச் சோதனை செய்பவன் கைதான் உபயோகப் படுத்தப்பட்டது. கந்தக உருண்டைகளுக்குப் பதிலாகக் கண்ணாடி உருண்டைகளை உபயோகப்படுத்தி வந்தனர். இம்மாதிரி சர்வ சாமானியமான யந்திரத்தை வைத்துக்கொண்டுகூட வைத்யுத ஜ்வாலையை * உண்டாக்கினர். இப்படிச் சுழன்றுகொண்டிருக்கும் இந்த உருண்டைகளினின்றும் வைத்யுத சக்தி ஏறப்பெற்ற வைத்யுதீகரிக்கப் பட்ட இரண்டு பொருள் ஒன்றோடொன்று நெருங்கும் பொழுது, உந்திக்கொண்டு விலகிச் சென்று விடுகின்றன என்று அக் காலத்தியவர் கண்டனர். இப்படி ஒரே மாதிரியாக வைத்யுதீகரிக்கப்பட்ட இரண்டு பொருள்களை ஒன்றையொன்று நெருங்கவொட்டாமல் எற்றித் தள்ளி விலக்கும் வினையை விகருஷணம் என்று அழைப்போம் ஆனால் இப் பொருள் தனியே இருக்கும்பொது வழக்கம்போல, சிறு பொருள்களை ஆகருஷிக்கின்றன.

* Spark

இன்னும் ஓர் சோதனையும் முன் காலத்தில் செய்து பார்க்கப்பட்டிருக்கிறது. இச் சக்தியை ஓர் இடத்தினின்றும் பிறிதோர் இடத்திற்கு மாற்ற முயற்சி செய்து சிறிது வெற்றியும்பெற்றனர். ஒரே வரிசையில் ஒன்றோடொன்று தொட்டுக் கொண்டிருக்குமாறு பல நூல்களைத் தொங்கவிட்டு ஒரு கோடியில் வைத்யுத சக்தியை விசர்ஜனம் * செய்ய மறுகோடியில் சிறு காகிதத் துணுக்குகள் ஆகருஷிக்கப்படுகின்றனவென்று கண்டனர். இவ்வாறு சுமார் ஐந்நூறுமுழம் வரை இந்த சக்தியின் வேகம் பாய்கிறதெனத் தெரிந்து கொண்டனர். நூலை நனைத்துத் தொங்கவிட, எண்ணூறு, ஆயிரம் முழம் நீளம் வரைகூட இது பாயும் என்பதும் விளங்கிற்று.

சிறிய யந்திரங்களைக் கொண்டு திருப்தியடையாமல் பெரிய யந்திரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவ் யந்திரங்களினின்றும் பிறக்கும் சக்தியைச் சேகரித்து வைத்துக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இம்மாதிரி உத்தீபனமாகும் வைத்யுதத்தைச் சேகரித்து வைத்துக் கொள்ளும் யந்திரங்களை "உத்தீபன யந்திரங்கள் அல்லது ஸ்தாயி யந்திரங்கள்" என்று சொல்லலாம். இரண்டு 'ஆக்நேயகிரிஜம்' தட்டுகள் நிறைய உலோகத் தகடுச் சின்னங்களைப் போட்டு ஒன்றுக் கொன்று எதிராகச் சுழலும் படி செய்வதையே மேற் சொல்லிய உத்தீபன யந்திரம் ஆகும். மூன்றடி குறுக்களவு உள்ள சக்கரங்களைக் கொண்டவையான யந்திரங்கள் நூற்றறுபது வைத்துக் கொண்டு ஒரு பிரபு தன் சஸ்திர சாலையில் சோதனைகள் செய்து பார்த்தனர். அத்தனை யந்திரங்களும் ஒன்று போலச் சுழன்று வரும் பொழுது அவற்றினின்றும் வைத்யுதசக்தி இடிமுழக்கம்போன்ற பேரொலியுடன் கிளம்பும்; பக்கத்தில் நின்றால் அதிர்ச்சி மிகப் பலமாயிருக்கும்; சற்று இளைத்த சரீரங்

* Dischrrge

களுக்கு அவற்றைத் தாங்க முடியாமலும் போய் விடலாம்.

தற்காலத்தில் செய்யப்படும் யந்திரங்களில் சின்னங்களை நிரப்புவது கிடையாது. தகடுகளை மட்டும் தான் தனியாக வைத்துக்கொள்வார்கள். இப்படி வைத்துக் கொண்டாலும் நல்ல பயன் கிடைக்கும். இம்மாதிரியான யந்திரங்கள் சரித்திர ரீதியாகவும் ஆராய்ச்சி முறையாகவும் பயன்படுமே அல்லது வாழ்க்கைக்கு சிறிதும் பயன் தரா.

இன்று நாம் வைத்யுதத்தின் மூலமாக அனுபவிக்கும் வைபவங்களெல்லாம் சாத்தியமாயது ஸ்தாணு வைத்யுதத்தால் அன்று; மற்று சுரோத வைத்யுதத்தாலேயாம். சுரோத வைத்யுதம் இல்லாமல் ஸ்தாயிவைத்யுதம் ஒன்று தான் நமக்கிருப்பதெல்லாம் என்றால் வைத்யுததீபம் லிகிதவகனி சப்தவகனி இவைகளின் பெயர்களையே கேட்டிருக்க முடியாது. ஆதலால் சுரோத வைத்யுதம் பிறந்த வரலாற்றையும் இங்கு ஆராய்வோம்.

)*( )*(

சங்கீதம்

இசைப் பெருமையும் நாதமும்

(ரா. முத்தையர் எழுதுவது)

தேவர்கள் தோத்திரங்களாலும் யோகிகள் யோகங்களாலும் ரிஷிகள் தபஸினாலும் எப்படிப் பகவானைத் தெரிந்து அவரை அடைகின்றார்களோ அப்படியே சங்கீத ரசிகர்களும் சங்கீதத்தின் வழியாக பகவானைத் தெரிந்துசேருகிறார்கள் என்று ஆன்றோர் நூல்களில் துணிவு கூறுகின்றனர். முன்னொரு காலத்தில் இராவணன் திக்குவிஜயம் செய்து வந்து நெற்றித் தனிக் கண் சுடர்விடு கற்றைச் சடையுடை பவள மேனி உமையொரு பாகத்திறை இனிது வீற்றிருக்கும் கைலயங்கிரியை, தனது வீரத்தாலும் தோள்வலியாலும் வேரோடு பிடுங்கி எடுக்கக் கடவுள் அடங்காக் கடுஞ் சினத்தோடு தனது காற் பெருவிரல் கொண்டு சிறிது அழுத்த, பொறுக்காதவனாய் இராவணன் பலவாறாக நாத் தழும்பேறத் துதித்தும் அருளாதது கண்டு பிறகு தான் அருமையாகக் கற்ற சங்கீதத்தைப் பெருமையாக யாழோடு சேர்த்துப் பாடக் கேட்ட ஏறூர்ந்தோனாகிய இறைவன் உகந்து அடங்கா மகிழ்ச்சி கொண்டு வேண்டிற் ஆசி அருளினர். இப்படிக் கொத்த இராவணனை குறுமுனியாகிய அகத்திய முனிவர் தாம் உறையும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பொதிகை மலையின்கண் வாராதபடி போக்கினர் என்பது

"தென்னவன் பெயரிய தன்னருந் துட்பின்
தொன்முது கடவுள்"

என்னும் மதுரைக் காஞ்சியடிகளின் உரையில், ஆசிரியர் உச்சிமேற் புலவர் கோள் நச்சினார்க்கினியர் "இராவணனைத் தமிழ் நாட்டை யாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன்" எனக் கூறும் உரையால் அறியப்படும்.

இவர் எவ்வாறு இராவணனை தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கினர் என்றால்—"க்ஷத்திரிய பலம் துர்ப்பலம் ப்ரஹ்மதேஜோ பலம் பலம்" என்கிறபடி அகத்திய முனிவர் அரும்பெருந் தபோ வன்மையுடையவர். இராவணனோ "அக்னிகோத் ரௌவ்வாஸனந்ச ராக்ஷ ஸானம்

க்ருஹே க்ருஹே"—என்கிறபடி வேதாகமங்கள் முறையாக நடத்தும் அரக்கர்களின் தலைவன், தவிர ஈசனிடம் அழியா வரங்களும் அளவிறந் தன வேண்டியவன்—பிரமன் முதல் தேவர்களை ஏவலாளிகளாக வைத்தவன். இப்படிப் பட்ட வனை தவத்தால் வெற்றி கொண்டு பிணித்தல் அரிது பற்றி, தனது அருமையான மனோ நிலைமைக்குச் சாதகமான 'கந்தர்வம்' என்னும் இராகத்தைப் பாடி, பொதிகை மலையை உருகச் செய்து அவ்விடமிருந்த இராவணனைப் பிணித்தார் என்பது 'இசைக் குருகப்படு சிலை' என்ற தஞ்சை வாணன் கோவை நசநு -- வது பாட்டுக்கு அஷ்டாவதானி சொக்கப்ப நாவலர் அவர்கள் "இராவணன் பிணிக்கக் குறு முனிபாடும் இசைக்கு உருகப்பட்ட பொதியமலை" என்ற உரையானும், தொல்காப்பியம் உரையாசாரியர் உரையானும்

"இனிய பைந்தமிழின் பொதியமால் வரை போல்
இசைக் குருகா திம மலையின்
தனையையின் தீஞ்சொற்கு உருகுறும் சோண
சைலனே கைலை நாயகனே

என்ற சோண சைல மாலையில் சிவப்ரகாச ஸ்வாமிகள் கூறுவதாலும் பிறவாற்றாலும் இச் சங்கீதத்தின் அரும் பெரும் தெய்வத் தன்மை நன்கு விளங்கும்.

உலகத்தவர்க்கு நீர் அமிர்தம், ஆராய்வோருக்குப் பொருளமிர்தம், ஓவியர்க்கு உருவம் அமிர்தம், அது போல நாவோர்க்கு இசை அமிர்தம் என்ற ஆன்றோர் கூற்றை "நாவினுளமிர்தம் கேட்டு" என்று திருத்தக்க தேவர் வற்புறுத்துகிறார். "பருந்தும் நிழலும்போல் பாட்டும் தாழும்" ஆகிய சங்கீதத்தைக் கேட்கிறவர்கள் நிலையைக் கூறுமிடத்து.

விண்ணவர் வயப்ப, விஞ்ச
வீரர்கள் விரும்பி யேத்த,
மண்ணவர் மகிழ வான்கட்
பறவைகள் மகிழ்ந்து சோர
வண்ணரு ளனங்க ன்னாணப்
பாடினன் அரச ரெல்லாம்
பண்ணமைத் தெழுதப்பட்ட
பாவைபோ லாயினாரே.

என்று கூறுகிறார். இதனாலே இராகங்களில் சிறிதும் வழுவாமல் இயற்கை யளவாக அதாவது.

"உள்ளானம் விந்துவுடன் நாதம் ஒலியுருட்டுத்
தள்ளாத தூக்கெடுத்தல் தான் படுத்தல்—மெள்ளக்
கருதி நலிதல்கம் பித்தல் குடிலம்
ஒருபதின்மே லொன்றென் றுரை"

என்ற குண இலக்கணங்களில் சிறிதேனும் இடைவுறாமல்,

"கண்ணிமையாக் கண்டங் துடியா கொடிறசையா
பண்ணளவும் வாய்தோன்றா பல்தெரியா—எண்
[ணிலவை
கள்ளார் நறுந் தெரியற் கைதவனே கந்தர்வர்
உள்ளாளப் பாடல் உணர்"

என்கிற குற்றங்களில்லாமல் பாடும் தெள்ளமிர்தத் தீந்தேன் இசைப் பாட்டிற்கு அமையாத பலனும் அருளாத கடவுளும் இன்புறாத உயிர்களும் உளவாகுமோ?

நிற்க உலகத்தில் தோன்றின ஜீவராசிகளில் பெரும்பாலன இசைஞான முடையன என்பது

சிசுர் வேத்தி பசுர் வேத்தி
வேத்தி கான ரஸம் பணி:

என்றதனால் அறியப்படும். அதாவது குழந்தைகளும், பசுக்களும், பாம்புகளும் இசையின் ரஸம் அறிகின்றன. சான்றாக நமது வீடுகளில் குழந்தைகள் அழுகையைத் தீர்க்கவும், தூக்கம் செய்ய

வேண்டிய சமையத்தும் தாராட்டு முதலியவை கள் பாடுகிறார்கள். குழந்தைகளும் அதை (அவ்விசையை)ப்ரம்மானந்தமாக அனுபவித்துக் கொண்டு அழுகையை நிறுத்துவிடுகிறது—அல்லது நித்திரை செய்துவிடுகிறது. பாம்புப் பிடாரனும் பாம்பாட்டும் பொருட்டு இரண்டு மூன்று ஸ்வர த்வாரங்கள் அமைத்த தித்தியை வைத்து ஊதுகிறான், பாம்பும் அதற்கிசையப் படம் எடுத்து ஆடுகிறது. பசுக்கள் சங்கீதத்தை அறிகிறது என்பது கண்ணபிரானது அமிர்தமான குழலோசையைக் கேட்டு

"மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து
மேய்த்த புல்லும் கடைவாய் வழி சோர
இருண்டு பாடும் ஆலுங்காப் புடைபெயரா
எழுது சித்திரங்கள் போல நின்றனவே

என்றும், ஓரறிவான மரங்களும் அவரது குழலிசை ஓசையைக் கேட்டு

மரங்களினின்று மது தாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்ற நின்ற
பக்கம் நோக்கி யவை செய்யும் குணமே

என்றும் பிறவும் ஆழ்வாராதிகள் பாசுரங்களிலும் பாகவதம் முதலிய பல நூல்களிலும் பாக்கக் காணலாம்.

சான்றாக இங்கு என் அனுபவத்தில் நிகழ்ந்த ஒன்று குறிக்கின்றேன். அதை கூறாதிருக்க என் மனம் துணியவில்லை. அறிஞர்கள்—அன்பர்கள் அனைவரும் அது புகழ்ச்சியென்றும் மிகை என்றும் கொண்டு மறுக்க மாட்டார்களென்றும் நம்புகிறேன்.

(இரு மாதங்களுக்குமுன் நான் ஒரு நாள் மாலையில் சுமார் ஐந்துமணி சமயம் வீட்டில் 'பிடில்' வாசித்துக் கொண்டிருந்தேன். தற்செயலாக மேயப் போயிருந்த கறவைப் பசுவானது வீட்டிற்குத் திரும்பி வந்தது. நான் வாசித்துக் கொண்டிருக்கிற வழியாகத்தான் அதற்குத் தொழுவுக்குப் போக வேண்டும். பசுவானது நான் வாசித்துக்கொண்டிருக்கும் இடம் வந்ததும், அது என் நேராகத் திரும்பி நின்றுகொண்டும், நான் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு ஒரு முழம் இடைவிட்டு முகத்தைச் சிறிது கீழே சாய்த்துக் கொண்டும், காதுகளை ஆட்டாமலும் சந்தடி செய்யாமலும் வெகு கூர்மையாகப் பார்த்துக்கொண்டும், கவனமாகக் கேட்டுக் கொண்டும் நின்றது. அப்படியே ௩௦ நிமிஷங்கள் வரையிலும் நின்றது. கடைசியாக உறவினர் ஒருவர் வந்து பசுவைத் தூரத்திக்கொண்டு சென்றனர். அன்று முதல் என்மனதில் பசுவும் இசையறியும் எருதும் இசைகேட்டு உழும் பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்ற நம்மனோர் பழமொழி வேரூன்றிக் கொண்டது)

இதில் ஓர் ஐயம் நிகழலாம். அதாவது சிசு பசு, பாம்பு, இவைகள் மட்டும்தானோ இசை ரசம் அறியும்?—மானிடர் அறியமாட்டாரா? என்பதே. "மாவும் மாக்களும் ஐயறிவினவே மக்கள் தாமே ஆறறி உயிரே" --என்கிறபடி சிசு, பசு, பாம்பு, இவைகள் முறையே ஒன்றைவிட ஒன்று ஒவ்வொரறிவு குறைந்தவைகளாம். அங்ஙனம் அறிவு குறைந்தவைகளே இசையின்பம் அடையுமானால்; ஆறறிவான பகுத்தறிவோடு கூடின மானிடர் அளவு கடந்து சங்கீத ரஸம் அனுபவித்து இன்பமடைவார்களென்பது புலப்படுகிறது.

இப்படி இயற்கையாக "கருவிலே திருவுடையீர்" என்பதுபோல உயிரோடு ஒட்டியிருக்கிற ஞானத்தை வளர்ப்பதுஒவ்வொரு மனிதருடையவும் கடமையாகும். அப்படிப் பழக்கத்தில் அந்த

ஞானத்தை வளர்க்கவில்லையானால் சங்கீத சாஹித்யங்களைக் கேட்டு ஆனந்திக்கவும் முடியாது— பாடவும் சாத்தியமாகாது—ஏற்பட்டிருக்கும் ஞானமும் முனைமழுங்கிப் பாழ்படும். அங்ஙனம் ஞானமில்லாதவனை

ஸங்கீத ஸாஹித்ய ரஸான பிக்ஞ
ஸாக்ஷாத் பசுப்புச்ச விஷாணஹீன

என்றபடி "கொம்பும் வாலும் இல்லாத பசுவிற்கு சமானமாகிறான்" என ஆன்றோர் கூறியிருக்கின்றார்கள்—தவிர ஓர் ஆங்கில மகாகவியானவர், "கான ரஸிகனாய் இல்லாதவன் கொலைக்கும் அஞ்சான்" என்று சொல்லுகிறார். அதாவது சங்கீதத்தில் ருசியில்லாதவன் கொலை பாதகனாவான் என்பதே.

மேற்சொன்ன காரணங்களால் இப் பெருமை பொருந்திய சங்கீத ஞானத்தை அனைவரும் வளரச் செய்யவேண்டு மென்பதும், அதன் வழி வேண்டும் பலன்களை அடைய வேண்டும் என்பதும் தோற்றமாம்.

இவ்விதச் சிறப்புப் பொருந்திய சங்கீதமானது மார்க்க சங்கீதமெனவும் தேசிய சங்கீதமெனவும் இரு வகைப்படும். மார்க்க சங்கீதமானது பிரம்மாவினால் சங்கற்பித்து கைலயங்கிரியில் எழுந்தருளி யுறையும் சிவபிரான் சமூகத்திலிருக்கிற பரத முனியால் பாடப்பட்டு வருகிற மோக்ஷ மடைவிக்கக்கூடிய சங்கீதமாகும். மார்க்கசங்கீதமானது பரதாதிமுனிவர்களால் தேவலோகத்தில் மட்டிலும்தான் பாடப்பட்டு வருகிறதென்றும் இவ் வுலகத்தில் வழங்குவதில்லை யென்றும் தொல்லாசிரியர்களின் துணிவாகும். தேசிய சங்கீதமானது மண்ணுலகோர் உய்யும் பொருட்டு நம் தேசத்தில்மனிதர்களுக்கு ரஞ்சிதமாகப் பாடப்பட்டு வருகிறது.

இவ்விருகைப்படும் சங்கீதத்திற்கும் முதல் காரணமாக இன்றியமையாதது உலகத்திற்கெல்லாம் ஆதாரமாயிருக்கிற நாதமேயாம். இந்த நாதத்தின் எழுச்சியை ஒருவாறு சுருக்கத் தொகுத்துக் கூறுவாம்.

ஓர் தலத்தினது குறிப்பிட மறியவேண்டுமானால் அவ்விட முழுவதும் சுற்றிப்பார்த்தவர்க்கே சாத்தியமாவது போல, நாதத் துவக்கத்திற்கு ஆதாரமாயிருக்கிற நமது யாக்கையானது எத்தனை விதமான சேர்க்கைகளினால் யாக்கப்பட்ட தென்றால்

பூத வகைகள் ஒரைந்தாய்ப் பொறி யைந்தாய்
வாதனை யோரைந்தாய் மாருதமே—மேதகு சீர்ப்
பத்தாகும் நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே
முத்திக்கு வித்தாகும் உடம்பு

அதாவது ஐம்பூதங்களாலும், ஐம்பொறிகளாலும், நாடிகளாலும், தசைகளாலும், சோரி, என்பு தோல் முதலியவைகளாலும் கட்டப்பட்டது. இந்த உடம்பில் நாதம் உண்டாகக் கூடிய குறிப்பிடம் எத்தானத்தில் இருக்கிற தென்றால்

ஐய்ய உடம்பாவன தொண்ணூற்ற றங்குலியாம்
மெய் யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான். வையத்
திருபாலும் நாற்பத் தெழுபாதி நீக்கிக்
கருவாகும் ஆதாரம் காண்.

என்கிறபடி தொண்ணூற்ற றங்குலமான உடலில் மேல் நாற்பத்தேழரை அங்குலமும் கீழ் நாற்பத்தேழரை அங்குலமும் விட்டு, நடு நின்ற ஓர் அங்குலம் மூலாதாரமாம். இதன் மேலே நால் விரல் விட்டு பின்னுதாரம் நின்றியங்கும் என்பர். யோகச் சக்கிரங்கள் ஆறனுள் முதலாவதாகிய மூலதாரத்திலுள்ள சதுர்தசதள சக்கிரத்தில் நின்றும் பிறக்கிற நுட்ப அனல் ஆனது ப்ராண வாயுவோடு சேர்ந்து ப்ரணவ நாதமாகிற ஓங்கார நாதமானது வற்படுகிறது.

இந்த ஓங்கார நாதமான ப்ரணவத்தின் பெருமையையும் பொதிபொருளையும் உரை செய்யச் சிற்றறிவினால் கூடாதகாரியம். பேரறிவினர்களும் முற்றத் துறந்த முனிவர்களும் பலவாறு பரக்க உரையெழுதி யிருக்கிறார்கள் — இன்னும் ஆன்றோர் எழுதுகிறார்கள்—இன்னும் எழுதுவார்கள். பொதுவாக ஓங்காரத்தில் நின்றுதான் உலகமே தோன்றுதலடைந்தது என்று துணிகிறார்கள்.

ஓங்கார விந்து ஸம்யுக்தம் ஓங்கார சக்தி ரூபம்
ஓங்கார முதகம் சைவ— ஓங்காராய நமோநம:

என்றும்

ஓம்காரத்ஹமாருஹ்ய மந:
க்ருத்வாது ஸாரதிரம்
ப்ரஹ்ம லோக பதாந் வேஷீ
ஆதிவிஷ்ணோ: பரம் பதம்

என்றும், பலவாறு கூறப் படுகிறது. அதாவது ஓங்காரமே எவற்றிற்கும் தாது. ஓங்காரமே சக்தி ஸ்வரூபம் ஓங்காரமே பஞ்ச பூதங்கள். இந்த ஓங்காரமாகிற ப்ரணவாதத்தின்மேல் ஏறி இருந்து மனதாகிற சாரதியைக்கொண்டு ப்ரஹ்ம லோகம் வழியாகச் செலுத்தச் செய்கிறவன் பரமபதம் அடைகிறான்—என்கிற பல சிறப்புகள் அருளிச் செய்திருக்கிறார்கள்.

அந்த நாதமானது மூலாதாரத்தில் நின்று நாபி, ஹ்ருதயம், கண்டம், தலை ஆகியஇவைகளின் வழியாக வெளிப்படுகிறது. அதாவது ஆத்மாவானது தனக்கு விருப்பம் உண்டான போது மனதைத் தூண்டுகிறது. மனதானது உடலிலிருக்கும் அக்னியை எழுப்புகிறது. அந்தத் தீயானது வாயுவை எவுகிறது. அந்த வாயுவானது மேல் முகமாக சஞ்சாரம் செய்ய முறையே உந்தி, மார்பு, கண்டம், தலை இவைகளின் வழியாக வெளிப்படுகிறது.

நாதமானது உந்தியில் அதிக நுட்பமாகவும் மார்பில் நுட்பமாகவும், கண்டத்தில் பூரணமாகவும் தலையில் பூர்ணமில்லாமலும், வாயில் கருவியின் சேர்க்கையாலும் தோன்றி உயிற் குற்றெழுத்தின் வடிவமாக வெளிப்படுகிறது. நாதம் என்னும் பதத்திலேயே இத்தகைய பொருள்கள் நுட்பமாக அடங்கியிருக்கின்றன. அஃதாவது

நகாரம் ப்ராணநாமானம்
தகாரம வலம் வித:
ஜாத: ப்ராணாக்னி ஸம் யோகாத்
தேன நாதோபி தீயதே

என்கிறபடி நகாரம் ப்ராணன் என்றும் தகாரம் அக்னியென்றும் ப்ராக்ஞானிஸம்யோகமே நாதமென்றும் சொல்லப்படுகிறது.

இந்த நாதத்தை வியவசரித்தால் மூன்று விதங்களாகின்றன. அவையாவன: மந்த்ரம் மத்தியமம் தாரம் என்பனவாம். அது உத்தரோத்தர மென இரண்டு குணங்களாகும். ஹ்ருதயத்திலிருந்து உண்டாகிற நாதத்தை மந்த்ரமென்றும் மார்பிலிருந்து உண்டாகிற நாதத்தை மத்தியமமென்றும் தலையிலிருந்து உண்டாகிற நாதத்தை தாரமென்றும் சொல்லப்படுகிறது.

இன்னும் இந்த நாதத்தை ஆஹதம் அனாஹதம் என இருவகையாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. ஆஹதமாவது கருவிகளின் மூலமாக வெளிப்படுவதால் உலக ஜனங்களுக்கு ரஞ்சனையுண்டாக்கி பவ வினைகளைப் போக்கடிப்பதா யிருக்கிறது. அனாகதமாவது ஏகாக்ர சித்தமான தியானத்திற்கு குரு மூலமாகப் பெற்று முனீசுரர்கள் சுக உபாயமாக உபாசிக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

கடவுள் உண்மையை அறிகிறார் ஆனால்—

—(*)—

(ருஷிய ஆசிரியன் தோல்ஸ்தே யி எழுதியதை ஸ்ரீமான் ல. ஆறுமுகம் பிள்ளை மொழி பெயர்த்தது)

விளாதிமீர் என்னும் பட்டணத்தில் அகசியநாபன் என்ற பெயருடைய பால்ய வியாபாரி ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு கடைகளும் ஒரு வீடும் சொந்தமாக இருந்தன. அகிசியநாபன், அழகுள்ளவனாகவும் மிருதுவான ரோமமும், சுருட்டைத் தலையுமுடையவனாகவும், விநோத சல்லாபமும், பாடிக்கொண்டிருப்பதில் மிகுந்த பிரிய முடையவனாகவும் இருந்தான். அவன் பால்யத்தில் மதுபான வழக்கமுடையவனாகவும், அதிகமாக அருந்தியபொழுது குழப்பமான நடையுடையவனாகவும் இருந்தான். ஆனால் அவன் கலியாணம் செய்துகொண்ட பிறகு, ஏகதேசமாகத் தவிர மதுபானத்தை ஒழித்துவிட்டான்.

ஒரு கோடையில் அகசியநாபன் நிழினி என்னும் பட்டணத்தில் கூடுகின்ற பிரபலமான சந்தைக்கு வியாபாரம் கொண்டு போகப் புறப்பட்டான். அதற்காக அவன் தன் குடும்பத்தாரிடம் வழியனுப்பிக் கொள்ளும் பொழுது, அவன் மனைவி, "அகசிய, நீர் இன்றைக்குப் புறப்பட வேண்டாம்; நான் உம்மைப் பற்றித் தீக்கனவு ஒன்று கண்டேன்" என்றுரைத்தாள்.

"நான் சந்தைக்குப் போனால் வெறியாட்டயர்வேன் என்று பயப்படுகிறாய் போலும்" என்று அகசியநாபன் சிரித்துக்கொண்டு சொன்னான்.

"நான் எதற்குப் பயப்படுகிறேன் என்று எனக்குத் தெரியாது. நான் உம் இறந்து ஒரு கெட்ட சொப்பனங் கண்டேனென்பது மாத்திரம் எனக்குத் தெரியும். நீர் பட்டணத்திலிருந்து திரும்பி வந்து தலைப்பாகையை எடுத்தீர். அப்பொழுது உம்முடைய தலைரோமம் பூராவும் நரைத்திருப்பதாகக் கண்டேன்." என்று அவள் பதிலளித்தாள்.

அகசியநாபன் சிரித்தான். "அது நல்லதிஷ்டத்தின் அடையாளம். நான் சந்தையில் என்னுடைய சரக்குகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு உனக்கும் சந்தையிலிருந்து சில சாமான்கள் வாங்கிக்கொண்டு வருகிறேனா இல்லையா பார்!" என்றான்.

அப்படிச் சொல்லிக்கொண்டு அவனுடைய குடும்பத்தாரிடத்தில் வழியனுப்பிக் கொண்டு அவன் புறப்பட்டுப்போனான். அவன் பாதிதூரம் போனதும் அவனுக்குத் தெரிந்த ஒரு வியாபாரியைச் சந்தித்தான். அவர்களிருவரும் அன்றிரவு ஒரே சத்திரத்தில் தங்கினார்கள். அவர்கள் ஒன்றாகத் தேயிலை யருந்திவிட்டு அடுத்த அடுத்த அறைகளில் படுத்துக் கொண்டார்கள். விடிந்தபின் தூங்குவது அகசிய நாபனுடைய வழக்கமில்லை. அத்துடன் காலையில் குளிர்ந்த வேளையில் பிரயாணம் செய்யவேண்டுமென்று கருதிப் பொழுது புலர்வதற்கு முன் வண்டிக்காரனை எழுப்பிக் குதிரைகளை மாட்டும்படி ஏவினான். அப்பால் அவன் சத்திரத்தின் பின் பக்கத்தில் ஒரு குடிசையில் வசித்துக் கொண்டிருந்த விடுதிக்காரனிடம் போய் அவனுடைய கணக்குப்படி பணத்தைக் கொடுத்துவிட்டு மீட்டும் வழிநடந்தான்.

அவன் சுமார் உடு மைல் தூரம் போனதும் குதிரைகளுக்குத் தீவனம் போட்டு இளைப் பாற்றிக்கொள்ள வேண்டியதற்காகத் தாமதித்தான். அங்கிருந்த சத்திரத்தில் அகசியநாபன் நடை கூடத்தில் தங்கிச் சற்று நேரம் இளைப்பாறிய பின் தலைவாசலுக்கு வந்து ஒரு பாத்திரம் வெந்நீர் போடும்படி ஏற்பாடு செய்துவிட்டுத் தன்னுடைய வீணையை எடுத்துக் கானம் செய்ய ஆரம்பித்தான்.

கணீரென்று சப்திக்கின்ற மணிகள் கட்டிய மூன்று குதிரை பூட்டிய வண்டி ஒன்று திடீரென்று வந்து நின்றது. அதிலிருந்து ஒரு அதிகாரியும் இரண்டு யுத்த வீரர்களும் கீழிறங்கினார்கள். அந்த உத்தியோகஸ்தன் அகசியநாபனிடம் வந்து அவன்யாரென்றும் எங்கிருந்து வருகிறானென்றும் கேள்விகள் கேட்க ஆரம்பித்தான்.

அகசியநாபன் அவனுடைய கேள்விகளுக்குப் பூர்த்தியான பதிலளித்து, "என்னுடன் கொஞ்சம் தேயிலை சாப்பிடுகிறீரா?" என்று கேட்டான். ஆனால் அந்த உத்தியோகஸ்தன் கேள்விகள் கேட்டுக் கொண்டும் குறுக்கு விசாரணை செய்துகொண்டு மிருந்தான். "நீ நேற்றிரவு எங்கே தங்கினாய்? நீ தனித்திருந்தாயா வேறு வியாபாரியுடன் இருந்தாயா? உன்னுடன் கூடவிருந்த வியாபாரியை இன்று காலையில் பார்த்தாயா? நீ யேன் விடியுமுன் சத்திரத்தை விட்டு வந்தாய்?" என்றிவ்வாறு கேள்விகள் கேட்கலானான்.

தன்னை யேன் இந்த கேள்விகளெல்லாம் கேட்கிறானென்று அகசியநாபன் ஆச்சரியப்பட்டான். ஆனால் நடந்தவைகளையெல்லாம் ஒளிப்பு மறைப்பின்றிச் சொல்லிக் கொண்டு, "ஒரு திருடன் அல்லது கொள்ளைக்காரனைப் போல் என்னை ஏன் இப்படிக் குறுக்கு விசாரணை செய்கிறீர்? நான் என்சொந்த ஜோலியின் பேரில் போய்க் கொண்டிருக்கிறேன். என்னைக் கேள்விகள் கேட்கவேண்டிய தேவையில்லை." என்றும் சொன்னான்.

அப்பொழுது அந்த உத்தியோகஸ்தன், சிபாய்களைக் கூப்பிட்டுக்கொண்டு, "நான் இந்த ஜில்லா போலீஸ் அதிகாரி. உன்னுடன் நேற்றிராப் பொழுதைக் கழித்த வியாபாரி குரல்வளை யறுப் புண்டதினால்தான் நான் உன்னைக் கேட்கிறேன். நாங்கள் உன்னுடைய சாமான்களைச் சோதிக்க வேண்டு"மென்று சொன்னான்

அவர்கள் கட்டடத்திற்குள்பிரவேசித்தார்கள். அந்தப் பட்டாளத்தாரும் போலீஸ் அதிகாரியும் அகசிய நாபனுடைய மூட்டைகளை அவிழ்த்துச் சோதனை நடத்தினார்கள். அந்த அதிகாரி ஒரு மூட்டைக்குள்ளிருந்து எதிர்பாராத வண்ணமாக ஒரு கத்தியை எடுத்து "இது யாருடைய கத்தி?" என்று உறக்கக் கேட்டான்.

அகசிய நாபன் திரும்பிப் பார்த்துத் தன்னுடைய மூட்டையிலிருந்து இரத்தக்கறைபிடித்த ஒரு கத்தியெடுக்கப் பட்டதைக் கண்டு திகிலடைந்தான்.

"இந்தக் கத்தியில் இரத்தம் தோய்ந்திருக்கிறதே இது எப்படி வந்தது!"

அகசியநாபன் பதிலுரைக்க முயன்றான்; ஒரு வார்த்தை சொல்லுவதுகூட அரிதாயிற்று.

"நான்—எனக்குத் தெரியாது—என்னுடையதல்ல" என்று மாத்திரம் திக்கித் திக்கிச் சொன்னான்.

அதன்பேரில் "இன்று காலையில் அந்த வியாபாரி கழுத்து வெட்டப்பட்டு படுக்கையில் கிடந்தான். அதைச் செய்திருக்கக் கூடிய மனிதன் நீ ஒருவனே. வீடு உட்பக்கத்தில் பூட்டப்பட்டிருந்தது; அங்கு வேறொருவருமில்லை. இதோ உன்னுடைய மூட்டையில் குருதி படிந்த சூரி யொன்று இருக்கிறது. உன்னுடைய முகமும் பாவனைகளும் உன்னைக் காட்டிக் கொடுக்கின்றன. நீ அவனை எப்படிக் கொன்றாய் அவனிடத்திலிருந்து எவ்வளவு பணம் திருடினாய் என்பவைகளை என்னிடம் சொல்லு" என்று அதிகாரி கூறினான்.

தான் யதைச் செய்திருப்பதில்லை யென்றும்; இருவரும் தேயிலைப் பானம் செய்தபின்தான், அந்த வியாபாரியைச் சந்திக்கவே யில்லை யென்றும், தன்னுடைய சொந்தமான ரூ அ௦௦௦ த்தைத் தவிரத் தன்னிடத்தில் பணம் யாதொன்றும் கிடையாதென்றும், அந்தக் கத்தி தன்னுடையதல்ல வென்றும் அகசியநாபன் பிரமாணம் பண்ணினான். ஆனால் அவனுடைய குரல் கம்பிப் போயிற்று. முகம் வெளிறிற்று. அவன் குற்றவாளியே போல நடுங்கினான்.

காவலதிகாரி அகசிநாபனைக் கட்டி வண்டியிலேற்றும்படி சிப்பாய்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்கள் அகசிய நாபனின் கால்களை ஒன்றாய்க் கட்டி வண்டியில் தூக்கிப் போட்டதும் அவன் தெய்வத்தை யுன்னி யுருகி அழுதான். அவனுடைய பணத்தையும் சரக்குகளையும் அவனிடமிருந்து எடுத்துக் கொண்டு அவனைச் சமீபத்திலிருந்த நகரத்திற்கு கொண்டுபோய்க் கைதி யாக்கினார்கள்.

அவனுடைய யோக்கியதையைப் பற்றி விளாதிமீர் நகரத்தில் விசாரணை செய்யப் பட்டது. அந் நகரத்திலுள்ள வியாபாரிகளும் மற்றையோரும் "அவன் முன் காலத்தில் குடித்துப் பொழுது போக்கிக் கொண்டிருவ

தான். ஆனால் அவன் நல்ல மனிதன்தா''னென்று சான்றோர்கள். விசாரணை வந்தது. ரயசான் என்னும், நகரத்து வியாபாரி யொருவனைக் கொலைசெய்து அவனிடமிருந்த ரூ ௨0,000 த்தையும் களவாடியதாக அவன் குற்றஞ் சாட்டப்பட்டான்.

அகசிய நாபனுடைய மனைவி மன வலிமையை முற்றிலும் இழந்துவிட்டாள். அவளுக்கு எதை நம்புவதென்பது தெரியவில்லை. அவளுடைய குழந்தைகளெல்லாம் மிகவுஞ் சிறியவை; ஒன்று பால்குடி மதலை. அவைகளை யெல்லாம் தன்னுடன் எடுத்துக் கொண்டு தன் கணவன் சிறைச்சாலை யிலிருக்கும் நகரத்தை யடைந்தாள். முதலில் அவனைப் பார்க்க அவளுக்கு இடங் கிடைக்கவில்லை. ஆனால் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பேரில் அவளுக்கு மேலதிகாரிகளின் அனுமதி கிடைத்துத் தன் தலைவனைப் பார்க்கப் போனாள். சிறைச்சாலை யுடையில், விலங்கிடப்பட்டுத் திருடர்களுடனும் குற்றவாளிகளுடனும் தன் கணவனை அடைத்திருப்பதை யவள் பார்த்ததும் கீழே விழுந்து மூர்ச்சை போய்விட்டாள். அவளுக்கு வெகு நேரம் வரையில் மூர்ச்சை தெளியவில்லை. அப்புறம் அவள் தன் குழந்தைகளைத் தன் பக்கத்தி லிருத்துக்கொண்டு அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவள் அவனிடத்தில் வீட்டுச் சமாசாரங்களைச் சொல்லி அவனுக்கு நேர்ந்த சம்பவங்களைப் பற்றிக் கேட்டாள்.

அவன் அவளிடத்தில் எல்லாச் சமாசாரத்தையும் சொன்னான். அவள், "நாமிப்பொழுது என்ன செய்யக் கூடும்?" என்று கேட்டாள்.

"நிரபராதியான ஒரு மனிதன் நசித்துப் போகாமலிருக்கும்படி உத்தாவிட சக்காவர்த்திக்கு ஒரு மனுப் பண்ணவேண்டும் என்றான்."

அவனுடைய மனைவி, தான் சக்கரவர்த்திக்கு ஒரு மனுப் பண்ணினதாகவும் ஆனால் அது ஒப்புக்கொள்ளப் படவில்லை யென்றும் சொன்னாள்.

அகசியநாபன் யாதொரு பதிலும் சொல்லாமல் தலை கவிழ்ந்துவிட்டான்.

"உம்முடைய மயிர் முழுவதும் நரைத்துப் போனதாக நான் காரண மின்றிக் கனவு காணவில்லை உமக்கு ஞாபகமிருக்கிறதா? நீர் அன்றைதினம் புறப்பட்டிருக்கக் கூடாது" என்று அவன் மனைவி சற்றுப் பொறுத் துரைத்தாள். "என்னுடைய பிரிய மானவரே! உம்முடைய மனைவியிடத்தில் உள்ளது சொல்லும்; நீர் அந்தக் காரியம் செய்யவில்லையா?" என்று அவள் அவனுடைய தலையைக் கோதிக்கொண்டு கேட்டாள்.

"உனக்கும் என் பேரில் சந்தேகம் தானோ"? என்று சொல்லி அகசியநாபன் தன்னுடைய கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அந்தச் சமயம் ஒரு சிப்பாய் அங்கு வந்து அவனுடைய மனைவியும் குழந்தைகளும் வெளியே போய்விட வேண்டுமென்று சொன்னான். அகசியநாபன் தன் குடும்பத்தாரிடம் கடைசி முறையாக வழியனுப்பிக் கொண்டான்.

அவர்கள் போன பிறகு அகசியநாபன் நடந்தவைகளை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தான்; அவனுடைய மனைவியுங்கூட அவன் பேரில் சந்தேகப் பட்டாள் என்பது அவன் நினைவுக்கு வந்ததும், "கடவுள் ஒருவர் மட்டுந்தான் உண்மையை அறியக் கூடியவரென்று தோன்றுகிறது. அவரிடத்தில் மட்டுமே நாம் ஓலமிட வேண்டும். அவர்தான் நமக்கிரங்க வேண்டும்" என்று சிந்தித்திருந்தான். இதன் பின் அகசியநாபன் மனுக்க ளெழுதுவதை யிறவே நிறுத்திவிட்டான். எல்லா நம்பிக்கையையும் அடியோ டொழித்துவிட்டுக் கடவுளைப் பிரார்த்தனை மட்டும் செய்துகொண்டிருந்தான்.

அகசியநாபனைக் கசையடித்துச்* சுரங்கங்களுக்கு அனுப்பவேண்டுமென்று தீர்ப்பு செய்யப்பட்டது. தீர்ப்புப் பிரகாரம் கசையடி யடிக்கப்பட்டது. அதனால் ஏற்பட்ட ரத்தக்காயங்க ளாறியபின் ஸைபீரியா தேசத்திற்கு மற்றக் கைதிகளுடன் ஓட்டிக்கொண்டு போகப் பட்டான்.

---

* இந்தியாவில் கைதிகளை அந்தமான் தீவிற்கனுப்புவது போல் ருஷிய தேசத்தில் ஸைபீரியாவிலுள்ள சுரங்கங்களில் வேலை செய்ய அனுப்புவது வழக்கம்.

அகசியநாபன் ௨௬ வருஷம் ஸைபீரியாவில் குற்றவாளியைப் போலவே காலந்தள்ளி வந்தான். அவனுடைய ரோமங்கள் பனிக்கட்டி போல் வெண்மையாக மாறின. அவனுடைய தாடி நீண்டு மென்மையாய் நரைத்து வளர்ந்திருந்தது. அவனுடைய உல்லாசம் முற்றிலும் மாறிப்போயிற்று. அவன் கூனிவிட்டான். அவனுடைய நடை தாழ்ந்து, பேச்சுக் குறுகிற்று. அவன் ஒருபொழுதும் சிரிக்கிறதேயில்லை. ஆனால் அவன் எப்பொழுதும் கடவுளைத் துதித்துக் கொண்டிருந்தான்.

சிறையில் அகசியநாபன் செருப்புத் தைக்கப் படித்துக்கொண்டான்; சொற்பப் பணமும் சம்பாதித்தான். அதைக்கொண்டு "சாதுக்கள் சரிதை" என்ற புத்தகத்தை வாங்கினான்.

சிறைக் கூடத்தில் போதிய வெளிச்ச மிருக்கும் வரை அவன் இந்தப் புத்தகத்தை வாசிப்பான். ஞாயிற்றுக் கிழமைகளில் கைதிகளுக் கேற்பட்ட சிறைச்சாலைக் கோயிலில் பாடங்களைப் படித்துப் பாடகர்கள் கூட்டத்திற் சேர்ந்து பாடுவான். அவனுடைய சரீரம் இன்னும் நன்றாகவே யிருந்தது.

காராக்கிரகத் தலைவர்கள் அவனுடைய தாழ்மையை உத்தேசித்து அகசியநாபனிடத்தில் பிரியமாயிருந்தார்கள். அவனுடன் சேர்ந்த மற்றக் கைதிகள் அவனிடத்தில் மரியாதையாய் நடந்துகொண்டார்கள். அவர்கள் அவனைத் 'தாத்தா' என்றும் 'சாது' என்றும் கூப்பிடுவார்கள். எதைப்பற்றியாவது சிறைச்சாலை நாயகர்களுக்கு மனுப் பண்ணிக்கொள்ளவேண்டு மென்று ஏற்பட்டால் அவர்கள் அகசியநாபனைத் தான் தங்களுடைய பிரதிநிதியாக ஏற்படுத்துவார்கள். கைதிகளுக்குள் ஏதேனும் தாவாக்கள் ஏற்பட்டாலும் அவைகளை விசாரணை செய்து சீர்படுத்திக் கொடுக்கும்படி அவனையே வேண்டிக்கொள்வார்கள்.

அகசியநாபனுக்கு வீட்டுச்சமாசாரம் ஒன்றும் எட்டவில்லை. அவனுடைய மனைவியும் மக்களும் இன்னும் உயிரோடி யிருக்கிறார்களா இல்லையா என்பதுகூட அவனுக்குத் தெரியாது.

ஒரு நாள் கைதிகள் கூட்டமொன்று அந்தச் சிறைச்சாலைக்குப் புதிதாய்க் கொண்டுவரப் பட்டது. சாயங்காலம் பழைய கைதிகள் புதிதாய் வந்தவர்களைச் சூழ்ந்துகொண்டு, அவர்கள் எந்தப் பட்டணம் அல்லது கிராமங்களிலிருந்து வந்தவர்களென்றும் அவர்கள் எதற்காகத் தண்டனை யடைந்தவர்களென்றும் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். மற்றவர்களுடன் அகசியநாபனும் புதிதாய் வந்தவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து தலை குனிந்தவண்ணமாய் அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

நூதனக் கூட்டத்தாரில் உருவத்தால் நீண்டும், ௬0 வயதளவிலும் டலாட்டியனாகவும், ஒட்டக் கத்தரித்த நரைத்த தாடியு முடையவனான ஒருவன் தன்னை எதற்காக மறியல் செய்தார்கள் என்பதைப்பற்றி மற்றவர்களுடன் சொல்லிக்கொண்டிருந்தான்.

"நேயர்களே! நான் ஒருவண்டியில் கட்டப்பட்டிருந்த ஒருகுதிரையை அவிழ்த்துக் கொண்டுதான் போனேன். என்னைப் பிடித்துத் திருட்டுக் குற்றம் சாட்டிவிட்டார்கள். நான் என்னுடைய வீட்டிற்குச் சுருக்காகப் போகத் தான் அந்தக் குதிரையை அவிழ்த்தேன். பிறகு குதிரையை விபாபித்துக்கொள்ளாமல் விட்டு விட்டேன். மேலும் அந்த வண்டிக்காரன் என்னுடைய நண்பன். ஆகையால் நான் யாதொரு தவறும் செய்யவில்லை என்று சொன்னேன். 'இல்லையில்லை நீதிருடினாய்' என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் நான் அதை எங்கிருந்து எப்படித்திருடினேன் என்று அவர்களால் சொல்லக் கூடவில்லை. நான் ஒருகாலத்தில் வாஸ்தவமாகவே குற்றம் செய்தேன். நாம் நியாயப்படி வெகு காலத்திற்கு முன்னமேயே இங்கு வந்திருக்கவேண்டும். ஆனால் அச்சமயம் நான் கண்டுபிடிக்கப்படவில்லை. இப்பொழுது நான் ஒன்றுமில்லாத காரியத்தில்இங்கு அனுப்பப் பட்டிருக்கிறேன். .... ஹா! நான் உங்களிடத்தில் பொய் வார்த்தைகள் பேசுகிறேன். நான் ஸைபீரியாவிற்கு இதற்கு முன்னும் வந்திருக்கிறேன் ஆனால் அப்பொழுது நெடுங்காலம் தாமதிக்கவில்லை" என்று சொல்லிக்கொண்டிருந்தான்

"நீ எங்கிருந்து வருகிறாய்? என்றொருவர் கேட்டார்.

"விளாதிமீர் பட்டணத்திலிருந்து. என்னுடைய குடும்பம் அப்பட்டணத்தது. என்னுடையபேர் மக்கார். என்னை சேமியா நீசன் என்றும் சொல்லுவார்கள்."

"சேமியா நீசரே, விளாதிமீரில் 'அகசியநாபர்கள் என்ற பெயருடைய வியாபாரிகளைப் பற்றி உமக்கு ஏதாவது தெரியுமா? சொல்லும். அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்களா?" என்று அகசியநாபன் கேட்டான்.

"அவர்களைத் தெரியவா? இயல்பாகவே எனக்குத் தெரியும். அவர்களுடைய பிதா ஸைபீரியாவி லிருந்த போதிலும் அகசியநாபர்கள் பணக்காரர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பிதா நம்மைப் போலவே பாவகாரியென்று தோன்றுகிறது. தாதா, நீர் எப்படி இங்கு வந்தீர்?"

அகசியநாபனுக்குத் தன்னுடைய துரதிர்ஷ்டத்தை எடுத்துரைக்கப் பிரியமில்லை. "நான் என்னுடைய பாவங்களுக்காக இந்த இருபத்தாறு வருஷம் மறியலில் இருக்கிறேன்" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டு சொன்னான்.

"என்ன பாவங்கள்?" என்று மக்கார்சேமியா நீசன் கேட்டான். ஆனால் அகசியநாபன், "சரி, சரி, நான் அதற்கு தீய வினையுடையவனாக இருக்கவேண்டும்." என்று மாத்திரம் சொன்னான். அவன் அதற்குமேல் சொல்லியிருக்கமாட்டான். ஆனால் அவனுடைய தோழர்கள் அவன் ஸைபீரியாவி லிருக்கும்படி நேர்ந்த வரலாற்றை மக்காருக்குச் சொன்னார்கள். யாரோ, ஒருவன் ஒரு வர்த்தகனைத் கொலை செய்து கத்தியை அகசியநாபனுடைய மூட்டைகளில் வைத்துவிட்டதையும் அதனால் அகசியநாபன் அனியாயமாகத் தீர்ப்புப் பெற்றதையும் எடுத்துக்கூறினர். மக்கார் சேமியாநீசன் இதைக் கேட்டதும் அகசியநாபனை உற்று நோக்கிக் கொண்டும், முழந்தாள்களி லறைந்து கொண்டும் "சரி இது ஆச்சரியமாயிருக்கிறது, உண்மையாகவே அதிசயமாயிருக்கிறது. ஆனால் தாத்தா நீர் எவ்வளவு கிழவராய் விட்டீர்!" என்று வியந் துரைத்தான்.

அவனுக்கு அத்துணை வியப்புண்டாதற்குரிய காரணம் யாதென்றும். இதற்குமுன் அவன் அகசியநாபனை எங்கு பார்த்திருக்கிறா னென்றும் மற்றவர்கள் அவனை நோக்கிக் கேட்டார்கள். ஆனால் மக்கார் யாதொரு பதிலும் உரைக்கவில்லை. "பால்யர்களே! நாங்கள் இங்கு சந்திக்கும்படி ஏற்பட்டது ஆச்சர்யமாகவே இருக்கிறது." என்று மாத்திரம் சொன்னான். இந்த மனிதனுக்கு அவ் வியாபாரியைக் கொன்றது இன்னாரென்று தெரியுமோ என்று இவ் வார்த்தைகள் அகசியநாபனை மலையும்படி செய்தது. "சேமியா நீசரே! நீர் அந்தச் சமாசாரத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர் போலும், அல்லது என்னை இதற்கு முன் பார்த்திருக்கிறீர் போலும்" என்று சொன்னான்.

"நான் எப்படிக் கேள்விப் படாமலிருக்க முடியும்? உலகத்தில் பரதேசித் தபாலுக்குப் பஞ்சமா? ஆனால் அது வெகு நாளைக்கு முன்னானதையால் நான் என்ன கேள்விப்பட்டேன் என்பது எனக்கு மறந்து போயிற்று."

"அந்த வணிகனை யார் கொன்றது என்பது உனக்கு ஒருக்கால் தெரிந்திருக்கலாம்." என்று அகசியநாபன் கேட்டான். மக்கார் சேமியாநீசன் சிரித்துக் கொண்டு "யாருடைய பொட்டணத்தில் கத்தி யிருந்ததோ அவன்தான் செய்திருக்க வேண்டும். வேறு யாராவது அங்கே கத்தியை ஒளித்து வைத்திருப்பார்களென்றால், 'பிடி படாதவன் திருடனல்ல' என்பது முதுமொழியன்றோ? உன்னுடைய மூட்டை தலைக்குயரமாய் வைக்கப் பட்டிருக்கும் பொழுது அதில் எப்படி யொருவன் கத்தியை வைத்திருக்க முடியும்? அது உன்னைத் திட்டமாய் விழித்திருக்கச் செய்திருக்குமே." என்று பதில் மொழிந்தான்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் அகசியநாபனுக்கு இந்த வியாபாரியைக் கொன்றது இந்த மனிதன்தான் என்ற நிச்சயம் ஏற்பட்டது. உடனே அவன் அவ்விடத்தை விட்டு வெளியே போனான். அன்றிரவு முழுவதும் அகசியநாபனுக்கு உறக்கம் வரவே யில்லை. அவனுக்கு மிகுந்த மனவருத்த மேற்பட்டது. அவனது மனக் கண்ணின் முன்பாகப் பலவித உருவெளித்தோற்றங்களெழுந்தன. அவன் சந்தைக்குப் போவதற்காகத் தன் மனைவியை விட்டுப் பிரியும்பொழுது அவள் இருந்த ஸ்திதியில் உள்ள உருவம் புலனாயிற்று. அவள் பக்கத்திலிருப்பது போலவே கண்டான். அவளுடைய முகமும் கண்களும் முன்னெழுந்தன. அவள் பேச்சும், சிரிப்பும், செவிப்புலனாயின. அக்காலத்திலிருந்தது போல மிகவும் சிறியவர்களாகத் தன்னுடைய குழந்தைகளையும் கண்டான். ஒன்றுக்கு ஒரு சிறிய சட்டை போடப் பட்டிருந்தது. மற்றொன்று அன்னையிடம் பால் குடித்துக்கொண்டிருந்தது. அதன் பின் அவன் பால்யனாகவும் சந்தோஷமாகவும் இருந்த தன்னுடைய முன்னைய நிலைமையை நினைந்துகொண்டான். அவனைப் பிடித்த இடமாகிய சத்திரத்தின் தலைவாயிலில் அவன் வீணாகானம் செய்து கொண்டிருந்ததும் அவன் சற்றும் கவலையற்றவனாக விருந்ததும் அவனுடைய ஞாபகத்திற்கு வந்தன. அவன் கசையடி அடிக்கப்பட்ட இடத்தையும், அடித்தவனையும், சூழச் சனங்கள் நிற்பதையும் விலங்குகளையும் குற்றவாளிகளையும் மறியல் வீட்டில் காலங்கழித்த இருபத்தாறு வருஷங்களையும் அகாலத்தில் அடைந்த விருத்தாப்பியமாகிய இவைகளெல்லாம் அவனுடைய மனதில் உருவகித்துத் தோன்றின. இவ்விதமான தோற்றங்களெல்லாம் அவனைத் தற்கொலை புரிந்துகொள்ளவும் சித்தமாகும்படி அத்துணை துன்புறுத்தின.

"இவைகளெல்லாம் அந்தச் சண்டாளனுடைய செய்கைகளென்று அகசிய நாபன் எண்ணமிட்டான். தான் அதற்காக இறந்துபோகும்படி ஏற்பட்டாலும் கூடப் பழி வாங்க வேண்டுமென்ற விருப்பம் அதிகரிக்கும்படி அத்துணைப் பெருங்கோபம் அவனுக்கு மக்கார் சேமியா நீசன் பேரிலுண்டாயிற்று. அவன் அன்றிரவு முழுதும் கடவுளைத் தோத்திரம் செய்து கொண்டிருந்தான்; ஆனால் அவனுக்கு மன அமைதி ஏற்படவில்லை. பகலில் அவன் மக்கார் சேமியாநீசன் பக்கத்தில் போகவுமில்லை; அவனை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை.

இவ்விதமாக ஒரு பட்சம் கழிந்தது. அகசியநாபனுக்கு இராக் காலங்களில் நித்திரை பிடிக்கவில்லை; அவனுக்கு என்ன செய்வதென்று தெரியாதபடி அவ்வளவு தூரம் அவன் துன்பத்தினால் விழுங்கப் பட்டிருந்தான். ஓரிரவு அவன் சிறைச் சாலையில் உலாவிக் கொண்டிருக்கும் பொழுது கைதிகள் தூங்குகிற பரணின் கீழிருந்து மண்ணாங் கட்டி உருண்டோடி வந்து விழுவதைக் கவனித்தான். அவன் அது என்ன என்று கவனிக்கிறதற்காக நின்றான். திடீரென்று மக்கார் சேமியா நீசன் பரணின் கீழிருந்து ஊர்ந்து வெளியே வந்தான். அவன் அகசியநாபனைப் பார்த்தான். அவன் முகத்தில் அச்சக் குறி தோன்றிற்று. அகசியநாபன் அவனைப் பாராமலே அப்பாற் போக முயன்றான். ஆனால் மக்கார் அவன் கையைப் பிடித்துக்கொண்டு தான் சுவரின் கீழ் ஒரு சுரங்கம் தோண்டி யிருப்பதாகவும், மண்ணை முழந்தாள் வரையும் போட்டுக் கொள்ளுகிற பாதரக்ஷையிலெடுத்துத் தந்திரமாக ஒவ்வொரு நாளும் வெளியில் ரஸ்தாவில் கைதிகளை வேலைக்குக் கொண்டு போகும் பொழுது கொட்டி விட்டதாகவும் கூறினான்.

"கிழவனே! ரகசியத்தை வெளி விடாதே. நீயும் தப்பித்துக் கொள்ளலாம். அந்தரங்கத்தை வெளியிட்டாயானால் என்னைச் சவுக்காலடித்து என் பிராணனை எடுத்து விடுவார்கள். ஆனால் அதற்காக உன்னை முதலில் கொன்று விட்டே நான் சாவேன்".

தன்னுடைய சத்துருவைக் கண்டதும் அகசியநாபன் கோபத்தினால் நடுங்கினான். அவன் தன்னுடைய கையைப் பிடுங்கிக் கொண்டு, "எனக்குத் தப்பித்தோடப் பிரியமில்லை. நீ யென்னை வெகு நாளைக்கு முன்னமேயே கொலை செய்து விட்டாய். நான் உன் ரகசியத்தை வெளிப் படுத்துவது சம்மந்தமாக தற்சமயம் சொல்லக் கூடியதெல்லாம் இதுவே —நான் சொல்லுவேன்—சொல்லமாட்டேன் என்பது கடவுளின் திருவுள்ளத்தின்படி நடக்கு" மென்று சொன்னான்.

மறுநாள் கைதிகளை வேலைக்குக் கொண்டு போகும் பொழுது யாரோ ஒரு கைதி தன்னுடைய பாதரக்ஷையிலிருந்து வெளியில் மண் கொட்டுவதை காவற்படை வீரர் கண்டார்கள். சிறைச்சாலை பூராவையும் சோதித்துச் சுரங்கத்தைக் கண்டுகொண்டார்கள். காவற்படைத் தலைமை யதிகாரி அங்கு வந்து அந்தச் சுரங்கத்தைத்

தோண்டியது யாவர் என்பதைப் பற்றி யறிவதற்காகக் கைதிகள் எல்லாரையும் விசாரணை செய்தார். அவர்கள் எல்லாரும் தங்களுக் கொன்றும் தெரியாதென்று சாதித்தனர். அந்த உண்மை தெரிந்தவர்களும் மக்கார்சேமியா நீசனைப் பிராணன்போகும்படி சவுக்காலடிப்பார்களென்றெண்ணி அவனைக் காட்டிக் கொடுக்காம லிருந்து விட்டார்கள். கடைசியாக அந்தக் காவற் றலைவன் உண்மையை ஒளியாதவன் என்று தனக்குத் தெரிந்திருந்தவனாகிய அகசியநாபனைப் பார்த்து, "நீ ஒரு உண்மையுள்ள வயோதிகன்; இந்தச் சுரங்கம் தோண்டியது யாவனென்பதைக் கடவுள் சாட்சியாக எனக்குச் சொல்லு" என்று கேட்டான். மக்கார் சேமியா நீசன் யாதொரு சம்பந்தமு மில்லாதவன்போல் அகசியநாபனைச் சற்றேனும் திரும்பிக் கூடப் பார்க்காமல் அசட்டையாக அக் காவற் றலைவனைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அகசியநாபனுடைய உதடுகள் துடித்தன. கைகள் நடுங்கின. வெகு நேரம் வரை அவனுக்கு ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியவில்லை. "என்னுடைய வாழ்நாளையே வீணாக்கி யென்னைக் கெடுத்தவனை நான் என் மறைக்க வேண்டும்? நான் பட்ட கஷ்டங்களுக்கு அவனும் ஜவாப்தாரி யாகக் கூடும். ஆனால் நான் வெளிப்படுத்துவேனானால் ஒருக்கால் அவனைச் சவுக்கால் அடித்து உயிரை எடுத்து விடுவார்கள். நான் அவன் பேரில் சந்தேகித்திருப்பதும் ஒருக்கால் தவறாயிருக்கலாம். மேலும் உண்மையைச் சொல்வதில் எனக்குக் கிடைக்கும் நன்மை என்ன?" என்றிவ்வாறு எண்ணமிட்டான்.

"கிழவனே, என்னிடத்தில் உண்மையைச் சொல்லு. இந்தச்சுவரின் கீழ் யார் தோண்டிக்கொண்டிருந்தது?" என்று அந்த உத்தியோகஸ்தன் மறுபடியும் கேட்டான்.

அகசியநாபன் மக்கார்சேமியா நீசனைக்கண்ணோட்டம் செய்துவிட்டு, "பெருமானே! நான் சொல்லமுடியாது. நான் சொல்லவேண்டுமென்பது கடவுள் சித்தமல்ல. நீர் என்னை என்னவேண்டுமானாலுஞ் செய்யும். நான் உம தாதிக்கத்திற்குள்ளிருக்கிறேன்" என்றுரைத்தான்.

அந்த அதிகாரி எத்தனையோ பிரயத்தனங்கள் செய்தும் அகசியநாபன் வேறொன்றும் சொல்லவில்லை. அதனால் அவ்வதிகாரி அவ்விஷயத்தில் வேறொன்றும் செய்யக்கூடவில்லை.

அன்றிரவு அகசியநாபன் படுக்கையிற் படுத்துக் கண்ணிரண்டு வரும் பொழுது ஒருவன் மெதுவாய் வந்து அவனுடைய படுக்கையில் உட்கார்ந்தான். அவன் இருட்டில் கண்ணை விழித்துப் பார்த்து மக்கார் என்று தெரிந்து கொண்டான்.

"என்னிடத்தில் உனக்கு இன்னும்என்ன வேண்டும்? நீ யேன் இங்கு வந்தாய்?" என்று அகசியநாபன் கேட்டான்.

மக்கார் சேமியாநீசன் மௌனமாயிருந்தான். அதன் பேரில் அகசியநாபன் எழுந் துட்கார்ந்து, "உனக்கென்னவேண்டும்? நீ போய் விடு அல்லது நான் காவலாளரைச் சத்தங்காட்டுவேன்" என்று சொன்னான்.

மக்கார் சேமியாநீசன் அகசியநாபனுக்கு நேராகக் குனிந்துகொண்டும் "அகசியநாபரே என்னைமன்னியும்" என்று காதோடு காதாய்ச் சொன்னான்.

"எதற்காக?" என்று அகசியநாபன் கேட்டான்.

"அந்த வணிகனைக் கொன்று கத்தியை உன் சாமான்களுக்குள் ஒளித்து வைத்தவன் நான்தான். நான் உம்மையும் கொன்றுவிடவிருந்தேன், ஆனால் வெளியில் சப்தம் கேட்டது. ஆகையினால் கத்தியை உம்முடைய மூட்டையில் வைத்துவிட்டு நான் சாளரத்தின் வழியாகத் தப்பித்துக்கொண்டேன்."

அகசியநாபன் பேசாதிருந்தான்; அவனுக்கு என்ன சொல்வதென்று தோன்றவில்லை. மக்கார் சேமியா நீசன் படுக்கையிலிருந்து நழுவித் தரையில் முழந்தாளிட்டு, "அகசியநாபரே என்னை மன்னியும். கடவுள் திருவருளை முன்னிட்டு என்னைப் பொறுத்துக் கொள்ளும். அந்த வியாபாரியைக் கொன்றவன் நானே என்று வெளிப்படுத்துவேன். உம்மை விடுதலை

600 008 160201

செய்வார்கள். நீர் உம்முடைய வீடு போகலாம்." என்று கூறினார்.

"சொல்லுவது எளிதுதான். ஆனால் நான் உனக்காக இருபத்தாறு வருஷம் துன்பப் பட்டாயிற்று. நான் இப்பொழுது எங்கு போவது? என்னுடைய இல்லாள் இறந்து போய்விட்டாள். என்னுடைய குழந்தைகள் என்னை மறந்துவிட்டார்கள். நான் போகக் கூடிய இடம் யாதொன்று மில்லை," யென்று அகசியநாபனுரைத்தான்.

மக்கார் சேமியா நீசன் தரையை விட்டு எழுந்திருக்கவில்லை. அவன் தன் தலையைத் தரையில் மோதிக் கொண்டு "அகசிய நாபரே என்னை மன்னியும். நான் இப்பொழுது உம்மைப் பார்க்கும் பொழுது எனக்குண்டாகும் வருத்தம் என்னை அவர்கள் குண்டு கட்டிய கசையினால் அடிக்கும் பொழுது ஏற்பட்ட வேதனையை விடப் பன் மடங்கு அதிகமாக விருக்கிறது. அப்படியிருந்தும் என் மேல் இரக்கப்பட்டு என் ரகசியத்தை வெளிவிடாதிருந்தீர். மகா பாதகனாகிய என்னை ஏசு நாதரை முன்னிட்டு மன்னியும் என்று வேண்டிக்கொண்டு அழ ஆரம்பித்தான்.

அவன் அழுதால் [illegible] அகசியநாபனும் அழ ஆரம்பித்தான்.

"கடவுள் உன்னை மன்னிப்பாராக. நான் உன்னை விட நூறு மடங்கு அதிபாதகனாயிருக்கலாம்" என்று சொன்னான்.

அவன் இந்த வார்த்தை சொன்னதும் அவன் இதயத்திலிருந்த பெரும்பாரம் நீங்கிற்று. வீட்டுக்குப் போக வேண்டுமென்னும் விருப்பமும் அவனை விட்டகன்றது. அவனுக்கு அச் சிறைச்சாலையை விட்டுப்போக வேண்டுமென்ற பிரியமும் அறவே ஒழிந்தது. அவன் தன் உலகவாழ்க்கையின் இறுதியையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

அகசிய நாபன் சொன்னதைச் செவிக்கொள்ளாமல் சேமியாநீசன் தன்னுடைய குற்றத்தை சிறை யதிகாரிகளிடம் ஒப்புக் கொண்டான். அகசியநாபனுக்கு விடுதலை உத்தரவு வந்தது. ஆனால் அதற்கு முன்னமேயே அவன் இவ்வுலக வாழ்க்கையை நீத்தான்.

ஆனந்தரங்கப் பிள்ளையின் தினசரி

ஜூ11,N24B3. N25.1.4

[நாம் இங்கே அச்சிட எடுத்துக் கொண்டிருக்கிற இந்த நூல் மிகவும் அபூர்வமான நூலாகும். நமது தேச சரித்திரத்தின் மிகவும் இருளடைந்திருக்கிற ஒருபாகத்தை இது நன்கு துலக்கித் தருகிறது. நம் நாட்டு அரசர்களின் பலஹீனத்தையும், பொச்சாப்பையும் சிறுமையையும், ஜனங்களின் தேசபக்தி யின்மையையும் துரோக சிந்தையையும் கண்டு ஆதியில் வியாபாரம் செய்து பொருளீட்ட வேண்டும் என்பதைத் தவிர வேறு நோக்கமில்லாத ஐரோப்பியர் மேற்குறித்த காரணங்கள் பற்றி இந் நாட்டை வென்று அதைத் தங்கள் அதிகாரத்துக்குள் கொண்டுவந்து விடலாகும் என நினைந்து, அவ் எண்ணங்களை நிறைவேற்றுவதற்காகத் தந்திரங்கள் செய்து அரசர்களுக்குள் கலகங்களை உண்டாக்கியும், வெளிப் படையாகவும் மறைவாகவும் நம் தொழில்களை அழித்தும் பொருள்களைக் கொள்ளையிட்டும் வந்த காலத்தில், கூரிய அறிவும், லௌகிக ஞானமும், இந்த மோசநாச கம்பனி வேஷத்துக்கெல்லாம் சூத்திரக் கயிறுகளைக் கையில் பிடித்தவரிற் பிரமுகர்களான பிரெஞ்சு ராஜ தந்திரிகளோடு நெருங்கிப் பழகும் வசதியும் பெற்றுள்ள ஆனந்தரங்கப் பிள்ளை என்பார் அப்போதைக்கப்போது சாவகாசம் ஏற்படுத்திக்கொண்டு தான் நேரில் கண்டும் கேட்டும் உள்ள விஷயங்களைச் சித்திரகுப்தனைப் போல ஒன்று விடாமல் குறித்து வைத்த புஸ்தகமே இப் பிரஸ்தாப தினசரியாகும்.

தினசரியைச் சித்திரகுப்தனது கணக்குக்கு ஒப்பிட்டோம். அந்த பயங்கரமான கணக்கில் நாம் முக்கியம் என்று நினைக்கும் விஷயங்கள் மிகவும் லேசாகவே பதியப் பட்டிருக்கலாம். நாம் அலக்ஷியமாகத் தள்ளிவிடும் காரியங்களும் எண்ணங்களும் வெகு விஸ்தாரமாக எழுதப்பட்டிருத்தல் கூடும். அதே மாதிரி ஆனந்தரங்கப் பிள்ளையும் பெரும்பாலார் பிரதானம் என்று கருதும் சம்பவங்களைப் பற்றிச் சில வேளைகளில் ஓரிரண்டு வார்த்தைகளை எழுதியிருக்கிறார். ஒன்றுமில்லாத விஷயம் என்று நினைக்கக் கூடியவற்றைப் பற்றி விமரிசையாக எழுதி வைத்திருக்கிறார். அவர் எந்தக் கருத்துக் கொண்டு இவ்விதம் எழுதினார் என்று கண்டு பிடித்தல் நமக்குச் சாத்தியமில்லை. ஆனால் அவர் எழுதி வைத்திருக்கும் குறிப்புகளைப் படிக்கும் போது அக் காலத்துத் தமிழ் நாட்டை நாம் சலனப்படக் காட்சியில் (ஸினிமாவில்) பார்ப்பது போன்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. அத் தினசரியாகிய புகைப்படச்சுருள் அவிழ அவிழ எத்தனை விதமான உருவங்கள் தோன்றி மறைகின்றன! ஒவ்வொரு உருவமும் உயிரோடிருப்பது போலத் தோன்றுகிறது! ஊசியால் குத்தினால் அவ் உருவங்களினின்று ரத்தம் வருமென்று நமக்குத் தோன்றும். "கிசு கிசு" மூட்டினால் சிரித்துவிடுவார்கள் என்று நினைப்போம் அவ்வளவுக்கு அவை உயிருள்ள மனிதன் என்கிற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது.

இரு நூறு வருஷங்களுக்கு முன் தமிழ்நாடு இருந்த நிலைமையை அஞ்சன மை காட்டுவது போலக் காட்டும் இந் நூலை எழுதின ஆனந்தரங்கப் பிள்ளையைப் பற்றி இங்கு ஓரிரண்டு வார்த்தைகள் கூறுவது நியாயமாகும் இவர் கலி ௪௮௧௦-க்குச் சரியான கி.பி. ௧௭௦௯-ம் ௵ மார்ச்சு ௴ ௩௦௳ சென்னைக்கடுத்த பிரம்பூரில் பிறந்தவர் இவரது மாமனான நயினியா பிள்ளை என்பார் புதுச்சேரியில் பிரெஞ்சு இந்திய சங்கத்தாரின் தலைமை துபாஷியாக இருந்தார். அவர் பிரெஞ்சு கிடங்குத் தலைவனான* ஹெபேரின் சொற்படி தனது மைத்துனனும் ஆனந்தரங்கப்பிள்ளையின் தகப்பனுமான திருவேங்கிடம் பிள்ளைக்கு வேறுபல தனிகரையும் அழைத்து வரும்படி எழுத, திருவேங்கிடம்பிள்ளை ௪௮௧௭-ம் ௵ குடும்பசகிதம் புதுச்சேரியில் வந்து குடியேறினார். அவர் வந்து நல்லபடியாக வியாபாரம் செய்து தானும் பொருளீட்டிப் பிரெஞ்சுக்காரருக்கு லாபம் சம்பாதித்துக் கொடுத்தார். ஆனால் கொஞ்ச காலத்துக்கெல்லாம் ஹெபேருக்கும் நயினியா பிள்ளைக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு ஹெபேர் நயினியாபிள்ளையைச் சிறையிலிட்டுவிட்டான். அவரும் சிறைச்சாலையிலேயே வதை பொறுக்கமாட்டாமல் இறந்துவிட்டார். இதைக் கண்டு தங்களுக்கும் அபாயம் நேரிடும் என்று பயந்து அவருடைய குமாரன் குருவப்பிள்ளையும் திருவேங்கிடம் பிள்ளையும் சென்னைக்கு ஓடிப்போய்விட்டார்கள். குருவப்பிள்ளை மனவெழுச்சியுள்ளவர். ஆகவே தன் தகப்பனைச் சிறையிலிட்டுக் கொன்ற ஹெபேரைப் பழி வாங்க எண்ணி இங்கிலாந்து சென்று அங்கு நின்று பிரான்ஸுக்குத் தான் அப்பொழுது ராஜ்ஜியாதிகாரம் செலுத்திவந்த ராஜ்ஜியாதிகாரியைப் பார்த்து அவனிடம் முறையிட்டுக்கொண்டார். ராஜ்ஜியாதிகாரியும் ஹெபேரைச் சிறை செய்து பிரான்ஸுக்கு வருவித்துக் கொண்டு குருவப்பிள்ளையை ஸோன்மிஷல் வகுப்பு வீரனாகவும் † புதுச்சேரி பிரெஞ்சு சங்கத்தின் பிரதான துபாஷியாகவும், புதுச்சேரியிலுள்ள தமிழருக்குத் தலைவனாகவும் நியமித்தான். குருவப்பிள்ளை பாரிஸில் சனாதன தர்மத்தை நீங்கி, கிறிஸ்தவ தர்மத்தைக் கைக்கொண்டு திரும்பினார். இவர் திரும்பு முன்னரே ஹெபேருக்குப் பின் குவர்னராக வந்திருந்த பிரவோஸ்தியேர் என்பவன் திருவேங்கிடம் பிள்ளையைச் சென்னையினின்று மறுபடி வருவித்துக் கொண்டிருந்தான். கலி ௪௮௨௯-ல் குருவப்பிள்ளை காலமாகிவிட்டார். திருவேங்கிடம் பிள்ளையும் அதன் பிற்கு ஒன்றரை வருஷம் பிரெஞ்சுக்காரருடைய வியாபாரத்தை வளர்த்து வந்துவிட்டு இறந்து போய் விட்டார்.

பிரெவோஸ்தியேருக்குப் பிறகு பிரெஞ்சு குவர்னராக வந்த லென்வார் திருவேங்கிடம் பிள்ளையிடம் மதிப்பு வைத்தவனாதலால் ஆனந்தரங்கப் பிள்ளையிடம் அன்பு பாராட்டி அவரை ஓர் துபாஷியாக நியமித்துக் கொண்டான். அவ் வேலையில் அவர் பிரெஞ்சு சங்கத்தாருக்கு ஏராளமான லாபம் சம்பாதித்துக் கொடுத்ததனால்

† Chevolier of the order of St. Michael. * Governor

அவரை அவன் பறங்கிப்பேட்டைக் கிடங்குக்குச் சுதேசி தலைவராக ஏற்படுத்தான். துணிகளுக்கு நீலச்சாயம் போட்டு ஏற்றுமதி செய்துவருவதே அவருடைய முக்கியமான வேலையாக இருந்தது. இதில் லாபம் நிரம்ப வருவது கண்டு ஆனந்தரங்கப்பிள்ளை வடஆற்காட்டிலுள்ள லாலாப் பேட்டையிலும் ஆற்காட்டிலும் தன் சொந்தச்செலவில் கிடங்குகள் ஸ்தாபித்துத் தானும் சம்பாதித்துக்கொண்டு தன் எசமானர்களுக்கும் அதிகமான லாபம் உண்டாக்கித் தந்தார். ஆனால் மகாராஷ்டிரர் தென் நாட்டைத் தாக்கிப் பறங்கிப் பேட்டையையும் கொள்ளையடித்ததில் பிரெஞ்சுக்காரருக்கு அவ்வூர் வியாபாரம் சுருங்கத் துவக்கிவிட்டது.

கலி ௪௮௪௩-ல் துப்ளெக்ஸ் என்னும் மகா சாமர்த்தியமும் உத்யமும் வாய்ந்த பிரெஞ்சுக்காரர் புதுவைக் குவர்னராக நியமிக்கப்பட்டான். அவன் அதற்கு இருபது வருஷத்துக்கு முன் முதற்கொண்டு திருவேங்கிடம் பிள்ளையையும் நன்கு அறிந்தவன். ஆனந்தரங்கப் பிள்ளையின் வியாபார சாமர்த்தியத்தை நேரில் கண்டு மதித்தவன். ஆதலால் அவன் நம்பிக்கை வைத்தாக வேண்டிய பல உத்தியோகங்களில் அவரை நியமித்து வந்து, கடைசியில் கனகராயபிள்ளை என்ற பிரதான துபாஷி இறந்ததும் அவரையே அந்த ஸ்தானத்துக்கு நியமித்தான். அவரும் பிரெஞ்சுக்காரருக்குப் பெரிய லாபம் சம்பாதித்துக்கொடுத்து வந்தமையால் ௪௮௫௫-இல் துப்ளெக்ஸ் அவமதிக்கப்பட்டு ஊருக்குத் திருப்பி அழைக்கப்பட்டும் அவருடைய செல்வாக்கு குறையாமல் நின்றது. ஆனால் புதிய மனிதர் வந்து அதிகாரம் வகிக்கவே இவருடைய அதிகாரம் குன்றத் துவக்கிற்று. இவரும் அசக்தியினால் தான் வேலையைச் சரிவரப் பார்க்க இயலாது போய்விட்டது. அது கண்டு ௪௮௫௮-இல் அடைரை தெ லெய்ரித் என்ற குவெர்னர் பிரதான துபாஷி ஸ்தானத்தினின்று நீக்கிவிட்டான். அதன் மேல் நான்கு வருஷம் உயிரோடிருந்து ஆனந்தரங்கப்பிள்ளை கலி ௪௮௬௨-ம் வருஷம் மார்கழிமீ ௨௧-உக்குச் சரியான கி.பி. ௧௭௬௧ ஜனுவரிமீ ௧௨-ல் இறந்து போனார். அவர் இறந்த நான்கு நாட்களுக்கெல்லாம் கூத் என்னும் ஆங்கிலேயன் புதுவையைப் பிடித்துக்கொண்டுவிட்டான்.

இவருக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தும் இவர் ஜீவந்தராக இருக்கையிலேயே அவர்கள் காலமாகிவிட்டார்கள்.

இவருடைய தினசரி கி. பி. ௧௭௩௬ செப்டெம்பர் ௬-உக்குச் சரியான நள ஆவணி மீ ௨௫-உ யில் துவக்கப் பட்டு இவர் இறக்கும் தினம் வரையில் எழுதப்பட்டு வந்துளது. இவருடைய தமையன் மகன் திருவேங்கடபிள்ளை இவர் இறந்து ஒன்பது வருஷம் வரையில் அத் தினசரியைத் தொடர்ந்து எழுதிக்கொண்டு வந்தார்.

இந்த நூலின் அருமையை அறிந்து கலி ௪௯௪௮-ம் வருஷம் காலா மோம்பிரன் என்னும் பிரெஞ்சுக்காரன் அதினின்று சில பாகங்களைப் பெயர்த்தெழுதி வெளிப்படுத்த முயன்றான். திருக்குறளின் காமத்துப் பாலைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்த அரியைல் என்பவன் இன்னொரு பிரதி எடுத்து அதைப் பாரிஸ் புத்தக சாலையில் வைத்தான். ஐம்பது வருஷங்களுக்குமுன் லோத் என்னும் பிரெஞ்சுக்காரனும், மூப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் ஜூலியான் வான்துஸான் என்னும் பிரெஞ்சுக்காரனும் சில பாகங்களைப் பிரெஞ்சில் மொழி பெயர்த்து வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முப்பது வருஷங்களுக்கு முன், கலி ௪௯௯௨-இல் மன்னெனது, பாரெஸ்டு என்ற ஆங்கிலேயரின் யோசனையின் பேரில் இந் நூலில் சில பாகங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. ஆனால் தமிழில் எழுதப் பட்ட பிரெஞ்சுப்பெயர்களும் ஆங்கிலப் பெயர்களும் வியக்தமாக இல்லாமைபற்றி அம் மொழி பெயர்ப்பு மிகவும் குறையுற்றதாக இருந்தது. ஆகையால் கடைசியில் மொழி பெயர்த்த காலஞ் சென்ற கி. ரங்காசாரி என்பவர் புதுவை சென்று அதைச் சீர்ப் படுத்த யாரேனும் உதவி செய்வாரோ என்று பார்த்ததில், புதுவை துரைசாங்க புத்தகசாலையின் உதவிக் காப்பாளரும் எமது அரிய நண்பரும் ஆன ஸ்ரீ சிங்கார வேலுப்பிள்ளை

சமயசஞ்சீவியாக இருந்து அவருக்கு வேண்டிய சகல உதவியும் புரிந்து கொடுத்தார். அவருடைய உதவி இருந்திராத விஷயத்தில் அம் மொழி பெயர்ப்பு மிகவும் பயனற்றதாகவே இருந்திருக்கும். மோம்பிரன் வீட்டிலிருந்தும் ஆனந்தரங்கப்பிள்ளை வீட்டிலிருந்தும் கைப்பிரதிகளைத் தேட அவர் எடுத்துக்கொண்ட பிரயாசம் கொஞ்சமில்லை. எட்டு வருஷங்களுக்கு முன் புதுவையில் அடித்த சண்டமாருதத்தினால். ஸ்ரீ மோம்பிரன் வீட்டிலிருந்த கைப்பிரதிகளில் முக்கியமானபாகம் அழிந்துபோனதைக்குறித்து அவர் படுகிற வருத்தம் ஏராளமான செல்வத்தை இழந்தவர்களுடைய வருத்தத்தை விட அதிகமாக இருக்கிறது. அத்துணைக் கல்வி அபிமானம் ஸ்ரீசிங்காரவேலுப்பிள்ளைக்கு இருந்துவருகிறது. தற்பொழுது ஆனந்தரங்கப்பிள்ளையின் தினசரியை ஆங்கிலத்தில் வெளிப்படுத்திவரும் ஸ்ரீ தாத்வெல் அவருடைய உதவியை மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

தற்பொழுது ஆங்கிலத்தில் எட்டு புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. ஒன்பதாவது தயாராகி வருகிறதாக அறிகிறோம். நாம் இங்கே வெளியிடுவது இத் தினசரியின் கடைசி புத்தகமாகும். அது இதுவரையில் தமிழிலாவது ஆங்கிலத்திலாவது வெளி வந்ததில்லை. இதுதான் முதல் தடவையாக அது அச்சுவாகனம் ஏறுவது. ஆகவே 'பாலபாரதி'யின் நேயர்கள் இத்தகைய அரிய புத்தகத்தின் பகுதியைத் தாங்களேதான் முன் முதலாகப் பார்க்கிறோம் என்று நியாயமாகப் பெருமை பாராட்டிக்கொள்ளலாகும். மாதம் சில குறிப்புகளாவது இனி வெளிவந்து கொண்டிருக்கும்.

இந்தப் பகுதியின் கைப்பிரதியும் ஸ்ரீ சிங்காரவேலுப்பிள்ளையாலும் ஓர் காலத்தில் புதுவைப் புஸ்தகசாலைக் காப்பாளராயிருந்த பூர்க்குவேனாலும் தான் பார்த்தெழுதப் பட்டதாம். அது எமது நண்பர் ஸ்ரீ ஸ்ரீநிவாசசாரியாரால் எமக்கு அன்போடு உதவப்பட்டது. அதற்காக எமது பெருநன்றியை அவருக்கும் ஸ்ரீ சிங்காரவேலுப்பிள்ளைக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனந்த ரங்கப்பிள்ளை தன் தினசரியை, "காதால் கேட்டவைகளையும் கண்ணால் பார்த்தவைகளையும், கப்பல்கள் வருவதையும் கப்பல்கள் செல்லுவதையும் ஆச்சர்யங்களும் புதுமைகளும் ஏதேனும் நிகழ்ந்தால் அவற்றையும் இத் தினசரியில் குறிக்க இருக்கிறேன்" என்று துவங்குகிறார். அதுவே அவரது தினசரிக்குச் சரியான வர்ணிப்பு ஆகும்.

இத் தினசரியின் வாசகத்தைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லுவது முறையாகும். அது செந்தமிழ் நடையில் எழுதப்படவில்லை. அதில் எழுத்துப் பிழைகள் மலிந்து கிடக்கின்றது. அனேக படியாத குமாஸ்தாக்களைக் கொண்டு எழுதுவித்தது இந்த எழுத்துப் பிழைகளுக்கும் கருந்தமிழ் நடைக்கும் ஓர் காரணமாக இருக்கலாம். தினசரி கருந்தமிழில் எழுதப்பட்டிருப்பதாலும் அதன் நடையில் ஓர் வன்மையும் ஓட்டமும் இருப்பதால் அதை நாம் செந்தமிழாக்காமல் அப்படியே அச்சிடுவதற்கு அறிவாளிகள் ஆக்ஷேபிக்கமாட்டார்களென நம்புகிறோம். ஆனால் தந்நகர றன்னகரங்களையும் ரகர றகரங்களையும் தினசரியிலுள்ளபடியே அச்சிட்டால் கற்றோருக்கு அது விருசி தரும் என நினைத்து இவ் விஷயத்தில் மாத்திரம் எழுத்துக்களை இலக்கணப்படுத்தி அச்சிடுகிறோம்.

விக்கிரமஹு சித்திரை மீ முதல்௳ புதன் கிழமை

௲௭௱௫௰ ஆண்டு அபிரேல் மீ ௲ ௳

இந்த நாள் விக்கிரமஹு மானபடிபால் முன் சவ்விய சக்கிரம் அன்பத்துநாலு வருஷமும் அவசவ்விய சக்கிரம் அன்பத்துநாலு வருஷமும் ஆக நூத்தெட்டு வருஷமும் ஆயிப் போயி மறுபடி நூத்தெட்டு வருஷத்துக்கு விக்கிரமஹு ஆதியாய் மேஷ ராசி முதல் மீனராசி வரைக்கும் ராசி ௧௨க்கு ராசி ௯-க்கு வருஷம் ௯-ஆக வருஷம் நூத்தெட்டுக்கு மேஷ முதல் கன்னி வரைக்கும் சவ்விய சக்கரமான படியினாலே

இதுக்கு சூரியன் ராசாவானபடியினாலே சூரிய வம்சம் வந்து நந்த கோபால வம்சமானபடியினாலே இனிமேல் இந்த நூத்தெட்டு வருஷத்துக்கும் கோபால வம்மிசத்தார் இந்த ராச்சியத்துக்கு ராசரிகம் பண்ணி இதுக்குள்ளே சவ்விய ராசி ஆறும் கன்னி வரைக்கும் அன்பத்து நாலு வருஷம் விருத்தி அவசவ்வியம் துலாமாதியாய் மீன வரைக்கும் அன்பத்துநாலு வருஷத்துக்கும் சிறிது விருத்தியும் சிறிது சீரணமுமாய் ஆக நூத்தெட்டு வருஷத்துக்கும் கோபால வம்மிசத்தார் ராசரிகம் பண்ணி அப்பால் மிலாச்ச காந்தமாய் நூத்தெட்டு வருஷம் நடக்குமென்று இந்தப் படிக்கு அண்ட சக்கிரம் சூரியனுட சக்கிரம் நடக்கிறதென்று சொல்லி சித்தாராம் சோசியர் சொன்னதும் எழுதிக் கொடுத்தும் முன் மீனசக்கிர அந்திபும்பிரமாதிஹு வரைக்கும் அவர் சொன்னபடிக்கு டில்லி முதல் ராமேசுரம் வரைக்கும் யிரெம்புராசியுறும்மி தேசம் தீவாந்தரம் வகையறு சூரியனுடைய கிரணம் படுகிற இடங்களெல்லாம் ராசீகம் தப்பி அராசிகமாய் டில்லி பட்டணத்திலே கூட ஒரு பார்ச்சாவை வெட்டிப் போட்டு மறுபடி ஒரு பார்ச்சாவை வைக்க அவனும் பிறப்பட்டு ஓடிப்போக டில்லி பட்டணத்திலே இருக்கிற பெண்டுகள் சகலமான பேரும் வலசைகள் போக இந்தப்படி ராச்சியங்களெல்லாம் அராச்சிகமாய் நடக்குதென்குறதாய் சேதி கேழ்க்கப்பட்டுது. இந்தப் படிக்கு பிரமாதிஹு வரைக்கும் சாஸ்திரம் சொன்னபடிக்கு சரி இனிமேல் விக்கிரமஹு முதல் நடக்கிற அனுபோகம் அறிய வேண்டியது.

இந்த நாள் பட்டணத்திலேயுள்ள பல்லக்குக்காரர் போயிண்டர் கூலிக்காரர் குண்டிக் கிராமம் ஒரு கரை அரியாங்குப்பம் அழிசி பாக்கம் லிங்கம் கோவில் சுத்துப்பட்டுக் கிராமங்களிலே இருக்கிற ஆளுகள் எல்லாரையும் கும்பினியிலே வேலை செய்யத் தக்கதாக வரச்சொல்லி தமுக்குப் போட்டார்கள். பின்னை ஒன்றும் விந்தையான சமாச்சாரம் கேழ்க்கப்பட இல்லை. இந்த நாள் சந்தாசாய்பு குமாரன் ராசாசாய்பு பல்லக்கு ஏறிக்கொண்டு வெளியே போகச்சே நடுவழியிலே பல்லக்கிலே யிருந்தவனை தாழ இறங்கச் சொல்லி பல்லக்கையும் போயிண்டரையும் பத்து பேர் சொலுதாதார் பிடுங்கிக்கொண்டு போய் விட்டார்கள், மறுபடி முசெல்லியுடைய உத்தாரம் வாங்கிக் கொண்டு சாயங்காலம் பல்லக்கு ஏறிக்கொண்டு வெளியே வந்தபோது மய்யருக்கு மாத்திரம் உத்தாரம் ஆயிருந்தது. சொல்தாதுகளுக்குச் சொல்லாத படியினாலே மறுபடியும் அவமரியாதை பண்ணினார்கள். மறுபடி மய்யோர் அவருக்கு மாத்திரம் உத்தாரம் என்று சொல்லி யனுப்பிவிச்சதின். பேரிலே விட்டு விட்டார்கள்.

விக்கிரமஹு சித்திரை மீ ௨ ௳ வியாழக்கிழமை

௲௭௱௫௰ ஆண்டு அபிரேல் மீ ௰௳

இந்தநாள் காலத்தாலே ஒன்பது மணிக்கு சீனுவந்தாறு வந்து கண்டு பேசிக்கொண்டு இருந்து தனக்குக் குடுக்கவேண்டிய ஒன்பதாயிரம் ரூபாயிக்கும் வேறே சீட்டெழுதிக் கொடுக்கச் சொல்லியும் ஒரு வருஷத்திற்கு வட்டிப்பணம் முன்னே குடுக்கச் சொல்லிக் கேட்டேன். அதுக்கு நூத்தித் தொண்ணூறு ரூபாயி குடுத்திரே மத்த ரூபாயு குடுக்கச் சொல்லிக் கேட்டான். அதுக்கு மூணு கெடுவாய் குடுக்கிறோம் என்று சொன்னோம். கப்பல் சமாச்சாரம் ஆனிமீத்தையிலே வரும் இப்படி வருகிறதில்லை என்று சொன்னார். இந்த சித்திரைமீத்தையிலே வரும் என்று சொன்னதுக்கு வருகிறதில்லை உமக்கும் நமக்கும் பந்தயம் என்ன என்று இப்படி பேசிக்கொண்டிருந்து பிறப்பட்டுப் போயிவிட்டான். ராத்திரி பதினொண்ணரை மணிக்கு இங்கலேசுக்காருடைய படகு கரை

யோசத்திலே கண்டுது என்கிறதாய் ரெண்டு பீரங்கி போட்டு தம்புறு அடிச்சு சகலமான பேரும் வெள்ளைக்காரர்க்கும் செல்க்காரர் சகல மானபேரும் கோட்டை யண்டை வந்திருந்து மறுபடியும் வர வர யிருக்கிற யிடங்களிலே பிறப்பட்டும் போயிவிட்டார்கள்,

ராஜகோபாலன் கடிதங்கள்

எ வைகாசி உ.

பிரிய சகோதர,

நேற்றெல்லாம் இவ்வூரில் பெரிய கோலாகலமாயிருந்தது. இந்தச் சிறு ஊரில் எது நடந்தாலும் எல்லோரும் அதில் கலந்துகொள்ளுகிறார்கள். நமக்கென்ன என்று ஒருவரும் இருந்துவிடுவதில்லை. நேற்று அடுத்த தெருவில் நடந்த கலியாணத்திற்கு ஆபால கோபாலம் எல்லோரும் வந்திருந்து வெகு விமரிசையாக நடத்தினார்கள். யாருடனும் சேராமல் தனியாக இருந்த என்னைக் கூட அவர்கள் வலுக்கட்டாயப்படுத்திக் கலியாணப் பந்தரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள்.

மணப்பெண்ணான பார்வதி அழகான பெண் என்று சொல்லமுடியாது. அவளது உருவம் சாமானியமான உருவமாகத்தானிருந்தது. ஆனால் பெண்களுக்கு இன்றியமையாதவை என்று நம் பெரியோரால் வகுத்து வைக்கப்பட்ட குணங்களனைத்தும் அவளிடம் இருந்ததாகக் கண்டேன். அவளது பரந்த நெற்றியும், பெரியவையாயிருப்பினும் காற் கட்டை விரல்களையே பார்த்துக்கொண்டிருந்த கண்களும், நின்றதோர் சிறிய நிலையும் அவளது கபடற்ற நெஞ்சத்தையும் குடிப்பிறந்தாருக்கு இயற்கையாக இருக்கும் நாண உணர்ச்சியையும் காட்டின. அப் பேதைப் பெண் அங்கு கூடியிருந்த அனைவரின் அன்பையும் மரியாதையையும் ஆகருஷித்துவிட்டாள்.

நம் நாட்டின் புண்ணியத்தினால் இத்தகைய பெண்மணிகள் இக் காலத்திலும் அனந்தம் பேர்கள் இருக்கிறார்களானதால் வேறு ஒரு விசேஷம் இருந்திராவிடில் இவ் விவாகத்தைப் பற்றியும் கலியாணப் பெண்ணைப் பற்றியும் உனக்கு இன்று எழுதியிருக்கமாட்டேன். விசேஷம் என்னவென்றால் இப் பெண் தந்தை யில்லாத அநாதைப்பெண். விவாகம் செய்துவைப்பவர் இவ்வூர்ப் பெரும் பண்ணையாரான வேணுகோபாலையர் என்பார். பந்தரில் கூடியிருந்தவர்களெல்லாம் அவருடைய பெருந் தன்மையைப் பற்றிப் புகழ்ந்த வண்ணமாக இருந்தார்கள். அவரும் தன் குழந்தைக்குக் கலியாணம் நடந்தால் எத்தனை கரிசனமாக, எத்தனை கவலையோடு காரியங்களைப் பார்த்திருப்பாரோ அத்தனை கரிசனமாக, அத்தனை கவலையோடு இவ் விவாகத்தை நடத்துவதைக் கண்டேன். வந்தவர்களை வரவேற்கிற இடங்களில் அவரைப் பார்க்கலாம். கடிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு முகூர்த்த வேளையைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தது அவர்தான். மணப் பந்தரில் வேண்டிய சாமக்கிரிகள் காலத்தில் வாராவிடில் அந்த இரைச்சலுக்கெல்லாம் மேலே அவருடைய கம்பீரமான தொனியே மிகவும் இரைந்து கேட்கும். தன் குழந்தைகளை வெட்கப்படாமலிருக்கும்படி தட்டிக்கொடுத்து அந்த மணப் பந்தரில் சுபமாகப் பாடச் செய்தவரும் நமது வேணுகோபாலையரே.

கலியாணம் நடந்த புதுமையும் அவர் காட்டிய அக்கரையையும் கண்ணுற்று, என்னைச் சுற்றியிருந்த ஜனங்களை இவருக்கேது தனக்குச் சம்பந்தமில்லாத ஓர் பெண் விஷயத்தில் இத்தனை கரிசனம் என்று கேட்டேன். அவர்களுள் ஒருவர் சொன்ன கதையை உனக்கு இங்கே சொல்லுகிறேன். அந்தப் பயங்கரமான, ருசிகரமான கதையை அவருடைய சாமர்த்தியத்தோடு, கவிதா சக்தியோடு, சச்சொரூபமாய் வர்ணித்தல் எனக்குச் சாத்தியமில்லை. அதை நினைக்கிறபோதே என் மனதில் பல்வேறு மெய்ப்பாடுகளும் தோற்றங்களும் எழுவதால், உஷ்ணமே இல்லாமலிருக்கும் என் நடையில்கூடச் சிறிது உஷ்ணமும் ஒளியும் தோன்றும் என நம்புகிறேன். ஆனால் அந்த உஷ்ணமும் ஒளியும் எனது என நினைக்காதே. எனக்கு இக் கதையைச் சொல்லியவரின் ஆகார இங்கிதங்களும், கண்களின் சுடரும், குரலின் காம்பீரியமும் மார்த்தவமும், சொற்பொலிவும்தான் இங்கே நான் எழுதப் புகுகிற சரித்திரத்துக்கு உண்மையான ஆசிரியர்கள். அதனை சிரமப்பட்டு எழுதும் நானல்லன் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிடுகிறேன்.

வேணுகோபாலையர் ஒரு பெரும் பண்ணையார் என்று சொன்னேன். இந்த ஊரில் உள்ள நஞ்சை நிலத்தில் நாலில் ஒரு பங்கு இவரதே. இதைத் தவிர எத்தனையோ தோப்புகளும் துறவுகளும் இவருக்கிருக்கின்றன. பொங்கலன்றைக்கு இவருடைய மாடுகளைப் பார்ப்பது ஓர் பெருங்காட்சியாகவே இருக்கும். நானும் இங்கிருந்து நாலைந்து மாதமாகப் பார்த்துக் கொண்டிருப்பதில் மனிதன் சீலமுள்ளவர், கொடையாளி, பக்திமான் நிரம்ப வாசித்தவரல்லர், ஆனால் கல்விமான்களைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு நல்ல நூல்களில் சுவையான பாகங்களை அடிக்கடி படித்து வருவதே அவரது முக்கியமான காரியம்.

இவருக்கு வெகு நாட்களாக ஆண்குழந்தை ஒன்றும் பிறவாமலிருந்தது. சிலர் இப்பொழுது செய்ய ஆரம்பித்திருக்கிறது போல உ நாட்களில் ரயிலில் ராமேசுவரம் சென்று திரும்பாமல், இவர் மனைவியையும் பெண்களையும் அழைத்துக்கொண்டு சாமான்களை யெல்லாம் இரட்டை மாட்டு வண்டியில் போட்டுக்கொண்டு ஒரு நாளைக்குப் பத்துமைல் பதினைந்துமைல் வீதம் நடந்துகொண்டே சென்று ஏழெட்டு வருஷங்களுக்கு முன் ராமேசுவர யாத்திரை செய்தார். அதன் பயனாக அவருக்குக் கிருஷ்ண விக்கிரகம் போல ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. தாயும் தந்தையும் குழந்தையை இமைக்குள்ளே வைத்து காத்து வந்தனர்.

இவ்வாறிருக்கையில் ஓர் நாள் வேணுகோபாலையர் வழக்கம்போல பூமியைப் பார்த்துவிட்டு வருவதற்காகச் சாயங்காலம் நாலு மணிக்குப் புறப்பட்டுப்போய்விட்டார். ஐந்து ஐந்தரைமணியாயிற்று அவர் வரவில்லை. வரும்போதே தன் அருமந்த புதல்வனை ராமநாதனைக் 'கண்ணு' என்று அழைத்துக்கொண்டு வருவது அவர் வழக்கம். குழந்தையும் அவர் வரும் நேரத்துக்குத் தயாராக வாசற் திண்ணையில் வந்து காத்துக்கொண்டிருக்கும்—அத்தனை அறிவும் வாஞ்சையும் அச் சிறு குழந்தைக்கு. அன்றைக்கு அவர் வழக்கமான நேரத்துக்கு வாராததால் திண்ணையில் உட்கார்ந்த குழந்தை மெல்லத் தவழ்ந்துகொண்டு மாட்டுக் கொட்டத்திற்குள் போயிற்று. குழந்தை கொட்டத்தினின்று வெளியில் வந்து பார்ப்பதும் மறுபடி கொட்டத்துக்குள்ளே சென்று கன்றுகளோடு விளையாடுவதுமாக இருந்தது. இவ்வாறு எத்தனை நாழிகை ஆயிருக்குமோ தெரியாது, ஆனால் திடீரென்று தீ, தீ, நெருப்பு, நெருப்பு, என்ற சத்தம்

கிராமத்தில் பிறந்தது. யாரோ பின்புறத்துத் தெருவில் இப்பொழுது புதியதாக வந்திருக்கிறதே மண்ணெண்ணெவிளக்கு, அதை இடறிவிட்டார்களாம். அவ்வளவுதான். அதினின்று துணிமணிகள், துணிமணிகளினின்று இரட்டைவரி, இரட்டை வரியினின்று கூரை இவ்வாறு அக்னி பகவான் தாவிவிட்டான். இருட்டும் விழுந்தது. வாயு பகவானும் சேர்ந்துகொண்டுவிட்டான். ஜனங்கள் நீர்க் குடங்களை எடுத்துக்கொண்டு வருமுன் அக்கினி கைமீறிப் போய்விட்டது. கூரைவீடுகளில் பிடித்த தீ ஓடு மேய்ந்த வீடுகளுக்கும் தாவிவிட்டது. ஒரு புறம் பீரங்கி வெடிப்பதுபோல சடேர் சடேர் என்று சப்தம் பயங்கரமாகக் கேட்கிறது. இன்னொரு புறம் வெவ் வானத்தைப் பழித்துக்கொண்டு அக்னி ஜ்வாலைகள் பூமியையும் ஆகாசத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டு வருகின்றன. ஆணும் பெண்ணும் குடங்களில் ஜலம் எடுத்த வண்ணமாக கொண்டுவரும் ஜலத்தைக் கூரைகளின் மீது இறைத்த வண்ணமாக, இருக்கிறார்கள். எடு, கொண்டா, பிரி, என்கிற சத்தங்கள் மூங்கில்களின் வெடிகளுக்கும் ஓடுகளின் 'துமுல'த்துக்கும் இடையிடையே கேட்கின்றன. ஆனால் நெருப்பு அவியவேயில்லை. ஜ்வாலைகள் வானத்தையே நக்கி விழுங்கிவிட எழுந்த அக்கினிதேவனது நாக்குகளைப் போன்று விளங்குகின்றன. ஈசுவரிதான் பயங்கரத்தையும் சர்வாகருஷணமான அழகையும் எப்படிச் சேர்த்து வைத்திருக்கிறாள்! கிராமத்தை துவம்ஸம் செய்துவருகிற அந்த அநியாயமான தழற் பிழம்புகள் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தனவாம். காற்று வீசும் திக்குகளெல்லாம் அத்தழல் வெள்ளம் நெருப்புக் கடலைப் போலக் கொந்தளித்தெழுந்துகொண்டு செல்லும். சூரிய பகவானுடைய தேரில் கட்டிய குதிரைகளோ, தீ வெள்ளம் பெருகியோடும் சிவசமுத்திரமோ நயகாராவோ, தான் செய்கிற சம்ஹாரத்தைக் கண்டு களிக் கூத்தாடும் துர்க்கையின் பயங்கரமான நிர்த்தனமோ என்று சொல்லும்படி நெருப்புப் பொங்கிக்கொண்டு, கொந்தளித்துக் கொண்டு, அலை அலையாய் எழுந்து ஆடிக்கொண்டு, மென்மேலும் சென்றது.

நெருப்புப் பிடித்ததுமே வேணுகோபாலய்யருக்குச் சமாசாரம் எட்டி அவரும் வந்துவிட்டார். அவர் வந்த பிறகு நெருப்புஅணைக்கும் முயற்சி முன்னை விடகொஞ்சம் அதிக ஒழுங்காக நடைபெற ஆரம்பித்தது. ஆனால் பஞ்சபூதங்களில் எது சினந்தாலும் மனிதன் எம்மாத்திரம்? நெருப்பு அடங்கினது போல அடங்கி மறுபடியும் இன்னொரு பக்கம் கிளம்பிவிட்டது. வானத்தில் பறந்த வண்ணமாக இருந்த கங்குகள் வேணுகோபாலய்யர் தெருவிலும் வீழ்ந்து அவரது மாட்டுக் கொட்டகையிலும் தீ வைத்துவிட்டன. அவருக்கு அடுத்த தெருவில் சமாசாரம் எட்டி அவர் வருவதற்குள் கால் மணி நேரம் ஆகி விட்டது. அதற்குள்ளும் அவரது ஆட்கள் மாடுகளையும் கன்றுகளையும் கட்டுக்கயிறுகளை அறுத்து ஓட்டிவிட்டுக் கூரைகள் மீது தண்ணீரை ஊற்றிவந்தார்கள். அவர் வந்ததும், மாட்டுக் கொட்டத்தினின்று வீட்டுக்குத் தீ பரவாமற் செய்வதற்காகத் தன் வீட்டுக் கூரை மீது தண்ணீரைக் கொட்டச் சொல்லி விட்டுக் கூரையையும் பிரிக்கச் செய்துகொண்டிருந்தார். அவர் இக் காரியத்தைக் கவனித்துக்கொண்டிருக்கையில் வீட்டுக்குள்ளிருந்து, கண்ணனைக் காணோமே, தேடுங்களேன்! என்ற சத்தம் கேட்டோர் இருதயத்தை உடைத்துக்கொண்டு பிறந்தது.

வேணுகோபாலய்யருக்குக் கைகால் ஓடவில்லை. வீடு முழுவதும் தேடுவித்தார். தெருவு முழுவதும் தேடச் செய்தார். தான் வீடுவீடாய்ப் புகுந்து பார்த்தார். கண்ணனை எங்கும் காணோம். நெடுநாள் பிள்ளை யில்லாமலிருந்து

அரிய தவங்கள் செய்து, கடைசியில் பகவத்கடாக்ஷத்தால் அரிதில் பெற்றெடுத்து, அதியந்த வாஞ்சையுடன் வளர்த்துவந்த மூன்று வயது முற்றாத குழந்தை தெருவு முழுவதையும் அக்கினி பகவான் துவம்ஸம் செய்துகொண்டிருக்கும் சமயத்தில், கண்ணில் அகப்படவில்லையானல் எந்தத் தகப்பனுடைய நெஞ்சு சகிக்கும்? தசரதனைப் பற்றிக் கம்பன் சொல்லியது போல நமது வேணுகோபாலையர் 'கண் இலான் பெற்று இழந்தான் எனக் கடுந்துயரம் உழந்தார். கடைசியில் குழந்தையை எங்கும் காணாது கண்டு 'ஐயோ, மாட்டுக் கொட்டத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டானோ என்னவோ தெரியவில்லையே!' என்று சொல்லிக்கொண்டு நெருப்பு மலையைப்போல எரிந்துகொண்டிருந்த மாட்டுக் கொட்டத்துக்குள் நுழைவதற்கு விரைந்தார். ஆனல் அவரது ஆட்கள் நாங்கள் இருக்கையில் எசமான் போகக்கூடாது என்று சொல்லித் தேக்கிவிட்டு கொட்டத்துக்குள் நுழையச்சென்றார்கள். ஆனல் கொட்டம் என்று அதை எப்படிச் சொல்லுவது? மேலே ஒரு அக்னிமலை அதனுள்ளே, புகைக்குகை; மேலே அலை வீசிப் பொங்கும் ஓர் தீக்கடல்; கீழே, சுழன்றுகொண்டிருக்கும் ஓர் புகைக் குழம்பு! இந்தப் புகைக் குழம்புக்குள், இந்த புகைக் குகைக்குள் யாருக்கும் போகச் சக்தியில்லை. போனவர்களெல்லாம் இரண்டடி எடுத்து வைத்ததும் கனல் தாங்கமாட்டாமல் திரும்பிவிட்டார்கள். 'ஐயோ, ஒருவரும் போக முடியவில்லையே? நானேனும் போய்ப் பார்க்கிறேனே,' என்று கதறிக் கொண்டு வேணுகோபாலையர் ஜோதியும் இருளும் மாறிமாறி ஆட்சி புரியும் அந்தப் புகைக் கிடங்கை நோக்கிக் காலெடுத்து வைத்தார். ஆனல் அவருடைய ஆட்கள் அவரைச் செல்ல விடவில்லை.

இப்படி எல்லோரும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருக்கையில் ஒரு மனிதன் கூட்டத்தினின்று பாய்ந்து வந்து தன் உடைகளைக் களைந்து, அங்கு ஜனங்கள் கொண்டு வந்த வண்ணமாயிருந்த ஜலத்தில் நனைத்து கீழே கிடந்த ஓர் நார்க் கூடையையும் எடுத்துக்கொண்டு, கொட்டம் என்ற பேரை இழந்துவிட்ட அந்த அந்தகார பிழம்புக்குள் நுழைந்து விட்டான். எல்லோரும் திடுக்கிட்டுப் போய் விட்டார்கள் ஒவ்வொருவரும் தம் கண்ணாலும் மனத்தாலும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனை அம் மகானுபாவனைப் பின் தொடர்ந்தார்கள். ஆனல் அவன உருவம் கண்ணுக்கு மறைந்துவிட்டது. அவன் சென்ற தூமகற்ற பாதையினுள் மனமும் செல்லமுடியாமல் திரும்பிவிட்டது. ஒவ்வொருவனும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறான். ஒவ்வொரு விநாடியையும் இருதயத்தின் ஒவ்வொரு அடியையும் ஒவ்வொருவனும் வியக்தமாக எண்ண முடிந்தது—அவ்வளவு தீக்ஷண்யமாய் இருந்தது அந் நேரத்தில் அவர்களுடைய உணர்ச்சி!

முடிவில்லாத யுகம் போலத் தோன்றிய அந்த உணர்ச்சிச் செறிவுக்கும் ஓர் முடிவு ஏற்பட்டது. உள்ளே சென்ற மனிதன் தூக்கமுடியாமல் தூக்கி வருபவன் போல் ஒரு கூடையைத் தாங்கிக் கொண்டு, பாதாளத்தினின்று உதங்கன் பாய்ந்தது போலப் பாய்ந்து வந்து அப் பாரத்தைத் தரையில் வைத்துவிட்டான். மிருதுவாக வைக்க வேண்டும் என்கிற அவனது கருத்தும் தள்ளாடிக் கொண்டிருந்த அவனது அவயவங்களும் ஒன்றோடொன்று போராடியது அவன் அக் கூடையை வைத்த வேகத்தில் காணப்பட்டது. அத்தனைதான். அவனும் உடனே கீழே விழுந்துவிட்டான்.

கூடையில் கண்ணனின் சரீரத்தைக் கண்டதும் வேணுகோபாலையருக்கு உயிர் வந்தது போலிருந்தது. அங்கிருந்த தனது மனைவியிடம்,

குழந்தை உயிருடனிருக்கிறானா, பார், என்று சொல்லிவிட்டு துவண்டு கிடந்த அவன் உடம்பை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு அவள் மடியில் வைத்துவிட்டு, அவர் அந்நெருப்புக் கடலுக்குள் குளித்து வந்த மனிதனுக்குச் சைத்தியோபசாரம் செய்வதற்காக அவனிடம் வந்து விட்டார்.

அதற்குள்ளும் அவருடைய பண்ணை ஆட்கள் அம் மனிதனை ஓர் கட்டிலில் தூக்கிப்போட்டுக் கொண்டு தீ வெக்கை படாத ஓரிடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார்கள்.

அங்கே வந்து பார்த்ததும், "ஆகா வீரப்பிள்ளையா? தன் உயிரை லக்ஷியம் செய்யாமல் என் குழந்தையைக் காக்க முயன்ற மகானுபாவா! எங்கே, உடம்பை தொட்டுப்பார்க்கிறேன். ஐயோ உடம்பெல்லாம் ரணமாக இருக்கிறதே! கொண்டுவா தேங்கா நெய்!" என்று மூச்சுக் கூட விடாமல் பேசினார். எண்ணெய் வந்ததும் உடம்பெல்லாம் அபிஷேகம் செய்தார். தானே அவருக்கு விசிறினார். துணியைக் குளிர்ந்த ஜலத்தில் நனைத்து நனைத்து அவர் கண்ணில் ஒற்றினார். ஆனால் என்ன செய்தும் அவருக்கு பிரக்ஞை வரவில்லை.

நெருப்பும் தானே சலித்துப்போய் ஓர் வாறு தணிந்தது. வேணுகோபாலையர் வீரப்பிள்ளையைத் தனக்குச் சொந்தமான காற்றோட்டமுள்ள ஒரு வீட்டிற்குள் கொண்டு போய்ச் சேர்த்து, நல்ல வைத்தியர்களை உடனே வருவித்து, அன்றிரவு முழுதும் விழித்துக் கொண்டிருந்து அவருக்குச் சிகிச்சைகள் செய்வித்தார். அவர் கண்ணைத் திறந்து பார்த்து ஓர் வார்த்தையாவது பேசிக் கேட்கவேண்டும் என்பதும் தன் மனதில் உள்ள அடங்காத நன்றியறிதலை அவருக்குத் தெரிவிக்கவேண்டும் என்பதும் அவருடைய ஆசை. ஆனால் அன்றிரவுமுழுவதும் வீரப்பிள்ளை கண் விழிக்கவேயில்லை. மூச்சுமாத்திரம் வெகுவெகு லேசாக ஓடிக் கொண்டிருந்தது.

அடுத்த நாள் முழுவதும் பெயர் போன ரண எண்ணெய்களெல்லாம் போட்டு வந்தும், ரண வைத்தியர்கள் தங்களுக்குத் தெரிந்த சிகிச்சைகளையெல்லாம் பிரயோகித்து வந்தும் வீரப்பிள்ளைக்குச் சிறிதேனும் பிரக்ஞை வரவில்லை. கடைசியாக மூன்றாவது தினம்தான் அவர் கண்ணைத் திறந்தார். ஐயர் அவர் படுக்கையண்டைவிட்டு நகருவதேயில்லையாதலால் அவர் விழிக்கும் போது பக்கத்திலேயேதான் இருந்தார். பேசுவதற்காக வெகுப் பிரயத்தனப்பட்டு வீரப்பிள்ளை, கண்ணு உயிருடனிருக்கிறானா, என்று அரிதில் கேட்டார். ஐயர் கண்களினின்று ஜலம் மலர்கள் உதிர்வது போலத் துளித்து வீழ்ந்தது. "என் வம்சமாகிற விருக்ஷத்தை அழியாமல் நிலைக்க வைத்த வள்ளலே! உன் புண்ணியத்தால் பிழைத்தான். ஆனால் நீ பிழைக்கவேண்டுமே. சிபி சக்கரவர்த்தியைப்போல மன்னுயிரைக் காக்கத் தன் உடலைக் கொடுத்தாய். என்னை கொடுத்தாகிலும் உன் உடலைக் காக்க நான் விரும்புகிறேன். ஈசுவர அனுக்கிரகம் இருப்பின் அது அசாத்தியமில்லை," என்று அவர் சொல்லிக் கொண்டே போகையில் வீரப்பிள்ளையின் மனைவி அவருக்குப் போட மருந்து கொண்டு வந்தாள். அவர் விழித்துக்கொண்டதைப் பார்த்ததும் அவ் அம்மை முகத்தில் தோன்றிய களிக்குறியை என்னென்று சொல்லலாகும்!

> இறந்தனர் பிறந்த பயன் எய்தினர் கொல் என்கோ?
> மறந்தனர் அறிந்து உணர்வு வந்தனர் கொல் என்கோ?
> துறந்தஉயிர் வந்துஇடை தொடர்ந்ததுகொல் [என்கோ?
> திறம் தெரிவது என்னை கொல் இந் நன்னுதலி [செய்கை?

என்றுதான் அந்த அம்மையின் ஆனந்தத்தை வர்ணிக்கலாகும். ஆனால் அந்த ஆனந்தம் சற்று

நேரம்தான் இருந்தது. ஏனெனில் தன் குழந்தையை அழைத்து வரும்படி மனைவியிடம் சொல்லி, அக்குழந்தை வந்ததும் அதைத்தன் சக்தியற்ற கைகளால் தடவிக் கொடுத்தார். அவ்வளவுதான்-அடுத்த நிமிஷத்தில் அவர் கண்கள் செருக ஆரம்பித்துவிட்டன. அவர் மனைவி 'ஐயோ' என்று கதறிக்கொண்டு அடிபற்ற மரம் போலக் கீழே விழுந்துவிட்டாள். வேணுகோபாலையருக்கும் வீரப்பிள்ளை பொறி முடிந்து போய்விட்டது என்று தெரிந்துவிட்டது. ஆதலால், "என் ஐயனே! சிபியும் ததீசியும் சென்றிருக்கும் சுவர்க்கத்திற்கு நீ செல்லுகிறாய்; இவ்வுலகத்தைப்பற்றின விசாரம் உனக்கு வேண்டாம்; நம்மிருவருக்குமுள்ள மனஸ்தாபம் நேற்று முந்தைநாளோடு தீர்ந்துவிட்டது; பார்வதியை என்னுடைய மூன்றாவது குமாரி என்று பாவித்துக் கொண்டுவிட்டேன்; அவளது போஷணை, விவாகம் முதலிய சகல காரியங்களையும் என் பாரமாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்; அவளுக்கும், உன் மனைவிக்குமாக நமக்குள் வழக்கிலிருந்த ஐந்து ஏகராவோடு வேறு ஓர் ஐந்து ஏகராவும் சேர்த்து பத்து ஏகரா பூமியை இன்றே எழுதி வைத்து விடுகிறேன்; குடும்பக் கவலையை விட்டுவிடு; என் அப்பனே! உனக்கு நேரே எனது நன்றியைக் காட்டக் கொடுத்துவைக்காமல் போய்விட்டேன். கொடுத்துவைத்திருந்தேனேயானால் உன் ஆவி இத்துணை சீக்கிரம் செல்லாது; ஆனால் எல்லாம் தெய்வத்தின் செயல்," என்று சொல்லிக் கொண்டே போகும்போது வீரப்பிள்ளையின் முகத்தில் திருப்தியையும், சந்தோஷத்தையும், சாந்தியையும் காட்டும் ஓர் புன்முறுவல் சாயை பரவிற்று. அவ்வளவோடு அவரது ஜீவன் பரலோகம் சென்றுவிட்டது.

வீரப்பிள்ளையின் ஆத்ம தியாகத்தை என்னால் அளந்து சொல்ல முடியவில்லை. அவருக்கும் வேணுகோபாலையருக்கும் ஓர் நிலத்தைப் பற்றிய வழக்கு வெகு நாட்களாக நடந்து வந்ததால் அவர்களிருவருக்கும் பேச்சு வார்த்தை கூட நின்று போயிருந்தது. ஆனால் குழந்தை எரிந்து கொண்டிருக்கிற மாட்டுக் கொட்டத்தில் அகப்பட்டுக் கொண்டதோ என்கிற சந்தேகத்தினால் ஐயருடைய இருதயம் வெயிலிடைப்பட்ட புழுவைப் போலத் துடிக்கிறதைப் பார்க்கையில் வீரப்பிள்ளையின் மனது சகிக்கவில்லை. ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் அந்தப் புகைக் குடகுக்குள் புகுந்து குழந்தையைத் தேடி பிரக்ஞை போய் ஓர் மூலையில் துவண்டுகிடந்த அதன் உடம்பில் தீ படாமல் காத்து அப்படியே ஈரத்துணியால் அதை மூடி வெளியில் கொண்டுவந்து சேர்த்துவிட்டார். அவரன்றோ மகாபுருஷன்! மனிதன் என்றைக்கிருந்தாலும் சாகிறான். ஆனால் இத்தகைய சாவு மகாத்மாக்களுக்கன்றி மற்றோருக்குத் துர்லபம்.

தவிர 'ஆத்மலாபத்தைச் சம்பாதிப்பவனுக்கு மற்றச் சகல லாபங்களும் சேர்ந்து கிடைக்கவே செய்யும்' என்று மகாத்மா யேசு சொல்லியிருப்பது போல வீரப்பிள்ளைக்கும் சேர்ந்தது. முன் சொன்ன வழக்கினால் அவரது சொத்துக்களெல்லாம் கரைந்து அவரது நிலைமை வெகு கஷ்டமாகிவிட்டிருந்தது. வக்கீல்களும் சாக்ஷிகளும் அவருடைய சிறு முதலைப் பிடுங்கித் தின்றுவிட்டார்கள். இத்தனை பொருளிழந்தும் அவரது பூமி அவருக்குக் கிடைப்பது சந்தேகமாயிருந்தது. அவருடைய தமையன் அதை வேணுகோபாலையரிடம் பெரியதோர் தொகைக்கு ஈடுவைத்துவிட்டு இறந்துபோயிருந்தார். ஆனால் இந்த ஆத்மதியாகம் அவரது லௌகிக விவகாரங்களனைத்தையும் கூடச் சிக்கறுத்துவிட்டது. வேணுகோபாலையர் வழக்கிலிருந்து நிலத்தைச் சிக்கின்றி அவர் மனைவியிடம் ஒப்புவித்து விட்டதன்றி பார்வதிக்கும் ஐந்து ஏகர் நிலம் எழுதிவைத்துவிட்டார். அது மாத்திர

மில்லே, அக்குழந்தையைத் தன் குமாரியைப் போலவே வளர்த்து வந்து நேற்று விவாகமும் செய்து வைத்துவிட்டார். இத்தனை நாள் கழிந்தும் அவரது நன்றியறிவு தன் குழந்தை காப்பாற்றப்பட்ட தினத்தன்று போலவே வாடாமல் பசுமையாக இருப்பதைக் கண்டு அவரை வாழ்த்தாத மனிதர் பாவம். நானும் வாழ்த்துகிறேன். நீயும் அவரது பெருந்தன்மையையும் செய்ந்நன்றியறிவையும் போற்றுவாய் என்பது நிச்சயம்.

உன் நண்பன்.

நமது சிற்பச் செல்வம்

கடலுக்குள் ஆவி ரதப் பாதை



இங்கிலாந்திற்கும் பிரெஞ்சு தேசத்திற்கும் நடுவே டோவர் ஜலசந்தி இருக்கிறது. இங்கிலாந்திற்குத் தெற்கேயிருக்கும் டோவரிலிருந்து பிரான்ஸுக்கு வடகரையிலிருக்கும் கலேக்கும் இடையில் கடல் உக மைல் அகலமுள்ளது. சென்ற நூறு ஆண்டுகளாக இச் சிறு அகலத்தைத் தண்டவாளங்களால் சேர்க்க யோசித்துக் கொண்டிருந்தனர். பலர் பல உபாயங்களால் டோவருக்கும் கலேக்கும் ஆவி ரதம் செல்லும் வழிகளைத் தீர்மானித்தனர். அவற்றுள் மிகச் சிறந்தது குழாய் வழிதான். இதுவே சரியான வழியென அனைவரும் ஒப்புக்கொண்டனர். சமுத்திரத்திற்குள் ரு0 மைல் உள்ள பிரம்மாண்டமான ஒரு சுரங்கம் செய்ய ஏற்பாடாயிருக்கிறது.

இப்பாதைவழியாக லண்டனிலிருந்து கலேக்குச் செல்ல கூ மணி நேரம் பிடிக்குமென மதிக்கின்றனர்.

இப்பாதையின் படத்தைக் காட்டியிருக்கிறோம், மற்றை நாடுகள் தொழிலிலும், அறிவிலும், முறைகளிலும் இவ்வாறு விருத்தியாகின்றன. எல்லாப்பொருள்களையும் தன்னுள்ளடக்கிய தொழில் முன்னேற்றத்திற்கு வேண்டிய செளகரியங்களையும் கொண்ட பாரதநாடே! நீ அபாரவற்ற முயற்சியில் விழித்துக்கொள்! உன் முன்னேற்றத்திற்கு உழைக்கக் கடவாய்!



பூல்வர்த் மாளிகை.

இது உலகிலுள்ள மனைகளிலெல்லாம் பெரியது. இதற்கு ருரு-மாடிகள் இருக்கின்றன. எகூ௲ அடி உயரம் உள்ளது. இதில் உ0-மின்சார ஏணிகள் இருக்கின்றன. இதில் ௨,000-கச்சேரிகள் வேலை செய்கின்றன. கரு000-மனிதர்கள் இதில் நாள்தோறும் வசிக்கலாம். ௬000-கதவுகளும் ௭௦௦0 ஜன்னல்களும் இதில் உள்ளன. கரு0-மைல் நீட்டத்துக்கு மின்சாரக் கம்பிகள் ௭0000-மின்சார விளக்குகளை எரிக்கின்றன. இக் கட்டிடம் அமெரிக்கா தேசத்தில் 'நியூயார்க்' என்ற இடத்தில் இருக்கின்றது. இதை 'பூல்வர்த்' என்னும் ஒரு கோமான்வரன் கட்டினான்.

புலவர் வறுமை

———[*]———

தன் வறுமையைப் பற்றிப் பேசும் ஓர் கவி, சரஸ்வதிக்கும் லக்ஷ்மிக்கும் மாமிமருகள் சம்பந்தமிருப்பதால், ஒருத்தி இருக்கிற இடத்தில் மற்றவள் இருக்கமாட்டாள் என்று விளையாட்டாகச் சொல்லுகிறான். நம் நாட்டில் கவிகள் பெரும்பான்மை வறுமையிலேயே உழன்று வந்திருக்கிறார்கள். ஏதோ சிலர்தாம் உத்கிருஷ்டமான காவியங்கள் எழுதியதாலோ, லௌகிக சாமர்த்தியத்தாலோ, அல்லது கேவலம் அதிர்ஷ்டவசத்தினாலேதானோ அரசர்களிடமும் செல்வர்களிடமும் பரிசு பெற்றுச் செல்வர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

நம் நாட்டில்தான் இவ்வாறு என்றால் இல்லை; ஐரோப்பாவிலும் சரஸ்வதியின் திருத் தொண்டரின் கதி பெரும்பான்மையும் இவ்விதமேதான். இவ் வியாசத்தில் வறுமையால் கஷ்டப்பட்ட சில மேனாட்டுக் கவிகள் வித்துவான்களைப்பற்றிப் பேசுவோம்.

கூலாந்திரன் என்னும் கிரேக்க ஆசிரியன் தான் வெகு காலம் பிரயாசைப்பட்டு தியோன் காஸ்ஸியனைப்பற்றி எழுதி வைத்திருந்த குறிப்புகளை ஒரு வேளைச் சாப்பாட்டுக்காக விற்க நேர்ந்தது. 'பதினெட்டு வயதில் புகழ் தேடப் படித்தேன், ஆனால் இருபத்தைந்து வயதில் சோறு தேடவேதான் எழுதிவருகிறேன்', என்று அவனே கூறுகிறான்.

தோன் குவிக்ஸோதன் என்ற லோகோத்தரமான ஹாஸ்ய கதை எழுதிய ஸெர்வாந்தன் என்ற இஸ்பானிய ஆசிரியனுக்கு எத்தனையோ நாட்கள் உண்ணச் சோறில்லாமற் போய்விடுமாம். போர்த்துக்கல் நாட்டுக்குப் பெருங் கீர்த்தி தேடிக் கொடுத்த தனிப் பெருங் கவியான கமோயன்ஸ் தன் ஆஸ்தியெல்லாம் இழந்து வைத்தியசாலையில் இறந்தான். உலாந்தாநாட்டு ஷேக்ஸ்பியர் என்று சொல்லப்பட்ட வோந்தெல் என்பவன் அனேக வீர ரஸ நாடகங்கள் எழுதியும் வறுமையிலேயே உழன்று தொண்ணூறு வயதில் பிரேதக் கிரியை செய்யக்கூடப் பணமில்லாமல் இறந்து போனான். அவன் பிரேதத்தை அவனைப் போலவே வறுமையில் வீழ்ந்திருந்த பதினான்கு கவிகள் தூக்கினார்கள்.

“எருசலத்தை விடுவித்த காதை” என்ற மகா காவியம் எழுதிய தாஸ்ஸோ ஒரு வார காலக்ஷேபத்தைக் கடத்துவதற்காக ஓர் நண்பனிடம் இரண்டு ரூபாய் கடன் வாங்கினான். அவன் தன் பூனையைப் பார்த்து, “இரவில் என் கவிகளை எழுத விளக்கில்லை; ஆதலால் உன் கண்ணொளியைச் சற்று எனக்குக் காட்டு” என்று வேடிக்கையாகவும் பரிதாபகரமாகவும் ஓர் கவி பாடினான்.

வோழலன் என்ற பிரஞ்சு ஆசிரியன் சாகும்போது அவனுடைய நூல்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தவிர வேறு பொருள் அவனிடம் இல்லை. தன் பிரேதத்தை ஆராய்ச்சி செய்வதற்காக வைத்தியர்களிடம் விற்று விலைப்பணத்தைத் தன் கடன்காரர்களுக்குக் கொடுக்க என்று எழுதி வைத்துவிட்டு இறந்தான் என்று சொல்லப்படுகிறது!

நீராவி யந்திரத்தையும் தந்தியையும் முதன் முதல் கண்டுபிடித்த வொர்ஸ்டர் பிரபு, நூறு வித புதிய யந்திரங்கள் கற்பிக்கும் வழியைக் காட்டிவைத்த “சிருஷ்டனைச் சதகம்” என்ற தன் நூலைப் பார்லிமெண்டுக்குக் கொடுத்துவிடத்

தயாராக இருப்பதாகவும் அதற்குப் பிரதிபிரயோஜனமாக அவர்கள் தான் செய்த ஆராய்ச்சிகளால் தனக்கு நேர்ந்த கடன்களை மாத்திரம் கொடுக்க வேண்டுமென்றும் ஓர் மனுச் செய்து கொண்டான். ஆனால் பார்லிமெண்டு லக்ஷியமே செய்யவில்லை.

ராஸீன், கோர்னேயி, புவாலோ என்பவர்கள் பிரான்ஸில் பதினான்காவது லூயி காலத்தில் வாழ்ந்த கவிச் சிங்கங்கள். இவர்களுள் கோர்னேயியே மகா கவி, உயர்ந்த வீர நாடகங்கள் எழுதியிருக்கிறான். ஒரு நாள் ராஸீன் லூயியைக் காணச் சென்றபோது இலக்கிய உலகத்தில் அன்றைக்கு என்ன விசேஷம் என்று கேட்டான். அதற்கு ராஸீன் ஒரு உத்தாணிக் கஞ்சிக்குக் கூட வழியற்றுப் போய் கோர்னேயி இறக்குந் தருவாயில் இருக்கிறனென்று சொன்னான். அரசன் பரம துக்கப்பட்டு அக் கவிக்குக் கொஞ்சம் பணம் அனுப்பினான்.

சரஸ்வதியின் உபாஸகர் இத்தனை கஷ்டங்கள் பட்டும் ஓர் முறை உபாஸிக்கத் துவக்கினவர் அவளை விடுகிறதில்லை. செல்வம் தான் அவர்களுக்குக் கிடைப்பது துர்லபமே யொழிய, அவர்களுக்கு ஆனந்தம், பரமானந்தம் எப்பொழுதும் கைலேயே யிருக்கிறது. ஸாரஸேனர் சரித்திரத்தைப் பதினைந்து இருபது வருஷகாலம் உழைத்து எழுதி வெளிப்படுத்திய ஸைமன் ஓக்லி என்பவன் கடனுக்காகச் சிறையில் வைக்கப்பட்டான். அச் சிறையினின்று அவன் எழுதிய முகவுரையில் பின் வருமாறு கூறுகிறான்: “இந்தச் சிறையில் ஆறு மாத காலத்தில் எனக்குக் கிடைத்திருக்கிற உண்மையான சுதந்திரமும், சுகமான வாழ்வும், நிர்விசாரமான சாந்தியும், இதுபோல மூன்று பங்கு கொண்ட வருஷங்களில் எனக்குக் கிடைத்ததில்லை........ அறிவை என்றைக்கும் நான் செல்வத்தைவிட மிகவும் உயர்ந்ததாகவே மதித்து வந்திருக்கிறேன்.”

ஜான்ஸன் கோல்ட்ஸ்மித், தாம்ஸன் முதலிய எத்தனையோ கவிகளும் வித்துவான்களும் இதே மாதிரி நல்குரவினால் பீடிக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கதைகளையும் “பாலபாரதி”யின் நேயர்களுக்கு ஓர் நாள் சொல்லுவோம்.

தயானந்த சரஸ்வதியும், ஆரிய சமாஜமும்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுவது)

உலகம் கடவுளின் தோட்டம். அதில் நல்ல செடிகளும் உள்ளன. அச் செடிகளின் உணவைக் கொள்ளை கொள்ளும் களைகளும், புல்லுருவிகளும் மலிந்துள்ளன. அக்களைகளைக் கொய்து நல்ல செடிகளைத் தழைப்பிக்க ஆண்டவனாம் தோட்டக்காரன் அவ்வப்போது அறமென்னும் கோடரி யேந்தி உலகிற்கு வருகிறான். எத்தனை தடவை இவ்வுலகம், ஆண்டவனுக்கு இவ்வுலகிற் பிறக்கும்படியான வருத்தத்தைத் தந்திருக்கிறது! புத்தராயும், கிறிஸ்துவாயும், முஹம்மதுவாயும், சைதன்னியராயும், சங்கரராயும், இன்னும் பல அவதாரங்களாயும், கடவுள் உலகிற்கு வந்து அறத்தையே நாட்டிச் சென்றிருக்கின்றார். ஆயினுமென்ன! உலகினின்று பொரு

மையும், பொய்யும், கோளும், பேராவும் நீங்கினவோ! உயிருள்ளவரை மஹான்களைக் கொடுமையுடன் வருத்தி அவர்கள் ஆவியானதும் அவர்களை யறிந்து சற்று விழித்துக்கொள்ளும் உலகம் இன்னும் தன் இருள் நிலையிலேயே தூங்கிக்கொண்டிருக்கிறது. அதிலும் உலகிற்கு ஞானவொளியைத் தரும் நமது பாரத கண்டமோ தன் மார்பிடையே தேவர்கள் உலவவும் நின்றது, நிற்கிறது. பல அன்னியர்கள் புகுந்து தன் சுதர்மத்தைக் கொள்ளையடிக்கவும் நின்றது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னே, நம் நாடு இருந்த இருள் நிலையைப் போக்கி, தாமச குணங்களை நீக்கி ஆரிய தர்மத்தைப் பரப்பி தன் நாட்டுணர்ச்சியும் தன் அறவுணர்ச்சியும் விளங்கச் செய்தவர் தயானந்த சரஸ்வதியார். அவருக்கு இத் தேசத்தில் மிகுந்த வேலையிருந்தது. அப்போது பாரத நாட்டார் வேதவழியை விடுத்திருந்தனர். ஆங்கிலக் கல்வியே அவர்களுக்கு கதியாயிற்று. அதைக் கற்றவரும் தம் நாட்டறத்தை மறந்து ஆங்கிலராகவே முயற்சித்துக்கொண்டிருந்தனர். அதுவும் படியாதவரோ பொய் நம்பிக்கைகளிலும் இருளிலும் ஆழ்ந்திருந்தனர். அடிமையுணர்ச்சிகளும் போக விருப்பும் தேளின் விஷம் போல் நம் நாட்டினரின் நாளங்களில் ஏறிக் கொண்டிருந்தன. இந்தியாவின் யோகிகளைப் புகழ்ந்த அரிஸ்டாடிலனும், உலகமெங்குஞ் சுற்றிப் பார்த்தும் இந்தியாவிலேயே ஆத்மானந்த பரவசராய்த் தானே அவனை தேவரையும் கண்ட தைமாகியனுமே அப்பொழுது நம் நாட்டைப் பார்த்திருந்தால் தங்கள் சொற்களை மாற்றிக்கொண்டிருந்திருப்பார்கள். அவ்வளவு சீர்கேடான நிலைமையினின்று நம்மைத் தட்டியெழுப்ப தயானந்தர் அவதரித்தார். வேத வழியில் நாட்டை விழிப்பித்த இம் மகானின் சரித்திரக் கதையை இனி நுகர்வாம்.

மூலசங்கரர்

கூர்ஜரத்தில் மோர்வி என்ற ஒரு நகர் இருக்கிறது. அதில் புகழும், ஒழுக்கமும், கல்வியும், வல்ல ஒரு செல்வர் இருந்தார். அவர் பெயர் அம்பா சங்கரர். அவர் உண்மையான சிவபக்தர். வேதத்தை ஆராய்ந்து அதன்படியே வைதிகராக வாழ்ந்தவர். இவர் செய்த தவப்பயன் ௧௮௨௪-ம் ஆண்டில் ஒரு அருள் மைந்தனைப் பிறந்தது. மஹான்களின் குறியுள்ள இக் குழந்தைக்கு மூலசங்கரன் என்னும் திருப்பெயர் சூட்டினர். மூலசங்கரருக்கு ஐந்தாண்டில் ஆரிய பாஷை தொடங்கப்பட்டது. எட்டுவயதில் உபநயனம் நடந்தது. காயத்ரி, சந்தியாவந்தனம், புருஷ ஸூக்தம், ருத்திரம் முதலியவற்றைத் தந்தையே கற்றுக்கொடுத்தார். பிறகு யஜுர் வேதம் கற்றுக் கொடுக்கப்பட்டது. அம்பாசங்கரர் தன் தனயனைச் சிவவிரதங்களை விடாது அனுஷ்டிக்கச் செய்தார். பத்து வயது முதலே மூலசங்கரர் சிவபூஜை செய்து வந்தார். தன் மனதைச் சிவபிரானிடம் ஆழ்த்தியிருந்தார்.

வள்ளற்றலைவனை வான நாடனை, வெள்ளப் புனற்சடை வேந்தனை வேதமுதல்வனை உள்ளத்தினுள்ளே வைத்து மூலசங்கரர் நினைத்துவரும் நாளில் மஹா சிவன் ராத்திரி யொன்று வந்தது. அப்போது பதினான்கு வயதுள்ள மூலசங்கரரும் சிவன்ராத்திரி மஹா விரதத்தை முறைப்படி கைக்கொண்டார். இரவு முழுதும் தன் தந்தையாருடன்,

“வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினாற்
பொறுப்பவனே! யராப்பூண்பவனே! பொங்கு கங்கைச் சடை
செறுப்பவனே! நின்றிருவருளா லென் பிறவியைவே
றறுப்பவனே! யுடையா யடியே னுன் னடைக்கலமே!

என்று சிவபெருமானை மனதாலும் வாயாலும்

நினைத்தேத்தி விரதமிருந்தார். வேதமும் மந்திரமும் வழிபாடும் தோத்திரமும் மூலசங்கரரை விழித்திருக்கச் செய்தன. நடு இரவு வழிபாடுகளாயின. பக்கத்தில் நோன்பிருந்தவர் அரிதுயில் கொண்டனர். அம்பாசங்கரரும் துயின்றார். கோயில் பூசாரியும் துயிலின் வலைப்பட்டார். மூலசங்கரன் மட்டும் தூங்கினால் நோன்பு மாசுறுமென்று விழித்திருந்தான். ஆலயம் குரலடங்கியிருந்தது. நமது மூலசங்கரன் லிங்கத்திற்கருகே சென்று அதையே பார்த்து எண்ணி, பாடிக்கொண்டிருந்தான். லிங்கம் அன்று மிகச் சிறப்பாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் எதிரே நிவேதனங்கள் மூடி வைக்கப்பட்டிருந்தன. திடீரென்று ஒரு கூட்டம் எலிகள் வந்தன; நிவேதனங்களை உருட்டின; லிங்கத்தின் மேல் ஏறி, மாலை பழம் முதலியவற்றைக் கொறித்தன; ஆபாசங்கள் பல செய்தன. இவ்வினோதத்தைக் கண் கொட்டாமல் மூலசங்கரர் பார்த்துக்கொண்டிருந்தார். வியந்து திடுக்கிட்டு ஐயமுற்றார். “எல்லா முணர்ந்து எல்லாம் படைத்து எல்லாமளித்து எல்லாம் வல்ல இறைவன் நம்மெதிரிலிருக்கும் இக் கல்லா? எலிகளும் தன் மேல் ஆபாசஞ் செய்யும்படியா கடவுள் இக்கல் வடிவாயிருக்கிறார். இது கல்லே, கடவுளாகாது. எதிரே வைத்திருக்கும் நிவேதனத்தை எலிகளன்றோ ஏற்றுக்கொண்டன. இவ்வுணர்ச்சியற்ற கல்லையோ கடவுளெனத் தொழுகிறோம்” என்று அவர் தூய்மனம் வேறுவிதமாகத் திரும்பியது. தந்தையை எழுப்பித் தன் ஐயத்தைச் சொல்லி வாது செய்தார்.

உறுதியான சைவராகிய அம்பாசங்கர் தனயனின் அபசார வார்த்தைகளுக்காகக் கோபித்தார், போதித்தார், ஒன்றும் பயன்படாது போயிற்று. தான் கண்ட காட்சி மூலசங்கரனுடைய மனதை உறுத்திக்கொண்டிருந்தது. சந்தேகமென்னும் எலி அவன் சமாதானத்தைக் கொள்ளை கொண்டது. கற்கடவுளில் அவன் நம்பிக்கை அற்றது.

இப்படியிருக்கையில் மற்றொரு நிகழ்ச்சியால் மூலசங்கரருக்கு வாழ்வின் நிலையற்ற தன்மை தெரிந்தது. அவருடைய கூடப் பிறந்தாள் திடீரென்று நோய்கண்டிறந்தாள். இதனால் உடலின் பொய்புறவு புலப்பட்டுக் கொண்டிருக்கையிலேயே தன்னை மிகவும் நேசித்த தன் மாமனின் சாவு அதைப் பலப்படுத்தியது. நேற்றிருந்தவன் இன்றில்லை யென்னும் பெருமையுள்ள இப்புவியின் நாடகத்தை எண்ணியெண்ணி கொத மனைப்போல் கவலையுற்றார்.

மன்னனென் றேற்று மண்ணனெனின்றே
பெண்ணனென் றேற்றுப் பிணமனெனின்றே
மின்னனை கூத்து மெய்யாமோ? இல்லை;
என்னனை லென்னா இம்மாயத் தாந்தேசன்

என்றெண்ணி மாறி மாறிக் காட்டி, மறையும் இப்பொய்யுலகினின்று தப்புவதெப்படி யெனத் தனித்து எண்ணி வந்தார். அவருக்கு இப்போது வயது இருபது. அம்பாசங்கரர் இந்தமைந்தனை மணமென்னும் நுகத்தடியில் பிணைத்துக் கட்டப் பெரிதும் முயன்றார். தன் சுதந்திரமான வாழ்வைக் கூட்டிலடைக்கப்போகும் தந்தையை எண்ணி நொந்து இதனின்று தப்ப ஒரு வழி தேடினார். ஆசையலையும், மாயா நீரும், காமக்ரோதங்களான முதலைகளும் நிறைந்த குடும்ப வாழ்வு அவருக்கெதிரே நிரயவடிவாக எழுந்து நின்றது. தன் கல்வியறிவைப் பெருக்கியாயினும் இவ்வுலகிலுள்ள துயருக்கு மருந்து அறியலாமென்றெண்ணித் தன்னைகாசியிலிருக்கும் ஆரியக்கல்லூரிக்கு அனுப்பும்படி தந்தையைக் கேட்டார். தன் மகனுடைய மனப்போக்கை யஞ்சிய அம்பாசங்கரர் அவனை எங்கும் அனுப்ப சம்மதிக்கவில்லை. மிகவும் மன்றாடியதன் மேல் தன் சொந்தக்காரர்களிருக்கும் ஒரு பக்கத்து

கிராம பாடசாலைக்கு அனுப்பினார். அங்கும் மூலசங்கரனுக்கு உலகிலுள்ள சாவும், பிணியும் தீதும், மாயையும், பொய்யும், மனிதன் சுதந்திரம் அடைந்து களிப்புறுவதற்கேற்ற மருந்துமே நினைப்பு. இதைக்கண்ட உபாத்தியாயர், இங்கு இருப்பின் எங்கேயாகிலும் தப்பிவிடுவானென்று அஞ்சி, மறுபடி அம்பாசங்கரரிடமே பையனை அனுப்பிவிட்டார். அம்பாசங்கரர் பையனுடைய விவாகத்திற்குத் தயார் செய்தார். பேரின்பம் அடையத் தவித்துக் கொண்டிருக்கும் மூலசங்கரனுடைய மனம் வீட்டில் நிலைகொள்ளவில்லை. சம்சாரமான பாழுங்கிணற்றில் சுதந்திரக்கடலான அவர் மனம் எவ்வாறு அடங்கும்? தன் எதிரே பரிசுத்தமான ஞானஊற்றைக் காண்பவன் குடும்பமான வனாந்திரத்தில் தாகத்துடன் எத்தனைநாள் தவிப்பான்? தன் சுபேச்சைக்குப் பொன் விலங்குகளைத் தயார் செய்யும் தன் தந்தையைத் தப்பிப் பிழைக்கத் தீவிரமாக எண்ணினான்.

வீட்டைத் துறத்தல்

ஒரு நள்ளிரவில் தன் சுற்றத்தாரைக் கடைசி முறை கண்ணோக்கி விட்டு, வீட்டினின்று மூலசங்கரன் தப்பினான். தீ வீட்டினின்று வெளிவருபவன்போல் தன் வீட்டைத்துறந்தோடிய நமது வீரத்துறவி கால்நடையாக ஸ்யாலா என்ற ஒரு கிராமத்திற்கு விரைந்தார். அங்கு ஒரு பிரம்மச்சாரி அவருக்கு ஞானோபதேசம் செய்து சுத்தசைதன்யர் என்றபெயரைக் கொடுத்தார். அன்று முதல் சில வைராகிகளின் கூட்டத்தோடு ஊர்தோறும் திரியத்தொடங்கினார். சித்திப்பூரில் தன் தந்தைக்கு நண்பனான ஒரு வைராகி இவரைத்தெரிந்துகொண்டு இவர் இங்கிருப்பதாக அம்பாசங்கரருக்குக் கடிதம் எழுதினான். மூலசங்கரரையும் எங்கும் விடாமல் வைத்திருந்து தந்தையிடம் ஒப்புவிக்கத் தயாராயிருந்தான்.

அம்பாசங்கரர் தகவல் கிடைத்ததும் தன் சேவகருடன் வந்துசேர்ந்தார், காஷாயங்கட்டியிருக்கும் தன் செல்வ மைந்தனைச் சீறி வெகுண்டார். பசியுள்ள புலி பசுவைக்கிழிப்பது போல் காஷாயத்தைக் கிழித்தெறிந்தார். கையிலிருக்கும் கமண்டலத்தை உடைத்தார். கோபத்தால் குதித்தார், வைதார், காய்ந்தார், கூச்சல் போட்டார். கோபத்தால் ஆடும் தன் தந்தையைப் பார்த்துஐயன் நடுங்கிப்பணிந்தான். மூலசங்கரருக்கு வெள்ளை ஆடைகளைக்கொடுத்துத் தன் ஜாகைக்கு எடுத்துப்போய் சிறைசெய்து வைத்திருந்தார். காஷாயத்திற்கு பதிலாய் வெள்ளைபுடுத்தினால் அவருடைய துறந்த நெஞ்சிலும் பாசம் புகுமென்று எண்ணினார் போலும்! கட்டுகளுக்கடங்காத ஆத்மானந்த சுபேச்சையில் ஆவல் கொண்டவர்கள், காமக்கேர்தருணையான சம்சாரத்தில் எத்தனை நிமிஷம் இருப்பர். புத்தரை மாயையால் உலகெனும் கட்டுத்தறியில் பிணைத்த சுத்தோதனனுடைய முயற்சிகள் எவ்வாறாயினவோ அவ்வாறே அம்பாசங்கரரின் கோபவிலங்குகளும் அழுக்கப்பட்டன. தன் சுயேச்சையைத் தடுத்துநிற்கும் சேவகரை நித்திராதேவி மயக்கிவிடவே, இப்பேதை மாந்தரை நள்ளிரவில் நீத்தார். தன் தகப்பனின் கோபமுகத்தில் தென்படாது, அஞ்சி ஒரு கோயில்கோபுரத்தின் மேலே ஏறிப்பதுங்கிக் கொண்டார். தகப்பனார் வீணாகத் தேடித்தேடி முடியாமல், களைத்துத் தன் வீட்டிற்குச் சென்றார். மூலசங்கருடைய ஆனந்தத்திற்கு அளவில்லை. சம்சாரப்புலி தன்னைமோப்பமறிந்து பிடிக்க இயலாது சென்றது. இனி நாம் உயிர்தப்பினோம் என்று மகிழ்ந்து, பரோடாவிற்குச்சென்றார். அங்கு வேதாந்த ஞானமடைந்தார்.

நர்மதை நதிக்கரையில் நல்ல யோகிகள் இருப்பதாகக் கேள்விபுற்று மூலசங்கரர் அங்கு விரைந்தார். சிதானந்தசுவாமியை அங்கு கண்டு

தன்னை சந்நியாசியாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். மூலசங்கரர் இன்னும் முதிர்ச்சியடையவில்லை யெனச் சொல்லி சுவாமிகள் சந்நியாசந் தர மறுத்தார். பிறகு பூர்ணானந்த சரஸ்வதி என்னும் சந்யாசி இவருடைய பரிபக்குவத்தைப்பார்த்து இவருக்கு சந்யாசங் கொடுத்தார். இவருடைய திருநாமமும் அன்று முதல் தயானந்த சரஸ்வதியானது. அவருக்கு இப்போது உச வயது. இதன் பிறகு பரிவ்ராஜகராய் யோகமும் விரதமும் கடைப்பிடித்து நமது தயானந்தர் துவாரகை, அபு, ஹரித்துவாரம் பத்ரிநாராயணம் முதலிய இடங்களில் திரிந்து யோகானந்தர் ஜ்வாலானந்தர் சிவானந்தகிரி முதலிய பெரியோரிடம் யோகசாதனம் செய்தார். இச்சமயங்களில் காட்டிலும் பாலைவனத்திலும் அடிக்கடி பசியுடன் இவர் தவிக்க வேண்டியதாயிற்று. காட்டு மிருகங்களினின்றும் தன் சாந்தத்தாலும் தைரியத்தாலும் தப்பினார். தன் உண்டிக்காக இராக்காலங்களில் இல்வாழ்வோரைக் கேட்பதில்லை. நர்மதை நதிக்கரையில் மூன்று வருஷம் போக்கினார்.

இப்படியாகப் பதினோராண்டு அலைந்த பின் மதுரையில் சுவாமி விரதஜானந்தர் என்ற ஒரு மஹானிடம் வந்து சேர்ந்தார். புறக்கண் குருடான இவ்விரஜானந்தர் இளமையில் பெற்றோரை இழந்து தன் காப்பாயிருந்த சகோதரரின் இடும்பையைத் தாங்காது சிறு வயதிலேயே வீட்டை நீத்துத்தன் முயற்சியால் ஆரியத்தில் ஒப்புயர்வற்றவராகத் தேர்ந்தார். இவரை ஜனங்கள் வணங்கினார்கள். மதுரையில் சில சீடருக்கு வேதங்களை ஓதுவித்துத் தானும் யோக முயற்சிகளில் காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தார். தன் மாணாக்கரிடம் கண்டிப்பாயும் கடுகடுப்பாயுமிருப்பார். ஆனால் அக்கால பண்டிதர்களைவிடத் தாராள நோக்கமுடையவர். தயானந்தர் இதுவரையில் கற்ற வேதபாஷ்யங்களையெல்லாம் யமுனை நதியில் எறிந்துவிடச் சொல்லிவிட்டு ஒரு டீகா பாஷ்யம் புதிதாக வாங்கி அதைக் கற்றுக்கொடுத்தார். தயானந்தர் விரஜானந்தரிடம், மூவாண்டுகள் வணக்கத்துடனும் கருத்துடனும் கல்வி கற்றார். மிகவும் பொறுமையுடன் குருசேவை செய்தார். விரஜானந்தர் முரட்டுத்தனமாக தயானந்தரை அடிப்பதும் உண்டு. அப்போதெல்லாம் 'சுவாமீ என்னை அடிப்பதனால் தங்கள் கை நோகுமென்று அஞ்சுகிறேன்' என்று சொல்வார். தான் படித்து முடிந்ததும் குருவுக்கு தக்ஷிணையாக கொஞ்சம் கிராம்புகளை சமர்ப்பித்து 'ஸ்வாமீ உடல் பொருள் ஆவி யனைத்தும் தங்களுடையதே' என்றார், விரஜானந்தர் 'பொறுமை மிகுந்த அருமைச் சீட! உனது சக்தியை நன்கு செலவிடு.

இருளில் உலகு இன்ன லுற்றது
பொருளில் லதனைப் பொருளென்றுழலும்
பொய் யறி வகற்றிப் பூவுல கெல்லாம்
மெய் யறி வென்னும் விளக்கினை யேத்திக்
கல்லை விடுத்தோர் கடவுளைத் தொழவும்
எல்லையில் வேதத்தின் வழி நின்றே
ஆரிய தருமம் பாரினி லோங்கச்
சீரிய முயற்சிகள் செய்குவை தக்கோய்!
பெரியார் ஆசிகள் பெரிதும் பெறுவாய்!
ஆரிய மேலோரில் ஆரியவ" என்றான்.

தன் குருவின் கட்டளையைப் பெற்று வணங்கி தன் அருட்பணியில் உறுதிபூண்டு சுத்த பிரமசரியத்தால் தான் அடைந்த சக்தியை எல்லாம் உலகின் தொண்டிற்கே அர்ப்பணித்துப் புறப்பட்டார். உண்மையான ஞானத்தைத் தேடுவதில் இளைத்துப் போன தனது மனம் விரஜானந்தரின் உபதேசங்களால் திடமுற்றது. அவரிடத்தில் புதிய எண்ணங்கள் தோன்றின. தொண்டிற் களிப்பை யடையும் தன்மை புதித்தது. விரஜானந்தரிடமிருந்து தயானந்தர் ஒரு

பெரிய யோகியாய், அல்லது பண்டிதனாய்த்தனியே வாழ்ந்து குடத்துள்விளக்கு போலிருந்திருப்பார். இவருடைய திறனுக்கும், கல்விக்கும் தெய்வீகத் தன்மைக்கும் சரியான வேலை கொடுத்து, உலகிற்கு இம் மஹா புருஷனைக் காட்டியது விரஜாநந்தரே! உலகிற் குதவவே கடவுள் நமக்கு ஆற்றலை உதவினார் என்று அறிந்து, ஜனங்களின் இருளை விலக்கத் தன் ஞானத்தைப் பயன்படுத்தத் துணிவுடனும் தயையுடனும் எழுந்த தயானந்தர் வாழ்க! அவரை எழுப்பிய விரஜானந்தர்வாழ்க!

இப்போது ௩௨-வயதுள்ள தயானந்தர் ஆக்ரா குவாலியர் ஜெய்பூர் முதலிய விடங்களில் தன் கொள்கைகளைப் போதித்து கும்பத் திருவிழா கொண்டாடும் ஹரித்துவாரத்திற்கு வந்து சேர்ந்தார். இச்சமயம் கோடிக் கணக்கான இந்துக்கள் கங்கைநதிக்கரையில் கூடுவார்கள். அங்கே வேதத்தில் சொல்லாத பல மூடத்தனமான கிரியைகளை ஜனங்கள் செய்வதையும் விக்கிரக ஆராதனையையும் கண்டு மனங் கொதித்து அவற்றைக் கண்டித்து வேத வழியைக் காட்டினார். பலருடைய சினமும் பகையும் வரினும் அவற்றையெல்லாம் பாராட்டாது தன் கருமத்தையே துணிவுடன் செய்தார். கும்பத்திருவிழா முடிந்ததும் தயானந்தர் தன் கொள்கைகளை உபதேசித்துக்கொண்டே காசிக்கு வந்தார்.

காசியில் ஒருபெரியவாதம் நடந்தது. விக்கிரக ஆராதனை வேத சம்மதமில்லை யென்பதே விஷயம். காசி அரசன் சுமார் முப்பத்தைந்து பண்டிதர்களுடன் தயானந்தரை எதிர்த்தான். அவர்களையெல்லாம் வாதில் தயானந்தர் வென்றார். பண்டிதர்கள் தயானந்தரை அவமானப் படுத்தினார்கள். அவர் பேச வாயெடுக்கையில் பெருங் கூச்சலிட்டனர். தயானந்தரை ஜாதியை விட்டு விலக்கினர். அஞ்சாத உறுதியுடைய தயானந்தர் இவற்றைப் பொருட்படுத்தாது தன் கொள்கைகளைச் சொல்லிக் கொண்டே கல்கத்தா சென்றார். அங்கே பிரம்ம சமாஜத்தார் இருந்தனர். அவர்கள் ஆங்கிலக் கல்வியில் தேர்ந்தவர்கள். அவர்களுக்கு வேதவழி பிடிப்பதில்லை. வைதிக ஹிந்துக்களுக்கு சீர்திருத்த வழி பிடிக்கவில்லை. இப்படி இரு வழிகளிலும் எதிர்க்கப்பட்ட தயானந்தர் அல்லாஹபாத் சென்று பிறகு பம்பாய் வந்து சேர்ந்தார். இங்கே அவர் சிறிது ஆதரவு பெற்றார். பூனாவில் பல பிரசங்கங்கள் புரிந்தார். வைதிகரின் கோபத்தீ இவரைத் தாக்காது விடவில்லை. எவ்வளவு தாக்கியும் மலைபோல் உறுதியாக நின்றார். ஒருமுறை ஒரு அந்தணன் தயானந்தருக்கு வெற்றிலையில் விஷத்தைக் கலந்து கொடுத்தான். தயானந்தர் இரகசியமாக அதைக் கக்கிவிட்டார். அவ்வூர் தாசில்தார் இதை யறிந்து அப் பார்ப்பானைச் சிறையிட்டார். தயானந்தர் "நான் என் நாட்டாரை சிறையிலடைக்க வரவில்லை. அதனின்று அவரை விடுவிக்கவே வந்தேன்" என்றார்.

௧௮௭௭-ம் ஆண்டு தயானந்தர் டில்லிதர்பாரைப் பார்க்கச்சென்றார். அங்கே பல ஜாதி அறிஞர்களைக் கூட்டி ஜாதி வேற்றுமைகளையெல்லாம் விடுத்து இந்து முகம்மதியர்களெல்லாம் ஒற்றுமைப்பட்டு வேதவழியில் நடந்து தேசத்திற்குழைக்க எழும்படி தூண்டினார். இதன் பிறகு பஞ்சாப் சென்றார்.

குரு நானக்கை வணங்கும் பாஞ்சாலம் தயானந்தரை வேண்டுமட்டும் ஆதரித்தது. சீக்கியர் முன்னேயே உருக் கடவுளில் நம்பிக்கையற்றவர்கள். கடவுள் ஒருவரென நம்பியவர். ஜாதி வித்தியாசத்தை ஒழித்தவர்கள். தயானந்த சரஸ்வதியின் வேதவழியைத் தயாராகக் கைப்பற்றினர். பாஞ்சாலத்தில் ஆரிய ஸமாஜங்கள் உண்டாயின. இம் மாதிரியே மத்திய மாகாணத்தில் முதன்மையான இடங்களிலெல்லாம் ஆரிய சமாஜம் வேரூன்றியது.

தயானந்தர் உதயபுரி அரசனுக்கு ஆறு வகையான தத்துவ சாஸ்திரமும் மனுநூலும் கற்பித்து ஆறு மாதம் அவன் அரண்மனையிலிருந்தார். ஹிந்திக்கு ஆரிய எழுத்துக்களை முதல் முதலில் உபயோகப் படுத்தும்படி அவரே செய்தார். ஷாஹபூரில் சில நாட்கள் தங்கி அன்பர்களின் வேண்டுகோளின்மேல் ஜோதிபுரிக்குச்சென்றார். அங்கே அரசனும் அவனை அண்டிய பிரபுக்களும் தீயவாழ்வில் மூழ்கி யிருந்ததை தயானந்தர் தீர்த்து அவர்களைத் தன் சமாஜத்தில் சேர்த்துத் தூயராக்கினார். பிரதாப்சிங் என்ற ராணுவத் தலைவன் தன் குடும்பத்தோடு தயானந்தரின் அடி பணிந்தான். ஜோதிபுரி மஹாராஜனான ஜஸ்வந்த சிங்கன் பொல்லாதன செய்து வந்தான். ஒரு பெண் வலையுட் சிக்குண்டான்; ஆனால் தயானந்தரைப் பணிந்து அவர் உபதேசங்களால் வாழ்க்கை சுத்த முறப் பெற்றான். இதில் பொறாமையுற்ற அவ் விலைப்பெண் தயானந்தரின் உணவில் விஷத்தைக் கலந்து கொடுத்துவிட்டாள். நமது சீலரின் உடல் நோயுற்று நாளுக்குநாள் ஒடுங்கியது. என்ன வைத்தியம் செய்தும் தீரவில்லை. அபுபர்வதம் சென்று விட்டு ஆஜ்மீரை யடைந்தார். ௧௮௮௩-ம் வருஷம் அக்டோபர்மீ ௩௰உ தீபாவளி அன்றே நமது தயானந்தர் இந்த பூதவுடலை நீத்துச் சோதி மயமாயினார். இந்தியரின் கண்ணில் கண்ணீர் பெருகியது. ஆங்கிலரும் அமெரிக்கரும் அனுதாபம் காட்டினர்.

தயானந்தரின் வாழ்க்கையும் அவர் நம் நாட்டிற்குச் செய்துள்ள அரும்பெருந் தொண்டையும் எண்ணுங்கால் அவர் புத்தரைப்போன்று உலகில் அறத்தை நாட்டவந்த ஒரு தேவன் என்பதை உறுதிப்படுத்தலாம். மூடக்கொள்கைகளும், ஆங்கிலப்படிப்பின் தீங்குகளும், ஆரிய சமூகத்தின் மெலிவும் குறைகளும், வேதத்தை நம்மவர் மறந்ததையும் கண்டு, ஒரு அவதார புருஷன் வேண்டியிருந்தது. அத்தகையவரே தயானந்தர். தற்காலத்தில் நாம் செய்யும் சமூக, தேசியக் கிளர்ச்சிகளுக்கு மூலமாயிருந்தவர் தயானந்தர். இந்தியாவின் நவ யுகத்திற்கு இவரே சுக்கிரோதயம் போன்றவர். முதலில் நம் நாட்டின் ஒற்றுமைக்குத் தடையாயிருக்கும் ஜாதிவேற்றுமைகளை நீக்கினார். வேதங்களை எல்லோருக்கும் பொதுவாக்கினார். விக்கிரக ஆராதனையைக் கண்டித்தார். ஆரியத்தில் இணையற்ற தேர்ச்சியுள்ள தயானந்தர் பல பாடசாலைகள் ஏற்படுத்தினார். அவைகளுக்கு வேண்டிய வேத பாட புஸ்தகங்களைத் தாமே எழுதினார். வேதாங்கப்பிரகாசிகை யெனும் இலக்கண நூலும் சத்யார்த்தப் பிரகாசிகை என்னும் தர்ம நூலும் இன்னும் பற்பல அரிய நூல்களையும் எழுதிக் குவித்தார். ஹிந்தி பாஷைக்கு தேவநாகரி எழுத்துக்களை அவரே முதலில் அமைத்தது. தீண்டாமை, பாலியவிவாகம் முதலியவற்றைச் சமூகத்தினின்று விரட்டினார். ஆண்களுக்கு இருபத்தைந்திலும்பெண்களுக்குப் பதினாறுவய்திலுமே விவாகம் செய்யவேண்டுமெனக் காட்டினார். பெண்களுக்கு உரிய சுதந்திரத்தை நிலைநாட்டினார். ஆரிய மதத்தினின்று பிற மதம் புக்கவரை சுத்திசெய்து மறுபடி ஆரிய மதத்தில் சேர்த்துக் கொண்டார். எல்லோருக்கும் பிரமசரியத்தை வற்புறுத்தி ஆரிய சமூகத்தின் சக்தியைப் பெருக்கினார். 'இந்து' என்ற வார்த்தை வேதங்களில் இல்லை. அது பிறநாட்டார் நம்மை அழைத்த பேர். ஆதலால் தன் சமாஜத்திற்கு ஆரிய சமாஜம் என்று பெயரிட்டார்.

ஆரிய சமாஜம் இந்து மதத்திற்கு அரிய தொண்டு செய்து வருகிறது. அது ௧௮௭௫-ம் ஆண்டு பம்பாயில் முதலில் ஏற்பட்டது. பாஞ்

சாலத்திலும் ஐக்கிய மகாணத்திலும் இராஜபுத னத்திலும் தற்போது நம் ஆரிய சமூகத்திற்கு கல்வி, சீர்திருத்தம், தொழில் முதலிய துறை களில் அரிய தொண்டு செய்துவரும் ஆரிய சமா ஜம் பல ஏழைகள் வாழ்த்த இலகுகிறது. மரப் பிள்ளை கலகத்திலும் இன்னும் பல சந்தர்ப்பங் களிலும் ஆரிய சமாஜத்தின் அரிய வேலைகளை நாம் அறிந்திருக்கிறோம்.

நமது ஆரிய தர்மத்தை நிலைநிறுத்த வந்த பெரியோனான தயானந்தரின் அருளால் உதித்த ஆரிய சமாஜம் தன் அருட் பணியில் நாளும் ஓங்கி நம் நாட்டில் ஒற்றுமையும், சுதந்திரமும் நிலவ பராசக்தி அருள் புரிவாளாக!

ஆலோசன அவலோகனம்

சென்ற ஆண்டும் புதிய ஆண்டும்

ககூஉஅம் ஆண்டு பல அனுபவ விளக்கத்துடன் முடிந்தது. இவ்வாண்டு அடுத்தடுத்துப் பல துன்பங் களை உலகில் எழுப்பியது. கற்றூளைக்கிடையே பூர் தேனுமிருப்பதுபோல் சில நற்செயல்களும் சென்ற ஆண்டுடன் கலந்திருக்கின்றன. மஹாத்மாவின் குடல் நோய் நமது குடலைப் பதறச் செய்தது. அவருக்கு சாஸூன் வைத்தியசாலையில் மாதாக்ஸ் துரை செய்த சிகிச்சையை நன்றியுடன் மனதில் எண்ணுகிறோம். அப்ப ரின் சூலையைத்தீர்த்த அரனே நமது பெருமானின் குடற் பிணியையும் களைந்தான். மஹாத்மா மறுபடி நம் மைச் சுதந்திரத்துறைக்கு நடத்தவந்துவிட்டார். ஆனால் அவர் சிறை புகுமுன்னர் கட்டிய ஒற்றுமையாமைக் கோட்டை இடிந்து கொண்டிருந்தது. சட்டசபையிற் புகு வதைப்பற்றிப் பெரிய வாதமேற்பட்டு நாடு பிளவுற்றது. சுயராஜ்ய கட்சி சட்ட சபையிற் புகுந்து சர்க்காரை திகைக்க வைத்தது. பல தீய சட்டங்களைக் கண்டித் தது. லீ யாதாஸ்தைத் தள்ளும்படி செய்து நாட் டிற்கு லாபத்தைத் தந்தது. சட்டசபை, பள்ளிக்கூடம், உத்தியோக பஹிஷ்காரங்களின் ஸ்வரம் அவரோகணத் திற்கு வந்துவிட்டது. நாட்டின் நிலைமை மஹாத் மாவை மலைக்கச் செய்தது. இந்து முஸ்லீம் ஒற்றுமை கூட இடிந்து விழுந்தது.

வைக்கத்தில் தீண்டாமை யொழிய சத்தியாக்கிரகப் போர் தொடங்கப்பட்டது. கோகத் சம்பவம் மஹாத் மாவை இருபத்தோருநாள் உண்ணாவிரதத்தில் இருக்கச் செய்தது. இருபத்தோருநாள் நமது மஹாத்மா செய்த தவப்பயனால் நாட்டில் ஒற்றுமை நிலவத் தொடங்கி யிருக்கிறது. மிதவாதிகள் தேசிய வாதிகள் தீவிர ஒற்றுமையாதார் சுயராஜ்யக்கட்சியினர் முதலிய அனை வரையும் காந்தியானவர் பம்பாயில் சர்வ கட்சித் தலைவர் மஹாநாட்டில் ஒன்று சேர்த்தார். முன்னே கொள்கை வேறுபாட்டால் முகதர்ஸனத்தைக்கூட வெறுப்போர் இப்போது தத்தம் கொள்கைகளை தாராளமாக வெளி யிட்டு நின்றனர். வங்காள அடக்குமுறைச் சட்டத்தை அனைவரும் கண்டித்தனர். சுயராஜ்ய திட்டத்தைத் தயாரிக்க ஒரு சபையார் ஏற்பட்டிருக்கின்றனர். காந் திக்கும் தாஸருக்கும் நடந்த உடன்படிக்கையால் நமது ஒற்றுமை பலப்பட்டது. பெசண்டம்மையார் காங் கிரஸில் சேர்ந்து நூற்கவும் செய்கிறார். அகில இந்திய மகாநாடு மஹாத்மாவின் கீழ்கூடும் பாக்கியத்தைப் பெற்றது. அஹிம்ஸை இராட்டினம் கதர் இந்துமுஸ் லீம் ஒற்றுமை, தீண்டாமை விலக்குதல் மதுவிலக்கு முதலிய வற்றைத் தன் இன்னிய சொற்களால் சாந்த மாகவற்புறுத்தி எல்லாரையும் ஒன்றுசேர்த்தார். கதரை அபிவிர்த்தி செய்ய எங்கும் பெரு முயற்சி நடக்கின்றது. புதிய ஆண்டு ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் தரு மென நம்புகிறோம்.

வெளிநாடுகளிலும் பல துயர்கள் தோன்றின. கெனியாவில் நம்மவர் இழிவாக நடத்தப்பட்டனர். துருக்கி குடியரசானதும் கலீபாவின் ஸ்தானம் காலி செய்யப்பட்டது. வஹாபிகள் முன்னேற்றமடைந்தனர். பூகம்பத்தால் அலைவுற்ற ஜப்பான், கொரியாவின் சுயேச் சையை இன்னும் மறுத்து நிற்கிறது. உருசிய நாட்டு மஹானான லெனின் தன் நாட்டின் பலகோடி ஏழை களின் கண்ணீர் பெருக மின்னுடலை நீத்து மேலுலகிற் கேகினார். எகிப்தில் லீஸ்டாக்கைச் சுட்டு இழிவான நிபந் தனைக்கு நாடு உட்பட்டது. ஜகலுல்பாஷா தன் ஸ்தா னத்தை நீத்தார். எகிப்தில் புகைச்சல் மிகுந்து வரு கிறது. சீனாவில் உள்நாட்டுக் கலகம் தோன்றியிருக் கிறது. இந்தியாவில் வங்காள அடக்குமுறைச் சட்டம், சுதந்திர உணர்ச்சியை நெருக்கிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டு அன்பரான மாண்டேகு இறந்தனர்.

இயற்கை மாதின்கோபத்தால்உலகில் பலவிடங்களில் சேதமுண்டாயிற்று. ஜப்பான் எரிமலை விபத்தும், தென் னிந்தியாவில் வெள்ளப் பெருக்கினால் உண்டான கேடும் வட இந்தியாவில் சிந்துநதிப் பெருக்கிலுண்டான நஷ் டமும் கணக்கிலது. இப்படிப்பல தீய அனுபவங்களைக் கொடுத்த ககூஉஅ-ம் ஆண்டு கழிந்தது. ககூஉரு-வது ஆண்டு மங்களமாக, நம் நாட்டிற்குச் சாதகமாக இருக் குமென நம்புகிறோம். நம் நாட்டுக் கல்வியும், தொழி லும், செல்வமும் ஓங்கி வறுமையும் அடிமையும் நீங்கி புதிய ஆங்கில ஆண்டில் நமக்குப் புதிய உணர்ச்சி தருமாறு பராசக்தியை இறைஞ்சுவோம்.

ருச-வது பாரதசபை (காங்கிரஸ்)

கஅஅரு-வது ஆண்டு தொடங்கிய நமது பாரதசபை தன் முயற்சிகளின் பலனைப் பெற்றது. நாட்டன்பரின், சுதந்திரதாகிகளின் முறைகள் எல்லாம்வல்ல இறை வனுக்கு எட்டி அவனுடைய தூதனாக நமது கலியைத் தீர்த்து உலகின் போரை யொழிக்கவந்த மஹாத்மா காந்தியே இவ்வாண்டு பாரத சபையின் சிரந்தாங்கின ரெனின் இனிவரும் ஆண்டுகள் நம்மைச் சுதந்திரத்தின் பாதல் விரைவில் கொண்டுசெல்லு மென்பதற்கு ஐய முண்டோ! பதின்மூன்றங்குல பீரங்கி முன், உடல் மெலிந்த ஏழைஇந்தியர் பயந்து, தன் அழிவற்ற ஆன் மாவை மறந்து நிற்குந் தருவாயில், எம்பெருமான் சத்தி யாக்கிரக சக்தியைக் கோலாகக்கொண்டு, வீரவானந்த வெள்ளத்துடு, நம்மையெல்லாம் ஒற்றுமைப் படுத்தித் தள்ளும்படி யேவி, சுதந்திரத்துறை சேர்க்க முன்வந் துள்ளார். மகாத்மா வாழி! சத்தியாக்கிரகம் வாழி! பொறுமையும் உண்மையுமே பொன்றாத வெற்றிதரும் என்பதற் கிலக்கா யிருக்கும் போதகன் வாழ்க!

இவ்வாண்டு பாரதசபை கூடிய பந்தல் முதல், தலை வர்களின் தீர்மானங்கள், முடிவுரை வரை ஒரு புத்து ணர்ச்சி நிறைந்து நிலவியது. பாரத தேவியின் ஆலயமா கவே கட்டப்பட்ட அப் பந்தலிலும் அதன் சுற்றுப்புறங் களிலும் லோகமானியர் வட்டம், சிவாஜி வழி கிருஷ்ண தேவர் ரஸ்தா கனக ரஸ்தா முதலியன பெயர் மாத்தி ரத்திலேயே நம்மனதில் நம் நாட்டுப் பண்டைவீரரை நினைப்பூட்டுகிறது. நம் நாட்டிலுள்ள முக்கியமான வீரர் மதாசாரியர் முதலியோரின் வழிகளையெல்லாம் அடக்கி யமர்ந்த இப் பந்தரை சர்வமதத்திற்கும் சர்வ கட்சியினருக்கும் பொதுவான ஒரு ஆலயமென்றே நாம் தொழுவோம். பிரதிநிதிகளுக்கு வேண்டிய சௌக ரியங்கள் வேண்டியவாறு அமைந்திருந்தன. ஒற்றுமை யும் அன்புமே உயர்ந்த நோக்கமாகக் கொண்டே சர்வகட்சிப்பிரதிநிதிகளும் பெல்காமின் காட்சியை எவ் வளவு களிப்புடன் அனுபவித்தாரோ அவ்வளவு பாரத சபை நிகழ்ச்சி நிரலையும் ஆதரித்தார்கள். வெகு நிதானமாய் சமாதானமாய் சாந்தமாய் திறமையுடன் மஹாத்மா நடவடிக்கைகளை இரண்டு நாட்களில் அனை வருக்கும் திருப்தி யேற்படும்படி முடித்த வாலாற்றை யுரைப்போம்.

மஹாத்மா காந்தி உ௭-உ முதலே பெல்காம் சென்று, மாறுதல் வேண்டாத கட்சியாளருடன் கலந்து பேசி, அவர்களை யொரு விதமாய் சமாதானப்படுத்தி எல் லாக் கட்சியினரையும் 'தேச நன்மைக்காக சபையிற் கலந்து உங்கள் யோசனைகளைச் சொல்லுங்கள்' என்று கூவியழைத்து, பெருந்தன்மையுடன் தாழ்ந்து,எல்லோ ருடைய அன்பையும் அடைந்த பின்னரே காங்கிரஸின் மூலஸ்தானமாகிய தலைவர் மேடையில் பாரத தேவி யின் ஆத்மசக்தி ஆணுருப் பெற்றதுபோல் விளங்கினர்.

கங்காதர தேசபாண்டேயின் வணக்கமுள்ள வரவேற்பு மொழிகளுக்குப் பின்பு ஸ்ரீமான் தாஸ் நேரு லாலாஜி சரோஜனி முகம்மதாலி சௌக்கத்தாலி இராஜகோபாலாசாரியார் பெசன்டம்மை முதலிய சீரியர் குழாத்திற்கு மேல் சந்திரன் போன்று சாந்தமாய் விளங்கும் மஹாத்மாவைக் கண்டு கடல்போன்ற அவ்வன்பர் சபை களிதுள்ளிற்று! "மஹாத்மாகீ ஜே" என்ற குமுதத்திடையே ஆரவாரமற்ற சாந்தரான மஹாத்மா 'நேயர்களே' என்றழைத்ததும் சபையோரின் நரம்புகளூடு ஒரு நேயவுணர்ச்சி பரவியது கண்கள் மஹாத்மாவையேநண்டன. காதுகள் அவருடைய திருவாக்குகளையே பருகின. தான் பேசிய ஒவ்வொரு மொழியாலும் மஹாத்மா சபையோரின் மனதை உயர்த்தி ஒற்றுமைப் படுத்தினர். கதர், இந்துமுஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை விலக்கல், மதுவிலக்கு, ஹிம்ஸை விலக்கு சத்தியாக்கிரக வெற்றி முதலியவையே அவர் உபதேசங்களின் சாரமென்பதை உலகம் அறியும். அந்நிய வஸ்திரங்களை விலக்குவது ஒவ்வொருவருடைய உரிமையும் கடமையுமாகும். இந்தியாவில் ஆற்று நீர் இருக்கும்போது அதை மதியாது அந்நிய நாட்டினின்று தண்ணீரை இறக்குமதி செய்து குடிப்பது எவ்வளவு பேதமையோ அவ்வளவு விதேசத்துணி வாங்குவதிலுமுண்டு. நமது கிராமத்து ஜனங்களுக்கு சுதந்திர வுணர்ச்சியைப் பரவச் செய்வதற்கு இராட்டினமே முக்கிய சாதனம். ஐக்கியமுண்ட சாலைகள் ஏற்படுத்துவதினினும் இராட்டின சங்கங்கள் கிராமங்களில் ஏற்படுத்துவது மிக்கப்பயன் தரும். லங்காஷேர் வர்த்தகம் கோடிக்கணக்கான இந்தியக் குடியானவரின் நாசத்தின் மேல் நாட்டப்பட்டிருப்பதால் அதை நான் நீதி விரோதமென்கிறேன். இந்தியாவின் முயற்சியால் இந்த அநீதி தடுக்கப்பட்டால் மனுஷ்ய வர்க்கத்திற்கும் வலி மிகுந்த ஆங்கில நாட்டிற்கும் இந்தியாவிற்கும் நன்மையுண்டாகும். கைராட்டினத்தின் மூலம் அன்னியத் துணிகளை பஹிஷ்கரித்தல் இராஜீய நிலைக்கு மட்டும் மிகுந்த அனுகூலம் செய்யுமென்பதல்ல. ஒவ்வொரு இந்திய ஏழையையும் தன் வலிமையை உணரச் செய்து நம் சுதந்திரக் கிளர்ச்சியில் முனைந்து வேலை செய்யச் செய்யும். நம் நாடு சுகமாய் ஜீவிப்பதற்கு அன்னிய ஆடையை விலக்க வேண்டியது இன்றியமையாதது. அமைதியான வழியில் சுயராஜ்ய மடைவதற்கு இதுவரை ராட்டினத்தினும் வேறு பலன் தரத்தக்க மார்க்கம் எனக்குத் தோன்றவில்லை.

உயிர் வாழ்வதற்கு மூச்சைப் போன்று இந்துமுஸ்லீம் ஒற்றுமை தேசிய வாழ்விற்கும் சுதந்திரமடையவும் அவசியம். சுயராஜ்யமடைய இந்துமுஸ்லீம் ஒற்றுமை எவ்வளவு அவசியமோ அவ்வளவு தீண்டாமையையொழிப்பதும் அவசியம். வைக்கம் சத்தியாக்கிரகிகள் நமக்கு வழி காட்டுகின்றனர். சாந்தமுடனும் உறுதியுடனும் அவர்கள் கிளர்ச்சி செய்வதே வெற்றிக்கறிகுறியாகும். கடவுளின் அருள் அவன் படைப்பினங்கள் அனைத்திற்கும் உரியதே. அது ஒருவனுக்குமட்டும் பாத்தியமல்ல. ஒரு இனத்தாரை மட்டும் கீழ்ச்சாதி யென்று ஒதுக்கி வைக்கும் மதம் தாழ்ந்துவிடும். அது கடவுளுக்குப் பொறுக்காது. கிருஷ்ணன் கந்தையுடுத்த சுதாமாவை இணையற்ற அன்போடு கௌரவப்படுத்தினன். அன்பே மதத்திற்கும் தியாகத்திற்கும் அடிப்படை. ஆதலின் சுயராஜ்யத்திற்குத் தடையாயிருக்கும் தீண்டாமையை ஒழிக்க வேண்டும். கட்குடியையும் அபின் வியாபாரத்தையும் ஒழிக்கவேண்டியது மற்றொரு முக்கியமான விஷயம். இவற்றால் அடையும் தீய வரும்படியினின்று நமது குழந்தைகள் படிப்பது நம் பெருமைக்குத் தாழ்வன்றோ? இதை முற்றிலும் ஒழிப்பதற்கு நாம் சுதந்திரமடைய வேண்டுவது அவசியம்.

தேசீயப் பள்ளிக்கூடங்கள் நமது சுதந்திரத்திற்கு மிக்க அவசியமானவை. ஏனெனில் அதில்தான் நமது சுதந்திரத்தின் முதற் கருவிகள் தயார் செய்யப்படுகின்றன. இப் பள்ளிகளில் படித்துவரும் மாணவர்களைச் சுற்றியே நமது வருங்கால க்ஷேமம் இருக்கிறது. மகாணப்பொருள் முதலில் இதற்காகவே செலவிடப் படவேண்டும். இத்தகைய பள்ளிக் கூடங்கள் இந்துமுஸ்லீம் ஒற்றுமையைப் பெருக்க வேண்டும். தீண்டாமை ஒரு அவமானமெனும் உணர்ச்சியைப் பெருக்க வேண்டும். நூற்றலும் நெய்தலும் நன்கு வல்ல வாலிபர்களைத் தயார்செய்ய வேண்டும். அனைவரும் நிலயநர்களாக இருக்கவேண்டும். சுயபரிக்ஷையையும் அறிந்து தானியையும் முதன்மையாக விருத்தி செய்ய வேண்டும்.

தீர்மானங்களின் சுருக்கம்

இவ்வாறு மஹாத்மா பேசி சுயராஜ்யத்திட்டமொன்றும் சொல்லியிருக்கிறார். அதில் முக்கியமாக பன்னிரண்டு விஷயங்களை வற்புறுத்தி யிருக்கிறார். ஓட்டுக் கொடுக்கும் சுதந்திரம் ஒருவன் காட்டும் தேக உழைப்பைப் பொருத்ததேயல்லால் கல்வியையும் செல்வத்தையும் பொருத்ததல்ல. தேவையளவே ராணுவத்தை வைத்துக்கொண்டு செலவை மிக சுருக்க வேண்டும். பஞ்சாயத்தார் மூலம் நியாய விசாரணை நடத்தி நடவடிக்கை முறைகளை இலகுவாக்கி நீதி பரிபாலனச் செலவைக் குறைக்க வேண்டும். சுங்சாவதின் முதலியவற்றினின்று வரும் தீய வரும்படியை அரசாங்கம் நிறுத்திவிட வேண்டும். தேசத்தின் நிலைமைக்குத் தக்கபடியே ராணுவ நிர்வாக வேலைக்காரர்களுக்குச் சம்பளம் குறைத்துக் கொடுக்க வேண்டும். பாஷை வாரியாக மகாணங்களைப் பிரிக்க வேண்டும். பிறநாட்டாருக்குக் கொடுக்கப்பட்ட தனி வியாபார உரிமைகளைச் சோதித்துத் தகுதி பார்க்கவேண்டும். மத்திய அரசாங்கத்தினின்று ஒரு விதமான தடையுமின்றி இந்திய மன்னர் தங்கள் பதவியை வகிக்க உறுதி கூற வேண்டும். வகதேசாதிகாரங்களை ரத்து செய்ய வேண்டும்: உயர்ந்த உத்தியோகங்களைத் தகுந்தவர்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். ராணுவ நிர்வாக உத்தியோகங்களுக்கு ஏற்பட்ட பரீட்சைகள் இந்தியாவில் நடைபெற வேண்டும். பிற மதத்தினர் பால் மதிப்புடன் ஒவ்வொரு மதத்தின் சுதந்திரத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தந்த மகாண பாஷைகளிலேயே சட்டசபை கச்சேரி நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும். முடிவான தீர்ப்பு மன்றங்களின் பாஷை ஹிந்துஸ்தானியாகவிருக்க வேண்டும். சர்வதேச ராஜதந்திரத்திற்கானபோக்குவரத்துக்கள் ஆங்கிலத்தில் நடைபெறலாம். என்று அழகாகவும் கோர்வையாகவும் ஆழ்ந்த யோசனைகளுடனும் சுயராஜ்ய திட்டத்தைச் சொல்லிவிட்டு மஹாத்மா வங்காள அடக்கு முறையைக் கண்டித்தார். அக்காலியரின் வீரத்தை மெச்சினர். எகிப்து கினியா, பிஜி முதலிய பிரச்னைகளைப்பற்றிப் பேசி முடியில் வரும் உறுதி மொழி [illegible] மொழிவை முடித்தார்.

பாரதசபை இரண்டே நாள்தான் நடக்கிறதும் அதிற் செய்யப்பட்டுள்ள தீர்மானங்கள் வெகு முதன்மையாக [illegible] மாறுதல் வேண்டா கட்சியாரையும் ஸ்வராஜ்ய கட்சியாரையும் அத் தீர்மானங்கள் ஒன்று படுத்தின. கல்கத்தா உடன்படிக்கையை வெகு தைரியத்துடனும் கௌரவத்துடனும் உறுதி செய்து கட்சியாளர். ஒருவரையொருவர் [illegible] தேசீய வேலையை [illegible]த்துடனும் உறுதியுடனும் ஒரே நோக்கத்துடனும் செய்ய ஏற்பாடு செய்தது.

"உங்கள் மனதைச் சுத்தம் செய்யுங்கள்! தரும சிந்தனை பூணுங்கள்! உங்கள் மனதை கடல் போல் விரியாக்குங்கள்!" என்று சொன்ன மகாத்மாவின் ஆவேச மொழிகள் சபையோரின் நெஞ்சைத் திறந்து அன்பையும் பெருந்தன்மையையும் பாய்ச்சியன. சிறுமையை ஓட்டின. ஒவ்வொரு அங்கத்தினரும் ௨௦௦௦ கஜம் நூற்சந்தா செலுத்தவேண்டியதை சபையார் ஒப்புக்கொண்டதைப்பற்றி களிக்கிறோம்.

ஒவ்வொரு அங்கத்தினரும் கதராடை யுடுத்தவேண்டிய கட்டாயத்தையும் மாதம் ௨௦௦௦ கஜம் நூல் அனுப்ப வேண்டியதையும் மகாசபை அங்கீகரித்திருக்கிறது. நூல் சந்தா செலுத்தாதவர்களுக்கு பாரதசபையில் ஓட்டுக் கொடுக்கும் பாக்கியம் இல்லை. கதர் உற்பத்தியைக் குடிசைத் தொழிலாக்கவேண்டும். வியாபாரி அந்நிய நாட்டு நூலையும் துணியையும் இனி வாங்க மறுக்க வேண்டும். மதத்தலைவர்கள் கதரணிந்து மற்றோரையும் கதரணியத் தூண்டவேண்டும். ஸ்வராஜ்ய கட்சியை பாரதசபையின் ஓர் பாகமாக ஏற்படுத்தியிருக்கிறது. அக்கட்சித் தலைவர்களின் தியாகம், முயற்சி, ஊக்கம், இவைகளைக் கருதி அவர்களை பாரதசபையின் சார்பாக சட்டசபையில் வேலை செய்ய நம்பிக்கையுடன் தேசம் எதிர்பார்க்கிறது. மாறுதல் வேண்டாக் கட்சியார் சட்டசபைக்கு வெளியிருந்து வேலை செய்யலாம். சிற்சில தீர்மானங்களைச் சில தலைவர்கள் மறுத்தனரேனும் கல்கத்தா ஒப்பந்தம் நூல் சந்தா முதலான முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பெசண்டம்மை தான் மாதம் ௨௦௦௦ கஜம் அனுப்ப முடியாவிடினும் தினம் அரைமணி நேரம் நூற்பதாக ஒப்புக்கொண்டு விட்டார். நூல் சந்தா விஷயமாக ஸ்ரீ படேல், லாலா லஜபதி முதலியவரும் இளக்கமாகப் பேசினரேனும் இந்தியாவின் பொதுஜனவுணர்ச்சி அதற்கு அநுகூலமாகவே யிருந்தது.

மௌலானா முகம்மதலி கதரைப்பற்றி பேசிய உருக்கமான மொழிகளில் "வழக்குள்ள பழமை கழிந்தது! உழைப்புள்ள புதுமை பிறந்திருக்கிறது என்று சொன்னதே பெல்காம் மகாநாட்டின் இறுதியான பலன்! சகிப்பும் ஒற்றுமையும் உழைப்பும் கொண்டு மகாத்மா அனுபவித்துச் சொல்லும் அரிய திட்டங்களை நிறைவேற்ற பராசக்தி நமக்குத் துணைபுரிவாளாக!

160201
600 008

புஸ்தக விமரிசனம்

ஜனுப் தாவுத் ஷாவின் வெளியீடுகள்

தாருல் இஸ்லாம் பத்திராதிபரான பா.தாவுத்ஷா, அவர்களால் எழுதப்பட்ட அரிய புத்தகங்களை வரவேற்கிறோம். 'நாயக வாக்கியங்கள், நபிநாயகமும் நான்கு தோழர்களும்' 'இஸ்லாம்' 'ஜவாஹிருல் புர்கான் இரண்டு பாகங்கள்) முதலிய நூல்களை வெளியிட்டு ஜனுப் தாவுத்ஷா தமிழருக்கு அரிய விருந்தளித்துள்ளார்.

நாயக வாக்கியங்கள் ரசூலல்லாவின் சறுக திருவாக்குகளடங்கியது. படிக்கப்படிக்க மனதிற்கு சாந்தமளிக்கக்கூடியது. நாயகவாக்கியங்கள் இரண்டு பாகங்களும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டும் ஒவ்வொரு தமிழர் கைகளிலும் அவசியம் இருக்க வேண்டியது. நபிநாயகத்தின் திருச்சரிதையையும் அபூபக்கர் உமர்பாரூக் உஸ்மான் அலீ முதலியோரின் தூய வாழ்வையும் மதக் கடனை செய்த திறமையையும் விளக்கி நபிகள் நாயகமும் நான்கு தோழர்களு' என்ற நூல் படிப்போருக்குப் பல நீதிகளைக் கற்பிக்கக் கூடியதாயுள்ளது. இஸ்லாம் என்ற திருநூல் இஸ்லாமிய மதத்தின் தத்துவங்களையும் இஸ்லாமியர் செய்யவேண்டிய தொழுகை முறை நோன்பு குர்ப்பாண் முதலியவற்றின் விரிவையும் தொழுகைக்குரிய சிறு ஸூராக்களையும் அடக்கிச் சித்திரப் படங்களுடன் கூடியது.

ஈமான் என்ற நூலில் மதம் இஸ்லாம் இல்வாழ்வு ஈமானின் எழு அமிசங்கள் முதலியவற்றைத் தெளிவாகக் கூறுகிறார். முஸ்லீம்களின் முன்னேற்றம் என்ற நூல் ஒரு சிறந்த ராஜீய நூலாகி முகம்மதியருக்கும் ஐரோப்பியருக்கும் உள்ள சம்பந்தங்களை விளக்குகிறது. தாஜ்மஹால் என்ற நூல் சித்திரப் படங்களுடன் உலகின் அற்புதங் ளிலொன்றான தாஜ்மஹாலின் பெருமையைப் பேசுகிறது.

ஜிவாஹிருல் புர்கான் திருக்குரானில் தமிழ் மொழி பெயர்ப்பு. இதன் இரண்டு பாகங்களும் தமிழுலகிற்குப் புதிதாய் அளிக்கப்பட்ட ரத்னங்களாகும். குரான் திருவாக்குகளை தெள்ளிய தமிழில் மொழி பெயர்த்து அதற்கு விரிவான வியாக்கியானமும் விடுத்த இந்நூலெழுதிய பெரியாரை அன்புடன் ஆதரிக்கத் தமிழ்நாட்டார் கடமைப்பட்டிருக்கிறார்கள். இத்தைய அரும் பெரும் முயற்சிகளுக்கு நல்வரவு கூறுகிறோம்.

ஜனுப்தாவூத்ஷாவின் நூல்களை தமிழர் அவசியம் பார்க்கவேண்டியது. அவற்றைப் படிப்பதே நம் நாட்டிற்கு அவசியமான இந்துமுஸ்லீம் ஒற்றுமைக்கு ஒரு பெரும் சாதகமாகும் என்பது எமது எண்ணம். மேற்சொன்ன புத்தகங்கள் சென்னை தாருல்இஸ்லாம்புத்தகசாலையில் கிடைக்கும்.

விலை விபரம்	ரூ.	அ.	பை.
௧. ஜவாஹறுல் புர்கான் முதற் பாகம்	௧	௮	0
௨. ஷை இரண்டாம்பாகம்	௧	௮	0
௩. நாயக வாக்கியம் ...	0	௬	0
௪. ஷை இரண்டாம்பாகம்	0	௮	0
௫. இஸ்லாம் ...	0	௧௪	0
௬. நபிகள்நாயகமும் ௪ தோழர்களும்	௨	0	0
௭. ஈமான்	0	௪	0
௮. முஸ்லீம்களின் முன்னேற்றம்	0	௬	0
௯. தாஜ் மஹால்	0	௪	0

காந்தி பிள்ளைத் தமிழ்

ஆக்கியோன் ஸ்ரீமான் ராய— சொக்கலிங்கன் காரைக்குடி. விலை அணு பத்து.

பிள்ளை போன்று தெளிவுள்ள மனதையுடைய ஆத்ம சக்தி வீரரான மஹாத்மாவுக்குப் பிள்ளைத் தமிழ் பாடித் தமிழ் நாட்டிற்கு அரிய பாத்தொண்டுசெய்த திருவாளர் ராய சொக்கலிங்க மவர்களின் அரிய தமிழன்பைப் போற்றுகிறோம். இவ் வரிய நூல்காந்திப்பிள்ளையைப் பத்து பருவங்களில் இனிய நடையும், விழுமிய கருத்துமுள்ள பாக்களால் பாடுகிறது. இதன் செந்தமிழ்நடை போற்றத் தக்கது. இச்சீரிய நூல் தமிழுக்கோர் அணியாகுமென்பது எமது எண்ணம்.

THE KURAL

OR

The Maxims of Tiruvalluvar

Translated by

Acharya V. V. Subrahmanya Aiyar.

Second Edition, thoroughly revised and enriched with a large number of footnotes and otherwise.

The difficulty of unravelling the sense out of the cryptic through the magnificent commentary of Parimelalakar can be conquered by the use of this translation which is the only one that preserves all the force and sublimity of the original.

This edition is beautifully bound in cloth and is ready for sale.

Price Rs. 5. V.P.P. charges 8 as.

For copies apply to:—

The Bala Bharati Bookshop,

Sheramadevi.

ஓம்

தமிழ்க் குருகுல வித்யாலயம்

சேரமாதேவி

—:(o):—

புதிய கல்வி வருஷம், தைமீ ௫௳ ஆரம்பிக்கிறது.

ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறைகளில் இலக்கிய ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப் படுகின்றனர்.

கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி, முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கும்

நெசவும் தச்சும் தைமீ முதலே கற்பிக்கப்படும். பயிர்த்தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக!

விவரங்களுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுக.

ஆசாரியன்.

சேரமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று ரா. அனந்தகிருஷ்ணனால் பிரசுரிக்கப் பெற்றது